Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් பெப்.03-09,2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 445

## மாறிவரும் மனநிலைகள் அச்சுறுத்தப்படும் அமைதி

## என்ன நடக்கப் போகிறது?



## உனது படைப்பில் யானை

# ஆன்மீகம்



இறைவா, அழகில்லாத உருவங்களை ஒதுக்காதீர்கள். அவர்களுக்குள் ஆத்மா அலை மோதிக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டவா யானையைப் படைத்தாய். அந்த யானையைப் படைத்த நீயே மாணிக்கவாசகரைக் கொண்டு திருவாசகத்தில் உன்னையே இரண்டு கை யானை என்று சொல்லவும் வைத்தாய். அது மட்டுமா இறைவா! கம்பனையும் படைத்து இராமாயணத்தில் இராமனை இரண்டு கையுடைய யானை என்றும் கூறி வைத்தாய். (இரு கை வேழத்து இராகவன்) இறைவா இவர்கள் உன்னைத்தான் இரண்டு கைகளைக் கொண்ட யானை எனப் போற்றுகின்றனர். அது உனக்கு மட்டும்தான் தெரியும். உன் படைப்பே ஒரு விந்தை தான் அப்பனே.

யானையை படைத்த நீ அதன் மீது ஏறி அமர எவரும் ஆசைப்பட்டால் அதன் காலைப் பற்றிக் கொண்டால்தான் முடியும் என்பதைக் கூறவா யானைக்கு கால்களை படைத்தாய் யானையின் மீது ஏற வேறு மார்க்கமே கிடையாது. யானைக்கு இயல்புதாள் (கால்) பற்றுவேரைத் தலைக்கு மேல் தூக்கிக் கொள்வது அது போலத்தான் உனது திருத்தாள்களையும் பற்றினோரை மட்டுமே அவன் வாழ்க்கையில் தலைக்கு மேல் தூக்கி விடுவாய் என நம்புகின்றேன். அதனால் தான் மாணிக்கவாசகரும், கம்பனும் உன்னை இருகையானை என்றனரோ தெரியவில்லை.

ஏ மானிட ஜாதியே! உன்னோடு பேசும் அவன் யார் தெரியுமா? புதிய புதிய படைப்புக்களை தினந்தோறும் படைக்கும் ஒரு படைப்பாளி. அவனுக்கென தனி வரலாறு இல்லை.

சிலாபம்-க.பொ.புஷ்பராஜா.

## நரகில் ஒரு கூட்டத்தார்

நாம் செய்யும் கெட்ட காரியங்களில் புறம் பேசுதலும் ஒன்றாகும். இதனால் சண்டைகளும், மனஸ்தாபங்களும் ஏற்படும். மற்றவரின் மனம் வேதனைப்படும். மற்றவரின் மனம் வேதனைப்படும்படி பேசுவதை இஸ்லாம் தவிர்த்துள்ளது. ஒரு மனிதனின் குறையை அவன் இல்லாத நேரத்தில் பேசுவது புறம் பேசுதலாகும்.

நாயகம் (ஸல்) அவர்கள் மிஃறாஜ் சென்ற பொழுது அல்லாஹ் அவர்களுக்கு சுவர்க்கத்தையும் நரகத்தையும் காட்டினான், நரகத்தில் சில மனிதர்கள், இறந்த மனிதர்களின் இறைச்சியை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ட நபி (ஸல்) அவர்கள். "இந்த மனிதர்கள் யார்? இவர்கள் ஏன் இப்படியான தண்டணையை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.?" என்று கேட்டார் ஜிபரில் (அலை) அவர்கள், "இவர்கள் உலகத்தில் புறம் பேசியும் ஒற்றுக்கேட்டும் திறிந்தவர்கள் என்று பதிலளித்தார்கள்." இதனால் நபி (ஸல்) அவர்கள், "புறம் பேசுவது தனது இறந்து போன சகோதரனுடைய இறைச்சியை தின்னுவதற்குச் சமனாகும்." என்று போதனை செய்தார்கள்.

எஸ்.ஏ.ஜவாத்-ஏறாவூர்-02.

## மேய்ப்பன்

இந்த மக்கள் பொல்லாதவர்கள், கலகக்காரர்கள், வணங்காக் கழுத்துள்ளவர்கள், இந்தப் பணிவேண்டவே வேண்டாம் நிம்மதியும் இல்லை சந்தோசமும் இல்லை, என்று கூறி சிலர்; மேய்ப்புப் பணியைவிட்டு பணம் சம்பாதிக்க கூடியதும், சொகுசானதுமான தொழில்களில் அமர்ந்து வாழ்ந்து வருவதைக் காணுகின்றோம்.

இவர்கள் பட்டம், பணம், புகழ் என்ற உலக கௌரவங்களினால் இறுமாப் படைந்து தான் சொல்வதெல்லாம் சரியானது. செய்வதெல்லாம் வாய்க்கும் என்ற எண்ணத் தோடு செயற்பட்டு மக்களின் விசனத்தினால் வெளியேற்றப் பட்டவர்கள்.


இவர்களால் மக்கள் இடறல் அடையவும், பொருளாசை உள்ளவர்களாக மாறவும், ஆன்மீக வாழ்வு குன்றிப் போகவும் வழி ஏற்பட்டு விடுகின்றது.

ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் (தீமோ 6:9)

எனவே ஆஸ்தியும், சம்பாத்தியமும் ஆடம்பரமும், ஆனந்தமும், அனுபவிக்க பிறந்த ராஜாக்களாய் அன்றி; அழிந்து போகும் ஆத்துமாக்களை ஆண்டவர் இயேசுவின் வழியிலே நடத்த நல்ல மேய்ப்பர்களாக என்றும் செயற்படுவோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன்-துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.444



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.02.2002

கவிதைப் போட்டி இல.445
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.442

**பரிசுக்குரிய கவிதை**

### (வா) தேடல்

பட்டனையழுத்தியதும்
பட்டென..
காட்டி விடுவாயாமே?!
நாதியற்று;
வீதியில்-நானிற்க
வித்திட்ட...
விஷமிகளை(யும்)
எங்கே காட்டு
பார்க்கலாம்...?!

செல்வி:-மும்தாஜ்-
ஏ.முத்தலிப்,அனுராதபுரம்.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### தனிமையில் இனிமை

குழந்தாய் உன் விரலுக்குள்
குருவே வந்து அமர்ந்திட்டார்
குழப்பம் ஏது குதூகலிக்க
கொம்பியூட்டர் அறிவுக் களஞ்சியம்
கொடுத்திடுமே உனக் கறிவு.

பா.பாலகணேஷன்-ஈஸ்றஹாம்-லண்டன்.



### துணிக

கற்க கசடறக் கற்க
கற்பவை கற்றபின்
துணிக...
உரிமைகள் பெறுவதில்
தம்மினத்துக்குத் தக.

ஏ.எச்.எம்.மௌஜூத்-
ஹிஜ்ராபுரம்.

### உதவாது

திரை காட்டும்
சமாதானம்
தரைக்கு உதவாது

பாத்திமா மிஷாரா-
அக்குறணை-08.

### பிளிஸ் சொல்லுங்களே!

மண்ணெடுத்து விளையாடி!
மணல் வீடு தான்கட்டி!
களிமண்ணால் பொம்மைசெய்த,
காலங்கள் மாறிப்போய்!
கம்பியூட்டர் கல்வியினை!
கருவினிலே கற்றுவந்து!
ஒத்திகைப் பார்க்கும் இந்த!
ஒய்யார மழலை யார் மகனோ?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### அன்றும்! இன்றும்!!

ஓடி விளையாடென்றான்
பாரதியன்று!
இன்றோ...
இருந்துகொண்டே
என்னைப் பார்த்து
உன் ஆரோக்கியம் கெடு
என்றது-கணனி பாரதி!!

தாராபுரம் நிலாம்-கரம்பை-பாலாவி.

### வைரஸ்

கணணியில்;
கண்டுபிடிக்கின்றாயா?
நம் நாட்டை
நாசப்படுத்துகின்ற!!..
வைரஸ்ஸினை!

சு.சுதர்சன்-வதிரி.

### வளர்ச்சி

அன்று
இளமையிற்கல்வி
சிலையிலெழுத்து!
இன்று
இளமையிற் கம்பியூட்டர்
தலையிலெழுத்து!

அ.அச்சுதன்-சேனையூர்.6.

### உண்மை முடிவ

கடந்த தேர்தலின் உண்மை
முடிவை திரட்டுகின்றான்
வாக்கு எண்ணிக்கை
பட்டியலையல்ல,
வதைக்கப்பட்டு வாய்க்கரிசி
போடப்பட்ட
அப்பாவிகளின் பட்டியலை.

அஸ்ரீன் அனீபா-மாளிகாவத்தை.

### பூமியை எழுப்புவதற்கா

மார்பகங்களைப் பிடித்து
பால்குடிக்கும் வயதில்
கணனியைப் பிடித்து
கற்றுக் கொள்வது
எதற்குப் பாலகனே?
தூங்கிக் கொண்டிருக்கும்
பூமியை எழுப்புவதற்கா?

ப.விநாயகமூர்த்தி-மஸ்கெலியா.

### நீ தேடுவது என்ன?

ஆட்சி மாற்றத்தால்
அமைதியை எதிர்பார்த்து
சமாதானம் தேட-எம்
கண்கள் விரிகையில்
சின்னஞ்சிறு பிஞ்சே
இணையக் கணனியில்-நீ
தேடுவது தான் என்ன?

க.சுதர்சனா-வவுனியா.

## மார்க்கண்டேய் முரசிற்கு மணி மகுடமொன்று...!

தெவிட்டாது... தெள்ளு தமிழிலே இளமையின் துள்ளல் நடையோடு, காத்திரமான படைப்புக்களை அள்ளி வழங்கி எமது சிந்தனையைக் கிள்ளிவிட்டுக் கிளறிவிடும் முரசே... முத்தாரமே...

முகப்பில் கண் குத்தி உள்ளே... முழுசாய் சல்லடை போட்டால் முடிவில்... முகமும் அகமும் மட்டுமே ஏதோவோர் இன்பத்தைச் சுகித்து, புரியாத வோர் திருப்தியில் திருப்திப்படுவதை உயிர்த் திராவகம் உணர்த்தும்..

அற்புதம் அமரராகிவிட்ட பின்பும்கூட இத்தனை அற்புதங்களா உன்னில்... என என்னை நானே கிள்ளிப் பார்த்து நிஜத்தை உணருவேன்...!

அர்த்த புஷ்டியான அரசியல் கட்டுரைகளில் குளித்து மனசு அதிகம் 100 டிக்கிரி ஜீரமடிக்கையில்... மெல்லிய தென்றலாய் சாமரம் வீசி, விசிறிவரும் இலக்கிய நயம்!

தொடர்கதைக் குழிகளுக்குள் விழுந்து எழ எத்தனிக்கைகளாலும்கூட.. நிஜம் என்னை விட்டும் அன்னியமாகும்...'

கவிதைகளுக்குள் அமிழ்ந்து எழுகையில் நிதர்சனமாய்... துலாம்பாரமாய் கவிதையின் உட்பொருள் கண் முன்னே காட்சி தருவதாய் நிஜங்கள் நிறைந்த ஓர் பிரேமை...

வலுக்கட்டாயமாய் வார்த்தைகளை சிறைப் பிடித்து உன்னை வர்ணிக்க எண்ணுகையில்... வலுவில்லை- வார்த்தைகளுக்கும், எனக்கும்...! குடத்துள் விளக்காய் முடங்குபவனல்ல நீ-குன்றில் தீபமாய் ஒளிர்கின்றாய் நீ...! வளர்க! வாழ்க!!


இ.ஃ.து தாராபுரம் நிலாம்-பாலாவி.

## வாசகர் சாலை

என் நேசமான முரசுக்கு!

எனது புதுவருட வாழ்த்து முடிவோடு வசந்த காலத்திற்கு எனது முன்கூட்டிய வாழ்த்துக்கள் பல நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் சுகமானவையே. குறிப்பாக என் இதயத்தை வருடுகின்ற 'தேன்கிண்ணம்', 'ஆன்மீகம்', 'முரசம்', 'நில்-கவனி-முன்னேறு', 'சிறுகதைகள்', 'அரசியல் தொடர்', 'ஸ்போர்ட்ஸ்', 'இலக்கிய நயம்', 'சிந்தியா பதில்கள்', 'பாப்பா முரசு', 'அதிரடி தகவல்கள்' இவைகளோடு 'கவிதைப்போட்டி', அனைத்தும் சபாஷ். உன் பணி தொடர நானும் வாழ்த்துகின்றேன்.

மூக்கன் புனிதன்-
கோணகலை, பசறை.




என் இனிய முரசே,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் மிக, மிக சிறப்பானவை. குறிப்பாக 'அண்டை மண்டலத்தில்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'வாரம் ஒரு வார்த்தை', 'சிறுகதைகள்', 'சிந்தியா பதில்கள்' அருமையிலும் அருமை. உனக்கு நிகர் நீயே. என்றும் உனது பணி தொடர வாழ்த்துகிறேன். வாழ்க வளமுடன்..

ரி.நிரஞ்சன்.

என் உள்ளத்தை கொள்ளை கொண்ட முரசே நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பரிலும் சூப்பர். அதிலும் நான் படித்து சுவைப்பது 'அதிரடி அய்யாத்துரை', 'தேன்கிண்ணம்', 'பாப்பா முரசு', 'வாரம் ஒரு வார்த்தை' உன் பணிகள் தொடர என்றும் என் வாழ்த்துக்கள். நன்றி வணக்கம்

ஆன் சஜிதா புஸ்பராஜா-நீர்கொழும்பு.

வெளிநாட்டிலில் உள்ள வாசகர்கள் கவிதைப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமாயின் ஃபெக்ஸ் மூலமாகவோ ஈ-மேயில் மூலமாகவோ தமது கவிதைகளை அனுப்பி வைக்கலாம். உள்நாட்டு வாசகர்கள் தபாலட்டை மூலம் மாத்திரமே அனுப்பவேண்டும்.

- ஆசிரியர்-

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## "நிதி மோசடி இடம்பெறவில்லை" பண்டாரவளை த.ம.க.அதிபர்

பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் நிதி மோசடி இடம்பெற்றதாகவும் கல்விச் செயற்பாடுகளில் பல்வேறு குறைகள் நிகழுவதாகவும் அந்தப் பிரதேச வாசகர் ஒருவரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் கடந்த இருவார முரசில் வெளியாகியிருந்தது.

அந்த செய்திகள் தொடர்பாக குறிப்பிட்ட பாடசாலையின் அதிபர் எஸ். கருப்பையா நீண்ட விளக்கங்களுடனான கடிதம் ஒன்றை முரசுக்கு அனுப்பியிருக்கிறார். அவரது கருத்துப்படி பாடசாலை நிருவாகம் சிறப்பாக நடக்கிறது என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

அதிபர் அனுப்பிய கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:-

3ம் 4ம் வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் இல்லையென்பது தவறானது. காரணம் உரிய ஆசிரியர் பிரசவ லீவில் நின்ற வேளை, தொண்டராசிரியர்கள் அவ்வகுப்பில் பதிற்கடமையாற்றியுள்ளமை நோக்கற்பாலது. மேலும் பிரசவகால லீவென்பது தவிர்க்க முடியாததென்பதும், அரச அங்கீகாரம் பெற்ற விடயமென்பதும், நாம் கவனத்திற்கொள்ள வேண்டியவை.

அடுத்ததாக 2002ம் ஆண்டிற்கான மாணவ அனுமதியின்போது நன்கொடை பெற்ற விடயம், முற்றிலும் கல்வித்திணைக்கள சட்ட திட்டங்களுக்கேற்ப உரியவாறு ரசீது வழங்கி நடைமுறைப் படுத்தப்பட்டமை, அனுமதி பெற்ற மாணவர்களின் அனைத்துப் பெற்றோர்களுமே நன்கறிந்த விடயம். அத்துடன் இந்நன்கொடைப்பணி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாகவே நிகழ்த்தப்பட்டதென்பதை இங்கு குறிப்பிடுதல் சாலப்பொருந்தும். எனினும், அனுமதியான மாணவர்களின் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உரிய பெற்றோர்களிடம் அவரவர் விரும்பிக் கொடுத்த நிதி மட்டுமே நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதை இங்கு குறித்திடல் வேண்டும். அத்துடன் அனுமதிப்பணமாக மேலதிகமாக இருநூறு ரூபாய் (200/-) நாம் வசூலிக்கவில்லையென்பதையும் அது தவறான கருத்தென்பதையும் இங்கு நான் விசேடமாகக் கோடிட்டுக்காட்ட வேண்டியுள்ளது.

மேலும் இன்னும் எமது எதிர்கால வேலைத்திட்டங்கள் பல செயற்படுந் தறுவாயில் இருப்பதால் அவற்றிற்கும் மேற்குறித்த நிதியே பயன்படுத்தப்படவுள்ளதென்பதும் சற்றுப் பொருத்திருந்து பார்க்க வேண்டிய உண்மை.

மற்றும் அழகுசாதன விற்பனை பற்றிய விடயம் எமது கல்லூரி ஆசிரியர்களுடன் தொடர்பு படுத்தப்பட்டிருந்தமை எவ்வித உண்மையுமற்ற செய்தியாகும். இச் செய்தியை எழுதிய மேற்குறித்த நபர் எமது நகரத்தில் அழகுசாதன விற்பனை நிலையமொன்றை நடாத்தி வருவதால் அதீத இலாபப் போக்கை எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், அவர் எதிர்பார்த்த அளவு விற்பனை மேம்பாட்டை அடைய இயலவில்லைப் போலும்; அதாவது அவரது வியாபார நிலையத்தில், "எமது ஆசிரியர்கள் அழகு சாதனப்பொருட்களை நுகர்வதில்லை என்று நினைக்கிறேன் அதனால் அவருக்கு ஆசிரியர்கள் மீதான மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கலாமோ?" என எண்ணத்தோன்றுகிறது. (வியாபார நிலையம் எமது பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ளது.)

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# பெப்ரவரி 24க்கு முன்னர் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யலாமென பாலசிங்கம் நம்பிக்கை

## புலிகளின் சில நிபந்தனைகளை ஏற்பது தொடர்பில் அரச தரப்பு தீவிர சிந்தனை

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நிரந்தரப் போர் நிறுத்தம் குறித்த ஒப்பந்தம் பெப்ரவரி 24ம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்படலாம் என்று புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் திங்களன்று தெரிவித்திருக்கும் அதேவேளை நிரந்தர போர் நிறுத்த காலத்தின்போது அரச தரப்பு கடைப்பிடிக்கவேண்டும்என புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகள் தொடர்பில் பாதுகாப்பு உயர்மட்டத்தில் முரண்பட்ட கருத்து நிலவுகிறது.

போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் போது படைகளை முகாம்களுக்குள் முடக்கிவைக்கவேண்டுமென்றும் ரோந்து நடவடிக்கைகளை குறிப்பாக கடற்படை ரோந்துகளை முற்றாக நிறுத்த வேண்டுமென்றும் புலிகள் தரப்பில் இருந்து நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பில் அரசாங்க தலைவர்களும் பாதுகாப்பு உயர் மட்டமும் இருவேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

கடல் ரோந்துகளை நிறுத்தினால் ஆயுதக்கப்பல்களை புலிகள் வசதியாக தருவிப்பார்கள் என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி இந்த நிபந்தனைக்கு உடன்பட வேண்டாமென சிலரால் அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது. எவ்வாறெனினும் இது குறித்த இறுதிமுடிவு எடுக்கப்படாத நிலையில் திங்கட்கிழமை நோர்வே தூதுக்குழுவுக்கும் அன்ரன் பாலசிங்கத்துக்குமிடையில் லண்டனில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கும் அன்ரன் பாலசிங்கம் 24ம் திகதிக்கு முன்னர் நிரந்தர யுத்த நிறுத்தம் குறித்த இரு தரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடக்கூடியதாக இருக்குமென்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். புலிகளின் கருத்தை பெற்றுக்கொண்ட நோர்வே தூதுக்குழு அடுத்த ஓரிரு நாட்களில் கொழும்புவர இருக்கிறது என தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவருக்கு பிடிவிறாந்து

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவர் நிஹால் கருணாரத்னவை கைது செய்யுமாறு தெல்தெனிய நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின் போது மத்துரட்ட பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவை கொலைசெய்ய ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த சிலர் முயற்சி செய்தனர் என்ற குற்றச் சாட்டின் பேரிலும் வேறு சில வன்முறை சம்பவங்களில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அந்த அமைப்பின் தலைவர் என்ற வகையிலுமே நிஹால் கருணாட்ணமீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் விபச்சார விடுதி நடத்துபவர்களுக்கு நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

## நிறுத்தாவிடில் கடுமையான தண்டனை என்கிறார்

சட்டமும் நீதியும் முடங்கிக் கிடந்த வவுனியா மாவட்டத்தில் 75 வீதமான சட்டவிரோதச் செயல்கள் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட நீதிபதி, இளஞ்செழியன் வவுனியாவில் சமூகச் சீர்கேடுகளுக்குக் காரணமாகச் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்துள்ளார். வவுனியா நகரில் உள்ள விடுதிகளின் உரிமையாளர்கள், முகவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துப் பேசியபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

வவுனியாவில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இப்பகுதியில் மக்களுடைய கலாசாரத்தின் புனிதத்தன்மையைக் கெடுக்கும் வகையில் செயற்படுபவர்களை அனுமதிக்க முடியாது. கலாசாரப்புனிதத்தைப் பாதுகாத்துப் பேணி நடக்க வேண்டியது, இப்பகுதியைச் சேர்ந்த அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வவுனியாவில் உள்ள பல விடுதிகள் விபசார நடவடிக்கைகளுக்குத் துணைபோவதாக நீதிமன்றத்திற்குப் பல முறைப் பாடுகள் கிடைத்திருப்பதைச் சுட்டிக் காட்டி, இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

நீதிமன்றத்திற்குச் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்து அவற்றுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நீதிபதியும் குற்றச் செயலுக்கு உடந்தையானவராகக் கருதப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். எனவே, நீதிமன்றத்திற்கோ அல்லது நீதிபதிக்கோ செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பு நீதிபதிக்கு உள்ளது. இதிலிருந்து நான் தவறமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா நகரில் பொதுமக்கள் வந்து தங்கியிருப்பதற்கு வசதியாக செயற்படுகின்ற தனியார் விடுதிகளில் 25 வீதமானவைபற்றி பல முறைப்பாடுகள் வந்தவண்ணமே உள்ளன. விபசார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அல்லது அதற்குத் துணைபோகின்ற விடுதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டங்கள் மிகவும் கண்டிப்பானவை. இக்குற்றச் செயலில் ஈடுபடுவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்க முடியும்.

மூவின மக்களும் வாழ்கின்ற தமிழ் மாவட்டமாகிய வவுனியாவில் விடுதிகளில் விபசாரம் நடைபெறுகின்றது என்றால் அது எவ்வளவு வெட்கக் கேடானது என்பது உங்களுக்கே தெரியும். விடுதிகளை நடத்துபவர்கள் பணம் சம்பாதித்தால் போதும் என்ற மனப்பான்மையில் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதற்கு அனுமதிக்க முடியாது. விடுதிகளில் தங்கிச் செல்வதற்காக வருபவர்கள்மீது சந்தேகம் இருந்தால் அவர்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். திருப்தியாக இருந்தால் மாத்திரம் தங்குமிட வசதிகளைக் கொடுக்க வேண்டும். விடுதிகளில் தங்கிச் செல்பவர்கள் தொடர்பாக முறையான பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இரார்ணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு வருபவர்களின் வசதிக்காகச் செயற்படுகின்ற தனியார் விடுதிகளில் பல முறைகேடுகள் இடம்பெறுவது குறித்து முறைப்பாடுகள் வந்து கொண்டிருப்பதனால், அவற்றை உடனடியாக மூடி விடுவதற்குச் சட்டத்தில் இடமிருக்கின்ற போதிலும், வன்னிப்பகுதி மக்களின் தேவை குறித்து அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டதனாலேயே குறைகளை நிவர்த்தி செய்வதற்குக் கால அவகாசம் வழங்கப் படுகின்றது. இந்தக் கால அவகாசத்தினுள் குறைபாடுகளை நீக்காதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

## — ஒன்றுகூட — ஒப்படைக்கப்படவில்லை

ஐ.தே.க. அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிப்பதற்கு வழங்கப்பட்ட ஒரு மாத சலுகை காலத்தில் ஒரு ஆயுதம் கூட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதனை அடுத்து நாடு முழுவதிலும் காணப்படும் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்ற அரசாங்கம் விசேட திட்டமொன்றை வகுத்துள்ளது.

நாட்டில் காணப்படும் இவ்வாறான சட்ட விரோத ஆயுதங்களில் பெருந்தொகையானவை அரசியல் வாதிகளிடமும் அவர்களது கையாட்களிடமுமே காணப் படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

## எதிரிகளாக எதிர்கொண்ட இடங்களில் சிநேக பூர்வ சந்திப்பு!

இதுவரையில் புலிகளும் பாதுகாப்புத் தரப்பினரும் சந்திக்கும் இடங்களில் மோதலே வெடித்தது. ஆனால் இப்பொழுது யுத்த நிறுத்தமும், மோதல் தவிர்ப்பும் அமுலில் உள்ளதனால் புலிகளும் பாதுகாப்புத் தரப்பினரும் சந்திக்கும் இடங்களில் சிநேக பூர்வ கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. கடந்த வாரம் மட்டக்களப்பு-பொலன்னறுவை எல்லையிலுள்ள வெலிக்கந்தைப் பாதுகாப்பு முன்னரங்கப் பகுதிக்குப் புலிகளின் பிரதேச முக்கியஸ்தர்கள் சென்றனர்.

அங்கு சென்ற புலிகளின் வாகரைப் பகுதி முக்கியஸ்தர்கள் வெலிக்கந்தைப் பகுதி பாதுகாப்புத் தரப்பின் உயரதிகாரிகளை சந்தித்தனர். சிறு விருந்துபசாரமும் அங்கு இடம்பெற்றது. இதே போன்ற சிநேக பூர்வ சந்திப்புக்கள் மட்டக்களப்பு பட்டிருப்புப் பகுதியிலும் அடிக்கடி இடம் பெறுகிறது. பட்டிருப்புப் பாலத்தின் எல்லைச் சோதனைச் சாவடிக்கு நூற்றுக்கணக்கான புலிகள் வந்து செல்கிறார்கள்.

## அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் புலிகளின் அழைப்பின் பேரில் மூதூர் விஜயம்

தோட்ட உட்கட்டமைப்பு வீடமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சற்றும் எதிர்பாராத விதத்தில் திருமலை மாவட்ட மூதூர்ப் பகுதிக்குத் விஜயம் மேற்கொண்டு புலிகளைச் சந்தித்துப் பேசினார்.

மலையகத் தமிழ் அமைச்சர் ஒருவர் திடீரெனப் புலிகளின் பகுதிக்குச் சென்று புலித் தலைவர்களைச் சந்தித்திருப்பது இதுவே முதற் தடவையாகும். புலிகளின் பகுதியான மூதூர் கிழக்கு, சம்பூர், கட்டைப் பறிச்சான் ஆகிய இடங்களுக்கு புலிகளின் முழுப் பாதுகாப்பு ஒழுங்குடனேயே அமைச்சர் சென்றார்.

சம்பூர் பகுதியின் விடுதலைப் புலிகளின் அலுவலகத்திற்குச் சென்ற அமைச்சர் புலிகளின் திருகோணமலை மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் ஐங்கரனுடன் ஒரு மணித்தியாலம் வரை கலந்துரையாடினார்.

அமைச்சர் ஆறுமுகன் மேற்கொண்ட மூதூர்ப் பகுதி விஜயம் தொடர்பாக பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அமைச்சர் அரசு அறிந்திருக்கத்தக்க நிலையில் புலிகள் அழைத்ததினால் சென்றாரா அல்லது புலிகள் கொடுத்த அழுத்தத்தின் பேரில் தாமாகவே சென்றாரா என்பது தான் அந்த சந்தேகம்.

பொ.ஐ.மு. அரசில் அமைச்சராகவிருந்தபோது ஆறுமுகன் தொண்டமானின் சகலவித நடமாட்டங்களையும் புலிகள் அவதானித்திருந்தார்கள் என்பதோடு ஆறுமுகனின் வீடு மற்றும் அலுவலக வரைபடங்களை வைத்திருந்தார் என்று திருமலை கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளார். இவர் புலிகளின் மலையகப் பகுதி நடவடிக்கைகளுக்கான முக்கிய உறுப்பினர் என்றும் ஆறுமுகனைக் கொல்லும் உத்தரவு இயக்க மேலிடத்திலிருந்து அவருக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாகவே மலையக அமைச்சரின் புலிகளுடனான சந்திப்பும் இணைத்துப் பேசப்படுகிறது.

## மீன் மொத்த விற்பனையில் புலிகள்

### இடைத்தரகர்களிடமிருந்து மீனவர்களை பாதுகாக்கவாம்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோர தமிழ் மீன்பிடிப் பிரதேசங்களில் இருந்து வெளியார் எவரும் மீன் கொள்வனவில் ஈடுபடக் கூடாதென்று கடந்த வாரம் முதல் புலிகள் தடை விதித்துள்ளனராம்.

அதேவேளை இந்தப் பகுதியில் பிடிபடும் மீன்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து கொழும்புக்கு அனுப்புவதற்கு புலிகள் ஏற்பாடு செய்துள்ளனராம்.

வெளியார் எவரும் வந்து தமது பகுதிகளில் பிடிபடும் மீன்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்று புலிகள் புதியதடையை அமுல் படுத்தியுள்ளதால் ஏற்கெனவே மீனவர்களுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்திருந்த முதலாளிமார் பாதிக்கப் பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

இதேவேளை மீன் முதலாளிமார் மூலமும் இடைத்தரகர்கள் மூலமும் ஏழை மீனவர்கள் சுரண்டப்படுவதாகக் கூறியே புலிகள் புதிய மீன் கொள்வனவுத் தடையை அமுல் படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## மீண்டும் வரிவசூலிப்பு

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களிடமிருந்து புலிகள் வரி வசூலிப்பில் ஈடுபடுவதாக அமைச்சர் றவூஃப் ஹக்கீம் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பகிரங்க கடிதமொன்றைக் கடந்த 14ம் திகதி வெளியிட்டிருந்தார்.

எனினும் புலிகள் முஸ்லிம் பகுதிகளில் மேற்கொண்டுள்ள வரிவசூலிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. பகலில் நேரடியாகவே முஸ்லிம் நகர்ப் பகுதிக்கு வரும் புலிகள், தாம் கடிதம் அனுப்பியும் சமூகமளிக்காத வர்த்தகர்களை தமது பகுதிக்கு வருமாறு எச்சரித்து விட்டுச் செல்கின்றனர்.

இதனால் முஸ்லிம் பகுதிகளில் தொடர்ந்தும் அச்சம் நிறைந்த சூழ்நிலை காணப்படுகிறது.

# முரசம்

## தீராமல் தொடரும் மின்சார நெருக்கடி

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

மழைபெய்தால்தான் மின்சாரம் தருவோம் என்று கூறுவதற்கு அந்தத் துறை சார்ந்த அமைச்சர் ஒருவர் தேவையில்லை என்று எதிர்க் கட்சியாக இருந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி பொது ஜன ஐக்கிய முன்னணியை விமர்சித்தது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் நேர்த்தியான திட்டங்கள் இன்மையே மின் நெருக்கடிக்கு காரணம் என்றும் எதிர்க்கட்சியில் இருந்தபோது ஐ.தே.க.தலைவர்கள் சாடினர்.

அண்மையில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தற்போதைய எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய தாம் முன்னர் கூறிய அதே கருத்தை வேறு விதத்தில் கூறி தங்கள் இயலாமையை வெளிப்படுத்தினார்.

மின்வெட்டு நேரம் இரண்டரை மணித்தியாலமாக அதிகரிப்பது குறித்து அறிவிக்கவே இந்தப் பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

இதனை ஆரம்பித்த கரு ஜயசூரிய மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படுகிறது என்பதை நாட்டுக்கு அறிவிக்க மின்சக்தி அமைச்சர் ஒருவர் தேவையில்லை என்று சொன்னார்.

அவர் இதனை எந்த அர்த்தத்தில் கூறினார் என்று தெரியவில்லை.

ஆனால் முன்னர் அநுருத்த ரத்வத்தை அமைச்சராக இருந்தபோது அவர் மூலம் எந்தப் பயனும் இன்றி மழைபெய்தால் மின்சாரம் வெயிலடித்தால் மின்வெட்டு என்று எப்படி காலம் கழிந்ததோ அதே போலவே தன்னாலும் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை என்பதை அமைச்சர் கரு ஜயசூரிய மறைமுகமாக ஒப்புக்கொண்டார்.

சுமார் ஒரு வருடத்திற்கு மேல் தொடர்ச்சியாக நீடிக்கும் (தேர்தல் காலத்தில் சில நாட்கள் தவிர) இலங்கையின் மின்சார நெருக்கடியை தீர்க்க எவரும் இன்னமும் ஆக்கபூர்வமாக எதனையும் செய்தது போல் தெரியவில்லை.

தற்போதைய மின்சார நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்பதை விளக்கும் செயற்திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கிறது.

நெருக்கடியைத் தீர்க்க அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதைவிடவும் முன்னைய அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு கைகழுவிக்கொள்ளும் திட்டத்திற்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்கிறது.

இது வரவேற்கத் தக்க விடயமல்ல. பொதுஜன ஐக்கிய முன்னணி தனது ஆட்சிகாலம் முழுவதிலும் ஐ.தே.க.வை திட்டியதைத் தவிர இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முன்னேற்றகரமாக எதனையும் செய்யவில்லை.

இப்போது பதிலுக்கு ஐ.தே.க. பொதுஜன ஐக்கிய முன்னணியைத் திட்டிக்கொண்டு இருக்குமாயின் நெருக்கடி ஒருபோதும் தீரப்போவதில்லை.

மின்சாரப் பிரச்சனையால் ஒவ்வொரு தனிநபரும் முகங்கொடுக்கும் துன்பங்கள் குறித்து விரிவான விளக்கங்கள் தேவையில்லை.

அரசாங்கத் தலைவர்களின் வீடுகளில் இருப்பது போன்ற பாரிய ஜெனரேட்டர்கள் சாதாரண பொது மக்கள் வீடுகளில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. என்பதை பொறுப்புள்ளவர்கள் மனதில் கொள்வார்களாக.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மாறிவரும் மனநிலைகள் அச்சுறுத்தப்படும் அமைதி

# என்ன நடக்கப் போகிறது?

**எம்.பி.எம். பர்ஸான்**

இலங்கை அரசியல் மீண்டும் தறிகெட்டுப் போகத் தொடங்கியுள்ளது. புதிய ஐ.தே.கட்சி அரசாங்கம் பொ.ஜ.முன்னணியிலிருந்து எந்த வகையில் பிரதானமாக வேறு பட்டு நிற்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்களோ அதற்கு தலைகீழாகவே யதார்த்தம் இருக்கும் என்பதை உணர்த்தப் போதுமான சம்பவங்கள் தற்போது அரசியலில் அரங்கேறி வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்தவுடன் தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்புக்கள் சகலதையும் நிறைவேற்றுவார் என்று நம்பக்கூடிய விதத்தில் அவரது ஆரம்பக் கட்ட செயற்பாடுகள் காணப்பட்டன. ஆனால் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகள் ஆரோக்கியமான எதிர்காலமொன்றை கனவிலேனும் காணக்கூடிய நிலையில் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

1994ம் ஆண்டு பதவியேற்ற திருமதி குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் சுமார் 3 வருட



காலம் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசாங்கமாக தன்னை அடையாளப்படுத்தி வந்து அதன் பின்னரே இனவாதத்தின் பக்கம் தலைசாய்க்க ஆரம்பித்தது.

தொடர்ச்சியாக 5 வருடங்கள், பல்லின அடையாளங்கொண்ட ஒரு நாட்டை கட்டிக் காக்கும் போராட்டத்திற்கும் சிங்கள தேசிய வாதத்திற்கும் இடையில் அகப்பட்டு சின்னாபின்னப்பட்ட பொ.ஐ.முன்னணி அரசு கடந்த டிசம்பரில் அதன் வரலாற்றுத் தோல்வியை சந்தித்தது.

பொதுவாக அரசியலில் காணப்படும் ஒரு அம்சம் இனவாதமோ, தேசியவாதமோ பேசி அதிகாரத்தைக் கைப்பற்றும் சக்திகள் பின்னர் தொடர்ச்சியாக தமது இனவாத தேசிய வாதக் கருத்துக்களை தூக்கிப் பிடித்திருப்பதில்லை. அதன் பின்னர் சகல இன மக்களுக்கும் சகலதும் கிடைக்கும் என்ற தொனியில் கதைக்க ஆரம்பித்து விடுவதுண்டு. இதற்கு இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம் ஒரு சிறந்த உதாரணம். தீவிர இந்து அடிப்படை வாதத்தின் துணையோடும் ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புக்களின் ஆதரவோடும் ஆட்சிக்கு வந்த வாஜ்பாய் பின்னர் தன்னை சகல சமூகங்களுக்குமான பிரதமராக காட்டிக்கொள்ள முயற்சி செய்தார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது பொ.ஐ.மு. நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்ற கருத்துருவத்தில் சிங்கள தேசிய வாதத்தின் உதவியைப் பெற முயற்சி செய்தது. ஐ.தே.க. இதற்கு நேர் எதிரான கருத்தை வலியுறுத்தி சிறுபான்மை மக்கள் சார்பான கொள்கையை வெளிப்படுத்தியது. இனமத பேதமின்றி பெருவாரியான மக்கள் ரணில் விக்கிரம சிங்கவை தமது ஆட்சியாளராக தெரிவு செய்தார்கள்.

ஆனால் அதிகாரத்தை கைப்பற்றிவிட்ட பின்னர் ரணிலின் தொனியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை தற்போது அவதானிக்க முடிகிறது. வன்னிக்கு உணவு அனுப்புதல், பாடசாலை மாணவர்களுக்கு கணித உபகரணங்களை அனுப்புதல், சிங்கள அமைச்சர்கள் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் விஜயம் மேற்கொள்ளுதல் என்று சில மேலோட்டமான விடயங்களை தவிர்த்துவிட்டு இனப்பிரச்சனையின் மூல வேரோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் அரசாங்கத் தலைமை வெளியிட்டு வரும் கருத்துக்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவையாக இல்லை. தமிழ் மக்களின் மரபு வழித் தாயகம் என்ற சொல்லை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது அகராதியில் இருந்து முற்றாக நீக்கிவிட்டவர் போல் மஹாநாயக்க தேரர்கள் முன்னிலையில் கருத்து வெளியிட்டு வருகிறார்.

இலங்கை அரசியலில் சிங்கள தேசிய வாதத்தின் ஆதிக்கம் எந்தளவு ஊடுருவி இருக்கிறது என்பதை உணர புலித்தடை விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்க தற்போது காட்டிவரும் அச்ச உணர்வு ஒரு சிறந்த உதாரணமாகும்.

தேர்தலுக்கு முன்னர் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது குறித்து சிறுபான்மை மக்களை மகிழ்ச்சியூட்டும் விதத்தில் ஒரு வித்தியாசமான மௌனத்தை கடைப்பிடித்து வந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது கொஞ்சம் கொஞ்சமாக வாய்திறக்க ஆரம்பித்திருக்கிறார்.

பெரும்பாலும் புதிய அரசாங்கம் புலிகள் மீதான தடையை நீக்குமென்றே எதிர்பார்க்கப்பட்டது. அது இன்னமும் உறுதியான முடிவொன்றை காணாத விடயமாக அரசியல் அரங்கில் சுழன்றுகொண்டு இருக்கின்ற போதிலும் புலித்தடை முற்றிலுமாக நீக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

தற்போது தொடர்ச்சியாக மஹாநாயக்க தேரர்களை சந்தித்து 'அரசியல் நிலைமைகளை' விளக்கிவரும் பிரதமர் அந்த தேரர்கள் கோபப்பட்டுவிடக்கூடாது என்ற அதீத அச்ச உணர்வுடன் கருத்து தெரிவிப்பதையும் காணமுடிகிறது.

புலிகள் இயக்கம்மீது தற்போது விதிக்கப்பட்டிருக்கும் தடையில் சில திருத்தங்கள் மாத்திரமே கொண்டு வரப்படும் என்று தேரர்களிடம் ரணில் கூறுகிறார். அவர்களும் ஆசிர்வதித்து அனுப்புகிறார்கள்.

புலித் தடையை அரசியலாக்கி அதன்மூலம் லாபம் பெற சில இனவாத சக்திகள் எடுத்த முயற்சிகள் காரணமாக இன்று இந்த விவகாரம் ரணில்விக்கிரமசிங்கவை பெரும் சங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறது. புலிகள் மீதான தடையை நீக்குவது என்பது தாய் நாட்டை தமிழர்களுக்கு தாரை வார்க்கும் செயல் என்பதுபோல சாதரண சிங்கள மக்கள் மத்தியிலும் ஊட்டப்பட்டிருக்கும் தப்பபிப்பிராயம் தீர்வு முயற்சியை ஆபத்தான திசையை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறது.

தற்போது ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழ்நிலை அல்லது அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான நல்லெண்ண உடன்பாடு பார்த்த பார்வையில் மகிழ்ச்சியளிக்கக்கூடிய வரவேற்கத்தக்க ஒரு விடயம் போல் தெரிகின்ற போதிலும் யதார்த்தத்தில் எந்தளவுக்கு இரு தரப்பினரதும் உள்ளத்தில் நம்பிக்கை ஊடுருவி இருக்கிறதென்பதை சிந்திக்கும் போது நிலமை கவலையைத் தருகிறது.

தீர்வு முயற்சியில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் உண்மையான நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக அர்த்தங்கொள்ள முடியாது என்று கடந்த வாரம் இந்துப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது.

பரஸ்பர சந்தேகங்கள் ஆழப்பதிந்தவை. அவற்றை அத்தனை சுலபத்தில் நீக்கிவிடமுடியாது. புலிகளும் அரசும் நிரந்தர போர்நிறுத்தம் தொடர்பில் முன்வைத்து வரும் நிபந்தனைகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

வடக்கில் படைகளை முகாம்களுக்குள் முடக்கவேண்டும் என்றும் கடல் ரோந்துகளை நிறுத்தவேண்டும் என்றும் புலிகள் தரப்பினால் நிபந்தனை முன்வைக்கப்படுகிறது. இது தங்களைப் பொறுத்தவரை மிக ஆபத்தான நிபந்தனைஎன அரசாங்கம் கருதுகிறது.

இத்தகையதொரு பின்னணியில்தான் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கம் படைக்கு ஆள் திரட்டுகிறது. இஸ்ரேலிடமிருந்து அதிவேக ரோந்து படகுகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.


புலிகள் தமது அணிக்கும் ஆள் சேர்க்கிறார்கள். ஆயுதக்கப்பல் வந்து போவதாக தகவல் இல்லாவிட்டாலும் புலிகளின் தரப்பில் முற்றாக ஓய்வெடுப்பார்களென்று எதிர்பார்க்கத் தேவையில்லை.

சமாதான முயற்சி பற்றி நடத்தப்படும் ஒவ்வொரு பத்திரிகையாளர் மாநாட்டிலும் தாங்கள் தேசிய பாதுகாப்பை மறந்துவிடவில்லை என்று அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

அரசாங்கத்தின் பொருளாதார தடைநீக்கம் குறித்து 'இதுபோதுமானதல்ல' என்ற தொனியில் சில நம்பிக்கையீனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

படிப்படியாக மாறிவரும் இந்த மனநிலை இறுதியில் மோதலில் முடியாது என்று கூறுவதற்கில்லை. சமாதான முயற்சியின் ஆரம்பத்திலேயே அதனை எதிர்மறையாக பார்க்கவேண்டும் என்றில்லை. ஆனால் யதார்த்தம் கவலை தருவதாகவே இருக்கிறது. தமது அமைதியை கலைத்துக் கொள்ளவேண்டுமாயின் இரண்டு தரப்புக்கும் ஒரு சிறு துரும்பு அளவிலான காரணமே போதுமானது.

# சாதாரணன் எழுதுவது....



அண்ணன் அடைக்கலநாதன்
அவர்களுக்கு,

முதலல நீங்கள் என்னை மன்னிக்க வேணும்.

இப்ப ஒரு ரெண்டு வருசமாத்தான் சுழி விட ஆரம்பிச்சிருக்கிற மகேஸ்வரன் அவர்களுக்கு எழுத முந்தி எத்தினையோ வருசமாய்ச் சுழிக்கிற உங்களுக்குத்தான் எழுதியிருக்க வேணும். அதென்னமோ வேட்டி சால்வையோட மந்திரியை பொங்கல் விழாவில கண்ட புளுகத்தில எழுதிப் போட்டன், விடுங்கோ.

வீர வசனங்களோட உங்களை ரீவியிலயும் மேடையிலயும் பாக்கேக்கை சத்தியமா அண்ணை சந்தோசமாய்த் தானிருக்கிறது. திருச்சி திருவள்ளுவர் பஸ் ஸ்ராண்டில கட்டணக் கழிப்பிட வாசலில நாலுமுழத்தை மடிச்சுக் கட்டிக்கொண்டு நீங்கள் நிண்ட கோலத்தை நாலு வரிசத்துக்கு முந்திக் கண்ட நான், நீங்கள் எண்டெண்டைக்கும் நாடு திரும்பி வரமாட்டீங்கள் எண்டுதான் நினைச்சனான்.

1988 இல கொழும்பில உங்கட கட்சியைத் தேர்தல் திணைக்களத்தில பதிவு செய்த செட்டி, குரு ஆக்களிட்டைத் தலைவர் எங்கை எண்டு கேட்க, "அவர் திருச்சியில... வேணுமெண்டால் அவரைப் பார்சல் கட்டித்தான் கொண்டுவர வேணும்" எண்டு அவை சொன்னதும் ஞாபகம்.

பிறகு 1992 பிரேமதாசா காலத்தில அப்பப்ப நாடு வந்த உங்களையும் ஒருக்காச் சந்திப்பம் எண்டு விசாரிச்சால், அதெல்லாம் வவுனியா கலெக்ஷன் வாற நேரமும், ஆமிக் கொடுப்பனவு வாற நேரமும்தான் உங்களைப் பிடிக்கலாம் எண்டும், தாறதைப் பெட்டிக்குள்ள போட்டுக் கொண்டு திருச்சி போயிடுவீங்கள் எண்டும் உங்கட பொடியளே சொல்லிச்சினம்!

94 தேர்தல்ல தோல்வியடைஞ்சதோட "நாடும் வேண்டாம் மக்களும் வேண்டாம்" எண்டுதான் நீங்கள் திருச்சியில செட்டிலாயிட்டீங்களெண்டு இங்க எல்லாரும் சொல்ல, நானும் உங்களைப் பிழையாய்த்தான் நினைச்சுப் போட்டன்.

ஆனால் 98 இல புளொட் எம்.பி.சண்முகநாதன் (வசந்தன்) செத்ததுதான் தமிழ் மக்கள் வாழ்வில திருப்புமுனை எண்டு சொல்ல வேணும். இல்லாட்டில் நீங்கள் எங்க வாறது, "ஈனத்தமிழன் இன்த்தை விற்கினும் மானத் தமிழன் மண்டியிட மாட்டான்" எண்டு புல்லரிக்க வைக்கும் வீர முழக்கங்களையும் நாங்கள் எங்க கேக்கிறது? ஆமிக்காரனுக்கு ஐடெண்டிகார்ட் காட்டிக் கொண்டு நிக்கேக்கையும், "மானத் தமிழன்" எண்டு நீங்கள் கையைக் காத்தில வீசிப் பேசிப் போட்டுப் போனது ஞாபகத்தில வர... மனசுக்குள்ள என்ன ஒரு நடப்பு!

படிப்பில குறைஞ்சு, பாக்கிற உத்தியோகங்களும் குறைஞ்சு, வருமானம் குறைஞ்சு, வாழுற இடங்களும் அழிஞ்சு, உலக வளர்ச்சிப் போக்குக்கு எதிர்பக்கமாய் ஓடி, எங்களிட்ட உள்ளதெல்லாம் கெட்டு, நிக்கிற நேரத்திலயும் நீங்கள் எலக்ஷனுக்கு முந்தி வந்து நிண்டு, இரண்டு மாதமாய் ஏறி முழக்கின ஆவேசப் பேச்சுக்களைக் கேட்டுத்தான் அந்தக் கிறுகிறுப்பில எங்கட துன்பமெல்லாம் தூசி எண்டு மறந்திருந்தம்.

தமிழுக்காக உயிரையே தரலாம். இந்தப் பிசாத்து வாழ்க்கை கெட்டுப் போனால் என்ன?

நாங்கள் படுற கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு ரண்டு மாத மேடைப் பேச்சிலேயே மருந்து தந்து சுகங்காட்டிப் போடுவியள் நீங்கள்.

அதுக்காகத்தானே உங்களை அஞ்சு வருசத்துக்கொரு முறையோ, ஆட்சிக்குவாறவை ஸ்டெடியில்லாட்டி ஆண்டுக்கொருமுறையோ எதிர்பார்த்துக் கொண்டு கிடக்கிறம்.

அநியாயமாய் அழிஞ்சு கொண்டு போறமே எண்ட ஏக்கத்தில கிடக்கிற எங்களுக்கு, தமிழ் நாட்டிலயோ கனடாவிலயோ வாழ்க்கையை "செட்டப்" செய்து வைச்சிட்டு, "மானத் தமிழன் மண்டியிட மாட்டான்" எண்ட தகவலைச் சொல்லிப் போட்டுப் போக வாற உங்களாலதான் சின்னச் சின்ன மகிழ்ச்சியேனும் கிடைக்கிறது.

உங்களுக்கு மட்டும் அந்த வசந்தன் செத்து வந்த எம்.பி. வாய்ப்பு வராமல் போயிருந்தால், இந்த மண், மக்கள், விடுதலையின்ர மகத்துவமெல்லாம் நாங்கள் அறிஞ்சிருக்கேலுமே? நீங்களே சொல்லுங்கோ அண்ணை?

ஆனால் எலக்ஷன் முடிஞ்சபிறகும் ரீ.வி.யில வந்து எங்களுக்கு ஒரு மணி நேரம் காட்சி தந்த நீங்கள்?(அதையே அவை ரண்டு மூண்டு முறை போட்டு எங்களைக் குளிர்விச்சது மேலும் சந்தோஷம்-) ரண்டு கையையும் விரிச்சு "தமிழ் மக்களுக்கு இதுதான் கடைசி சந்தர்ப்பம்" எண்டு சீரியஸாய் சொன்னதைக் கேட்டுத்தான் பயமாய்க் கிடக்கு.

அப்பிடியெண்டால் அண்ணை, இனி வராமல் விட்டிடுவியளோ? உங்களுக்குக் கிடைச்ச கடைசிச் சந்தர்ப்பம் எண்டா நாங்கள் இதை எடுத்துக் கொள்ளுறது? நீங்கள் வரவேணும் அண்ணை! வெற்றி தோல்வியளைப் பற்றி யோசியாமல் நீங்கள் வந்து முழங்க வேணும்!

உங்களைப் பற்றியும் லெக்சரர் க.வுக்கு நக்கலான அபிப்பிராயம்தான். இவையின்ர நளினங்களைப் பொய்யாக்க வெண்டாலும் நீங்கள் திரும்ப அடுத்த எலக்ஷனுக்கும் வரவேணும். அப்பத்தான் நாங்கள் ஆரிட்டையும் மண்டியிடப் போகாத வீர உணர்வைத் தக்கவைச்சுக் கொண்டிருக்கேலும்!

இதுக்கு அந்தாள் சொல்லுது.... "உங்கட தலைவரையும் 300 பொடியளையும் கொலை செய்தவையிட்டைப் போய் மண்டியிட்டதை விடவா மற்றதெல்லாம் கேவலமாயிருக்கப் போகுது?" எண்டிட்டு, "அதுமட்டுமில்லாமல் மற்றவையும் வந்து எங்களிடம் மன்னிப்புக் கேட்டு மண்டியிடுவார்களானால் அவர்களையும் எங்களுடன் சேர்த்துக் கொள்ளலாம்" எண்டு நீங்கள் தமிழின ஒற்றுமையின் தேவையை உணர்ந்து உயர்வான நோக்கத்தோட பேசினதைக் கொச்சையாய்ப் பேசுது மனுசன். அது கடைஞ்செடுத்த பாசிசமாம்! இதுதான் படிச்சாக்களின்ர பிரச்சனை. ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு சொல்லைக் கண்டுபிடிச்சுச் சொல்லி வெருட்டிக் கொண்டிருப்பினம்.

(தொடர்ச்சி 17ம் பகத்தில்)

# ரஜினியின் அரசியல் பிரவேசம்?

கிணற்றில் போட்டக் கல்லாக இருந்த ஒரு விவகாரம் தமிழக அரசியலில் மீண்டும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவாரா என்ற கேள்விதான் அது. கடந்த ஜனவரி மாதம் சென்னையில் துக்ளக் பத்திரிகையின் ஆண்டு விழாவில் உரையாற்றிய அப்பத்திரிகை ஆசிரியர் சோ.ராமசாமி, தமிழகத்தில் உருவாகும் மூன்றாவது அணி அல்லது மாற்று அணிக்குத் தலைமை தாங்க வரவேண்டும் என்று ரஜினிகாந்துக்கு அழைப்பு விடுத்தார். இத்தனைக்கும் சோ பேசும்போது முன் வரிசையில் அமர்ந்திருந்த ரஜினிகாந்த் கேட்டுக் கொண்டிருந்தார். தான் பேசிய கருத்துக்களை அப்படியே எழுதி பத்திரிகை அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தார் சோ. சில பத்திரிகைகள் அக்கருத்தைப் பிரசுரித்தன. ஆனால் ரஜினி தரப்பில் இருந்து வழக்கம் போல் எந்த பதிலும் இல்லை. வெளியே சொல்லப்படாத தகவல் என்னவென்றால், சோ பேசிய கருத்துக்களில் ரஜினிகாந்துக்கு உடன்பாடு இல்லை என்பது தான். தன்னுடைய எண்ணம் என்ன என்பதைத் தெரிவித்து அவர் சோவுக்கு கடிதம் எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறது. ரஜினிகாந்துக்கு மிகவும் நெருக்கமானவர் என்று கருதப்படும் சோவுக்கு ஒரு காரசாரமான கடிதம் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ரஜனிகாந்துக்கு ஏன் ஏற்பட்டது. இதற்கு காரணம் உண்டு.


சோவைப் பொறுத்தவரை அரசியலில் அவருடைய நிலைப்பாடு என்பது ஒரு நிலை



யற்ற தன்மையைக் கொண்டது. ஒருவரை ஆதரிக்கும் போது அதற்கு ஒரு காரணம் சொல்வார். அவரை எதிர்க்க முடிவு செய்தால் அதற்கான காரணத்தை இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார். பின்பு அதைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பார். 1996ம் ஆண்டு தேர்தலில் தி.மு.க தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி அமைவதற்கு சோ பங்காற்றினார். ஜெயலலிதாவைத் கடுமையாக விமர்சித்தார். ஆனால் 2001 தேர்தல் வரும் போது தி.மு.க.வை எதிர்ப்பதற்கான ஒரு காரணத்தைக் கண்டு பிடித்தார். தமிழ்த் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக தி.மு.க. அரசு செயல்படுகிறது என்று அவர் குற்றம் சாட்டினார். பின்னர் ஒரு நாள் சென்னையில் உள்ள அவரது பத்திரிகை அலுவலகத்துக்கு ஜெயலலிதா, தன்னுடைய தோழி சசிகலாவுடன் விஜயம் செய்தார். மறுபடியும் ஜெயலலிதாவின் ஆலோசகராக அவர் மாறிவிட்டார்.

இப்படி, அணி மாறி-அணி மாறி அவர் செயல்படுவது ரஜினிகாந்துக்குப் பிடிக்கவில்லை என்று கூறப்படுகிறது. தி.மு.க தலைவர் கருணாநிதியும் தன் பங்குக்கு ரஜினியிடம் பேசியிருக்கிறார். சோவின் செயல்பாடுகள் எவ்வளவு உள்நோக்கம் கொண்டவை என்று எடுத்து முடித்திருப்பதாகத் தெரிகிறது. ரஜினியும், துக்ளக் விழாவுக்கு தன்னை நேரடியாக வந்து சோ அழைத்ததால்தான் கலந்து கொண்டதாக கருணாநிதியிடம் தெரிவித்திருக்கிறார். அதன் பின்னர் சோ பேசியதில், தனக்கு உடன்பாடு இல்லை என்று அவருக்கே கடிதம் எழுதியுள்ளார்.

ஆனால் இந்த விவகாரங்கள் எதைக் குறித்தும் சோ பேசத் தயாராக இல்லை. அரசியலுக்கு வருவது குறித்து ரஜினிகாந்தே பேசாத போது அவர் வருவாரா என்பது குறித்து நான் எப்படித் தெரிவிக்க முடியும் என்று கேட்கிறார். ஜெயலலிதாவின் ஆதரவாளரான அவர், ஏன் திடீரென்று ரஜினிகாந்தை அரசியலுக்கு அழைக்க வேண்டும்



என்று கேட்ட போது, ரஜினியை அழைத்ததற்கும் ஜெயலலிதா அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றார். மூன்றாவது அணி என்பது உடனடியாக நடக்கப் போகும் விவகாரம் அல்ல. அது எதிர்காலத்தில் உருவாக வேண்டியது. அப்படி உருவாகும் பட்சத்தில் அதற்குத் தலைமை தாங்க மக்கள் செல்வாக்கு மிக்க கவர்ச்சிகரமான ஒரு தலைவர் தேவை என்பதால் ரஜினியை அழைத்தேன் என்று விளக்கமளித்தார் சோ.

திராவிடக் கட்சிகளுக்கு மாற்று தேவைப் படுகிறது என்பது சோவின் வாதம். அப்படி என்ன திராவிடக் கட்சிகள் மீது இன்னவென்று விளக்கமுடியாத ஒரு கசப்புணர்ச்சி சோவுக்கு? தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் லஞ்சத்தையும் ஊழலையும் அறிமுகம் செய்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பது சோவின் குற்றச்சாட்டு. அதோடு விடுதலைப்புலிகள்போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு தமிழகத்தில் இடமளித்து அவர்களை வளர்த்து விட்டவர்கள் தி.மு.க.வினர்தான் என்று அவர் தொடர்ந்து பேசி வருகிறார்.


தற்போது தமிழகத்தில் உள்ள ஆண்டிப்பட்டி தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அ.தி.மு.க சார்பாக அக்கட்சியின் பொதுச் செயலர் ஜெயலலிதா போட்டியிடுகிறார். இதில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வராக வர வேண்டும். அத்தகையச் சூழலில் ஜெயலலிதாவுக்கு எதிராக ஒரு பொது வேட்பாளரை நிறுத்தலாம் என்ற கருத்து வலுப்பட்டது. அதையும் ஆரம்பித்தவர் இளங்கோவன்தான். ஆனால் தி.மு.க.வானது பா.ஜ.க கூட்டணியில் இருக்கிறது. தி.மு.க வேட்பாளரை ஆதரித்தால் அது பா.ஜ.க.வை ஆதரித்ததற்குச் சமம் என்று கூறி அதற்கு மதச்சார்பற்ற கட்சிகள் முட்டுக் கட்டை போட்டன. பின்னர் மூன்றாவது அணி சார்பாக ஒரு வேட்பாளரை நிறுத்தலாம் என்றார்கள். ஆனால் மதச்சார்பற்ற கூட்டணியில் முக்கிய பங்கு வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானது மூன்றாவது அணி என்ற கொள்கையையே எதிர்க்கிறது. அக்கட்சியின் 17வது அகில இந்திய மாநாட்டுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பின் படி மூன்றாவது அணி பொருத்தமற்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக, மூன்றாவது அணி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விட்டது.

**கானகன்**

மற்றொரு காரணம் என்னவென்றால், ஆண்டிப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரை, தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகளைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் செல்வாக்குக் கிடையாது. அத்தொகுதியில் பெருவாரியாக வசிப்பவர்கள் தேவர் இன மக்கள். அவர்கள் ஒட்டு மொத்தமாக இப்போது அ.தி.மு.க.வை ஆதரிக்கிறார்கள். இதற்கு காரணம் ஜெயலலிதாவின் தோழியான சசிகலா தேவர் இனத்தைச் சார்ந்தவர். ஆனால் தி.மு.க ஒரு வேடிக்கையான பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறது. அது என்ன?

(தொடர்ச்சியை 17ம் பக்கத்தில் பார்க்கவும்)

## GRAND COMPUTER SALE



**Intel Pentium I**
**133MHz / 200MHz**
2.0 GB HDD/ 32MB Ram
4MB VGA / 14' Color Monitor
CD ROM / Sound Card
340w Speaker (New)
Key Board/ Mouse (New)

Only 13,500/=

**A Gift for Children to Study & Play**
**Enjoy Audio, Video and Internet**

16MB Ram - 1400/=
56K Fax Modem (Int) - 1350/=
10/100 Network Card - 1250/=
Epson Stylus - C20SX - 7300/=

***FREE*** : Internet & E-mail Connection
***FREE*** : Installation of Windows, Ms Office, Sinhala/ Tamil Fonts, Games MP3 Songs & any more....

**Euro PC** No. 36, Station Road, Wellawatte, Col - 06. Hotline : 075 - 557419


## முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களினால் பாடசாலை அதிபருக்கு அச்சுறுத்தல்

**க**ல்முனை அக்கரைப்பற்றுப் பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களினால் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பழிவாங்கப்படும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருவதாக பரவலான புகார் தெரிவிக்கப் படுகின்றது.

முஸ்லிம் காங்கிரசின் பிரதேச தலைவர்கள் சிலர் காடையர்களைக் கொண்டு மாற்றுக் கட்சி ஆதரவாளர்களை கடுமையாக அச்சுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரைப்பற்றுப் பிரேதேசத்தின் பிரபல பாடசாலை யொன்றின் அதிபர் கடமைக்குச் செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கிறார். இதனால் அவர் தினமும் கல்விக் காரியாலயத்துக்குச் சென்று கையொப்பமிட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

குறிப்பிட்ட பிரதேசத்தின் பள்ளிவாசல் நிருவாக சபை தலைவராகவும் இருக்கும் இந்த அதிபர் கடந்த தேர்தல் காலத்தில் பள்ளி வாசலுக்குள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு உதவியளிக்கவில்லை என்ற காரணத்திற்காகவே தற்போது அச்சுறுத்தப் பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இத்தகைய பல சம்பவங்கள் குறித்து அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமுக்கு பலமுறை தெரியப்படுத்திய போதிலும் இதுவரையிலும் அவர் உரிய கவனம் செலுத்த வில்லையென விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

## கம்பன் கழகம் நடாத்தும் நாட்டியவிழா

**கொ**ழும்புக் கம்பன் கழகம் பெப்ரவரி 1-2-3ம் திகதிகளில் நாட்டிய விழா ஒன்றினை நடாத்த விருக்கிறது. வருடம் தோறும் கம்பர் விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி வரும் கம்பன் கழகம் இயல் இசை விழாக்களையும் நடாத்தி வருவது தெரிந்ததே. இவ்விழாக்களில் உள்ளூர்க் கலைஞர்களும் தமிழ் நாட்டின் தலை சிறந்த கலைஞர்களும் பங்குபற்றிச் சிறப்பித்து வருகிறார்கள்.

நடைபெறவிருக்கும் நாட்டிய விழாவில் கொழும்பில் இத்துறையில் சிறப்புற்றுத் திகழும் ஆறு நடன ஆசிரியர்களின் மாணவிகள் பங்குபற்றி நடனவிருந்தளிக்கவிருக்கின்றனர். வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் நடன விருந்துடன், இறுதி நாளான 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கு நாட்டியக் கருத்தரங்கு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கிற்கு தமிழ்நாடு திருப்பனந்தாள் ஆதினக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் கு.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை தாங்குகிறார். நம் நாட்டின் மூத்த நாட்டியக் கலைஞர்களும் பங்கு பற்றுகிறார்கள்.

## சமாதான முயற்சியை விமர்சிக்கக்கூடாதென பொ.ஐ.மு.க்கு ஜனாதிபதி உத்தரவு!

**அ**ரசாங்கத்தின் எந்தச் செயற்பாட்டை விமர்சித்தாலும் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் குறித்து எந்தவொரு விமர்சனத்தையும் முன்வைக்கக் கூடாதென ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

கடந்த வாரம் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற கூட்டத்தில் உரையாற்றிய திருமதி குமாரதுங்க அரசாங்கத்தின் பொருளாதார செயற்திட்டங்களையும் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரையையும் விமர்சிக்கவேண்டுமென்று கூறிய அதே நேரம் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தொடர்பில் விமர்சனம் எதனையும் தெரிவிக்கக்கூடாதென கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தேர்தலின் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடாவடித்தனங்களை பாராளுமன்றத்தில் கண்டிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் பாராளுமன்றத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கான தனியான குழுவொன்று அமைக்கப்படவிருக்கிறது.


|| श्रीविष्णवे परमात्मने नमः ||

சர்வதேச பாரம்பரிய மஹா மாந்திரீக மருத்துவம்

INTERNATIONAL TRADITIONAL & HOMOEOPATHY MEDICAL & RESEARCH & SERVICE

தூரதேச மந்திர உட்சாடன ஆஹர்ஷ்ண பிராண தியான யோக ஆன்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்




MY GURU



முனிவர்களின் குருகுல வைத்திய பரம்பரை
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI. DR. T. MYALVAGANAM
R.H.M.D-D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
REGISTERED BY MINISTRY OF HEALTH SLMCNO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்–மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற, தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்த்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய், மன நோய், பிரச்சனைகளைத் தீர்த்து. எத்துன்பங்களும் அணுகாமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள், வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்களின் சம்மதத்துடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற, வேறு நல்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மாந்திரீக வசிய வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள்கடல்கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத்தபால், பகஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரைகளோடு எல்லாமதத்தினர்களுக்குமேற்ற இறைபக்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும். புனித பரிகார பொருட்களை துரித விஷேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய ஆஹர்ஷ்ண மந்திர உட்சாடன பிரான தியான யோக ஆன்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்

| GURUSACKTHY CENTER (INDIAN CLINIC) KALLADY - BATTICALOA.(P.O.) (SRI LANKA) | குரு சக்தி நிலையம் (இந்தியன் வைத்தியசாலை) கல்லடி மட்டக்களப்பு. P.O (ஸ்ரீலங்கா) |
|---|---|

றெலிபோன், பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 லிருந்து இரவு 11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை.
REGISTERD BY MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL. AFFAIRS
கொழும்பில் மாதத்தில் இருதடவைகள் நேரில் ஆலோசனைகள் பெறலாம்.


## தினமுரசு சந்தா விபரம்

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 2600 | ரூ.1350 | ரூ.700 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.800 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2075 | ரூ.1050 | ரூ.600 |
| உள்ளூர் | ரூ. 740 | ரூ.375 | ரூ.200 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


## ஆரோக்கிய வாழ்வுக்கோர் ஆயுர்வேத இயற்கை மருத்துவம்

சுவிஸ் நாட்டின் இயற்கை வைத்தியர் சங்கம் (NVS), மாற்றீட்டு மருத்துவர்கள் சங்கம் (EMR) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்று பின்வரும் வைத்திய முறைகள் கீழுள்ள முகவரியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகள்
* ஆயுர்வேத 'தெரப்பி' முறைகள்
* ஏழுநிலை மசாஜ் (முதுகு வலி)
* ஒற்றைத்தலைவலி மசாஜ்
* பிராணசக்தி மூலம் சிகிச்சை
* கிசு உப்பு மருத்துவம்
* அதிர்வு முறையிலான சீன மருத்துவம் (அலர்ஜி)

அனேகமான மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் இவற்றுக்கான செலவினை ஏற்றுக்கொள்கின்றன. (பெண்களுக்கான தனி மருத்துவ பிரிவும் உண்டு)

தொடர்புகளுக்கு:- Dr.இளங்கோ ஏரம்பமூர்த்தி ( ஆயுர்வேத இயற்கை வைத்தியர்)
Dip.in Ayurvedischer Medizin, A.Mitglied NVS, Praxis Ayurveda Siddha, Bellevuestr.12
3095 Spiegel b.Bern, Switzerland

Tel.031 9742021 Nat.0764112021
Fax. 031 9742024



## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903
Tel: Appu, கை தொலைபேசி எண்:
அப்பு, 00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.
E.mail: Sakun @Singnet Com.Sg



## சுவிஸ் பேர்ண் மாநகரில்.

**Suji Jewellery Works**

நங்கையின் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 காரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகளுக்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern,
Swiss.
T.P. 0041-31-8191837

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*


## 14ம் ஆண்டு நினைவு அஞ்சலி



### திருமதி மரியதாஸ் பேனடேற் (ராசாத்தி)

மலர்வு:16.11.44 உதிர்வு:07.02.1988

அன்பின் திருவுருவாய், பண்பின் இலக்கணமாய், பாசத்தின் இருப்பிடமாய், எம் குடும்ப ஒளிவிளக்காய், திகழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி பார்தனிலே எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பதினான்கு கழிந்திட்ட போதிலும் எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் நினைவுகள் எம் இதயத்தை விட்டு எப்பொழுதும் நீங்காது.


அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 07.02.2002 வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு கொழும்பு புனித வியாகுலமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உங்கள் பிரிவால் துயருறும்

**கணவர்:** V.மரியதாஸ்
**பிள்ளைகள்:** டொறின் சுகந்தினி (பிரான்ஸ்),கிளேரியன் தாஸ் (லண்டன்), டொறின் ஜெயந்தினி (ஜேர்மனி),டொறின் சியாமினி (ஜேர்மனி), கொட்வின் (லண்டன்),ஜெஸ்லின் (லண்டன்),டொறின் டன்சினி (லண்டன்),
**மருமக்கள்:** எஸ்.கொன்சன் (பிரான்ஸ்), எஸ்.மோகன் (ஜேர்மனி), கே. கருணாகரன் (ஜேர்மனி), சி.சர்மிலி (லண்டன்)
**பேரப்பிள்ளைகள்:** சுரோமி, நிகோன், ரெனிசன், வினுஷா, மோனிஷா, டென்சன், நிவேகா, சோபிகா. மற்றும் சகோதரர்கள், மைத்துனர்கள்.

தகவல்: வி.மரியதாஸ் (கணவர்)
T.P.No: 078-622131 (கொழும்பு),0044-2088104517 (லண்டன்)
0044-7947793904 (லண்டன்), 061-7920743 (பிரான்ஸ்)
2302-944327 (ஜேர்மனி),0160-98109055 (ஜேர்மனி)


## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்–எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்–மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP**

| உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி Dr.P.K.Saamy J.D.G.A. NI. JP Hon. Prof. (IUMA) Sri Durgaadevi Manthirika Uchchada Peedam. | கொழும்பில் No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka. | நுவரெலியாவில் 33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097. |
|---|---|---|

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## லண்டன், பாரிஸ், பிராங்போர்ட் ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
Dr.ரா.தியாகராஜன் DHMS, AMRSH (LON.)

30.01.2002 முதல் ஐந்து நாட்கள் லண்டன், பாரிஸ், பிராங்போர்ட் நகரங்களுக்கு விஜயம் செய்ய இருக்கிறார். நீரிழிவு, ஆஸ்துமா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மை குறைபாடு, குழந்தை இன்மை மற்றும் நாட்பட்ட வியாதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

***லண்டன்: 079-84803488, 07833341693***
email: homoeocare @ rediffmail. Com
9843051099 @ bplmobile. Com
தொடர்பு: 0091-9843051099 (இந்தியா), 0094-77602513 (இலங்கை)
அக்டோபர் மாத இலங்கை விஜயம்: 24.01.2002 முதல் 27.01.2002 வரை



## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜனவரி 20 முதல் 27 வரை**
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.
கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஜனவரி 28 - 29 திகதிகளில்**
ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

**கல்முனையில் பெப் 02, 03 திகதிகள்.**
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் பெப் 09, 10 திகதிகள்.**
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்).
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

# தடை ஒரு 'தடைக்கல்'லாகி விடலாகாது

அலசுவது-இராஜதந்திரி

இலங்கையின் 54-வது சுதந்திரதினம் அனுஷ்டிக்கப்படும் இத்தருணத்தில், முழு நாட்டினதும் கவனம் இனப்பிரச்சனைத்தீர்வு பற்றியதாகவே இருக்கின்றது.

கடந்த 54 வருட காலத்தில் இலங்கை அரசியல் ரீதியாகப் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்த ஒரு நாடாகவே இருக்கின்றது. பிரதான நெருக்கடியாகவும், முடிவொன்றை எட்டாததாகவும் இனப்பிரச்சனையே இருந்து வருகின்றது.

ஒரு சாபக் கேடாகக் கடந்த 54 வருடகாலமாக இருந்து வரும் இனப்பிரச்சனை தீர்க்கப்படாவிடில் இலங்கைக்கு எவ்வகையிலும் ஒரு விமோசனம் கிடைக்கப்போவதில்லை, என்பதையே அறியமுடியும்.

பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் 138 வருடகாலம் இலங்கை ஆழ்ப்பட்டிருந்தது. ஆயினும் பிரிட்டிஷாரிடமிருந்து கிடைத்த சுதந்திரமென்பது இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எவ்வித அர்த்தத்தையும் கொண்டிராததாகவே இருக்கின்றது.

அரசியல் உரிமைகளைப் பரிபூரணமாக அனுபவிக்க முடியாது, தமது தனித்துவத்தையும் நிலை நிறுத்தமுடியாது அடக்கி, ஒடுக்கி ஆழ்ப்பட்டுவரும் ஒரு நிலையிலேயே இலங்கையின் தமிழ் மக்கள் இருந்து வருகின்றனர்.

இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் சிறிதாக ஆரம்பமான இனப்பிரச்சனை, தற்போது நாட்டைத் துண்டாட வைக்குமளவுக்கு விகாரமடைந்துள்ளது.

தீர்க்க தரிசனமும், பரந்த அரசியல் கண்ணோட்டமும் இல்லாது குறுகிய இனவாதத்தையே கொண்டிருந்த அரசியலாளர்கள் காரணமாகவே இன்றைய சந்ததி இலங்கையர்கள் ஒரு பரிபூரண சுதந்திரத்தை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

பிரதான பிரச்சனையான இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்று எட்டப்பட்டிருக்குமேயானால் இன்று பல்வேறு விதத்திலும் இலங்கை நல்லதோர் வளர்ச்சியைக் கண்டிருக்க முடியும்.

எத்தனையோ தடவைகள் இனப்பிரச்சனைத் தீர்வு பற்றிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஒவ்வொரு தடவையும் அவை குழப்பியடிக்கப்பட்டு வந்தன.

தமிழ்த்தலைவர்கள் ஜனநாயக வழிநின்று அரசியல் ரீதியாக இனப்பிரச்சனையை அணுக முன்வந்தனர். ஆனால் அம்முயற்சிகள் சிங்களப் பேரினவாத சக்திகளினால் நிராகரிக்கப்பட்டதோடு, தமிழினம் மீது அடாவடித்தனங்களே கட்டவிழ்த்தும் விடப்பட்டிருந்தன.

இறுதியாக தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட ஆயுதப் போராட்டமே ஒரே வழியென்ற முடிவுக்கு வந்ததையடுத்தே, இனப்பிரச்சனையின் தாக்கம் வெகுவாகவே அதிகரித்துள்ளதோடு, அதனை விரைந்து ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது.

'அடிக்குமேல் அடிவிழுந்தால் அம்மியும் நகரும்' எனப்படுவதுண்டு. கடந்த இரு தசாப்த காலமாக வடக்கு-கிழக்கில் ஒரு கொடிய யுத்தமாகவே இனப்பிரச்சனை நீடித்துச் செல்கின்றது. அறுபதினாயிரத்துக்குமதிகமான மக்களை இப்பிரச்சனை பலியெடுத்துள்ளது.

இராணுவ அணுகுமுறைகள் வலுவடைந்தமையால் ஏற்பட்ட தாக்கத்தை வடக்கு-கிழக்குப் பிரதேசம் மட்டுமல்ல. முழுநாடுமே அனுபவித்து வருவதாகவே இருக்கின்றது.

எனவே ஆயுதப்போராட்டத்தினால் ஏற்பட்ட பூதாகரமான விளைவுகளே, இனப்பிரச்சனைக்கு ஒரு விரைவான தீர்வை நோக்கிச் சிந்திக்க வைத்துள்ளது.

இலங்கையின் 54-வது சுதந்திர தினம் கொண்டாடப்படும் இத்தருணத்தில், நான்கு வருடங்களுக்கு முன்னர் பூர்த்தியான ஐம்பதாவது சுதந்திர தினமும் நினைவை விட்டகலாததாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் உச்சக்கட்டத்தின் போதே அந்த 50-வது சுதந்திர தினமும் நிறைவெய்தியிருந்தது.

வெற்றி நிச்சயம் (ஜயசிக்குறுய்) என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே அமைந்துள்ள 'ஏ-9' என்றழைக்கப்படும் கண்டிவீதியைக் கைப்பற்ற இராணுவம் போர் தொடுத்திருந்தது.

ஆனால் தமிழீழவிடுதலைப்புலிகள் கிளிநொச்சியில் மேற்கொண்ட ஓயாத அலைத்தாக்குதலையடுத்து 'வெற்றி நிச்சயம்' தாக்குதல் தோல்வியைத் தழுவியது.

அத்துடன் கண்டியில் ஐம்பதாவது சுதந்திர பொன்விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் விரிவாகச் செய்யப்பட்டிருந்த சமயம் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் செலுத்தப்பட்ட லொறி வண்டியொன்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் முன்புறத்தை முட்டி மோதி, அத்தலத்துக்கு பாரிய சேதத்தையும் ஏற்படுத்தி விட்டிருந்தது.

இச்சம்பவத்தையடுத்தே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தடையைப் போட்டிருந்தது.

கண்டி ஸ்ரீ தலதாமாளிகை மீது தாக்குதல் இடம் பெற்று நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. இதையொட்டி கடந்த வாரம் அவ்வழிபாட்டுத் தலத்தில் விசேட வழிபாடுகளும் இடம் பெற்றன.

தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்குமிடையில் தோற்றம் பெறும் நல்லெண்ணச் சூழலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது பற்றியே முக்கியமாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணும் விடயத்தில்



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களிடையே மட்டுமல்ல, தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் கூட தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தகுந்த பேச்சுக்கள் நடத்தப்படும் பட்சத்திலேயே இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண முடியுமென்ற எதிர்பார்ப்பு வலுவடைந்துள்ளது.

சர்வதேச சமூகம்கூட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியான பேச்சுக்கள் இடம் பெற வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது பாராளுமன்ற ஆட்சியை ஆரம்பித்த பின்னர் இதுவரை கையாண்ட நடவடிக்கைகள் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து உற்சாகமளிப்பவையாகவே இருக்கின்றன.

இனப்பிரச்சனைத்தீர்வுக்குரிய பேச்சுக்கள் விரிவான முறையில் பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியதாகவே இருக்கின்றன.

இப்பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் முழு அளவில் பங்குபற்ற வேண்டியதே அவசியமானதாகின்றது. இதுவரை காலமும் இராணுவரீதியாகவே பெரிதும் தமது பலத்தை நிரூபித்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகள், அரசியல் ரீதியாகவும் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த அனைத்து தமிழ் அரசியல் சக்திகளுமே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுக்களையே பெரிதும் வலியுறுத்தி நிற்கின்றன.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை பேச்சுவார்த்தைக்கான ஒரு தடைக்கல்லாக இருக்கலாகாது.

தம்மீதான தடை பேச்சுவார்த்தைகளின்போது இக்கட்டான நிலைமைகளுக்கே இடமளிக்குமென தமிழீழ விடுதலைப்புலிகள் கருதுகின்றனர்.

1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டுவரை பதினேழுவருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்தது. அக்காலப் பகுதியிலும் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் வலுவடைந்திருந்தன. ஆயினும் புலிகள்மீது தடைகொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கு அதன்மீதான தடை ஒரு குறுக்கீடாக இருக்கலாகாது என அன்றைய ஐ.தே.க அரசு கருதியது.

ஆயினும் 1998ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு புலிகள் மீது தடையைப் போட்டது. அத்துடன் உள்நாட்டில் மட்டுமல்லாது, சர்வதேச ரீதியாகவும் புலிகள் அமைப்பை ஒரு பயங்கர வாத அமைப்பென்ற பிரசாரத்தையும் சந்திரிகா அரசு முன்னெடுத்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகள் தொடர்பான போராட்டத்தின் வெளிப்பாடாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்வதன் மூலம் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களது நியாயமான அரசியல் கோரிக்கைகளையும் பயங்கரவாதம் சம்பந்தப்பட்டதாகவே கருதும் நிலை ஏற்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளது இராணுவ ரீதியான செயற்பாடுகள் காரணமாகவே அவர்கள் மீது தடை கொண்டுவரப்பட்டதாக சந்திரிகா அரசு தெரிவித்தது. ஆனால் கடந்த இருபது வருடகால யுத்தத்தில் பொதுமக்கள், மற்றும் அவர்களது சொத்துக்கள், உடமைகளுக்கு பாரிய சேதங்களை உண்டுபண்ணும் நடவடிக்கைகளில் அரசபடையினரும் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக கடந்தகாலங்களில் அரச படையினரது நடவடிக்கைகள் அவ்வப்போது 'அரச பயங்கரவாதம்' என்றுகூட அரசியல் விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் மட்டுமல்ல. அரச தரப்பு மேற்கொண்ட குண்டு வீச்சுக்கள் மற்றும் தாக்குதல் நடவடிக்கைகள் என்பவை காரணமாகக் கூட பாரியளவு சேதங்கள் அப்பாவிப் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருந்தன.

சமரசப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் பட்சத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது 'பயங்கரவாத அமைப்பு' என்ற முத்திரை குத்தப்பட்டிருக்குமேயானால், புலிகளோடு பேசுவோர் ஒரு பயங்கரவாத அமைப்புடன் பேச்சு நடத்தப்படுகிறது என்ற அபிப்பிராயத்தைக் கொண்டோராகவே இருப்பர். அத்துடன் தமக்கு வேண்டிய தருணத்தில் தமது நலன்களின் பொருட்டு புலிகளை நிராகரிக்கவும் அவர்களால் முடியும்.

அதேசமயம் தடைசெய்யப்பட்ட அமைப்பு, என்ற பட்டம் களையப்படாதவரை தம்மை ஒரு முழுமையான பங்காளிகளாக பேச்சுக்களில் ஈடுபடுத்துவதில் புலிகள் உளரீதியாகவும் இடைஞ்சல்களை எதிர்நோக்குவர்.

தம்மீதான தடையை அடிப்படையாக வைத்தே பேச்சுவார்த்தைகளை அரச தரப்புமேற்கொள்கின்றதென்ற எண்ணமும் அவர்களிடத்தே தோன்றும்.

அரச தரப்புக்கூட பேச்சுவார்த்தைகளில் பிணக்குகள், இழுபறி நிலை என்பவை தோன்றும் போது தடை செய்யப்பட்ட அமைப்பென்ற ரீதியில் புலிகளை இலகுவில் நிராகரித்துவிடவும் முடியும்.

இத்தகைய எதிர்மாறான காரணிகளின் நிமித்தமே இரு தரப்பும் கூடுமானவரை நல்ல புரிந்துணர்வோடு பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு எவ்விதத்திலுமான அழுத்தங்களற்ற ஒரு சூழ்நிலை அவசியமானதாகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள்மீதான தடையை நீக்கும் விடயத்தில் அரச தரப்பு எவ்வளவு தூரம் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகிறதோ, அவ்வளவு தூரம் சமரச முயற்சிகள்கூட குறுகிய கண்ணோட்டங்களுக்கு அப்பாற்பட்டவையாக இருக்குமென்றே எதிர்பார்க்க முடியும். ●

## அதிரடி அய்யாத்துரை



**டெலோவும்,** ஈ.பி.ஆர். எல்.எஃப்.பும் கப்பம் வாங்கி தங்களின்ர மானத்தையும் சேர்த்து சந்திக்கு இழுப்பதாக கூட்டணிக்காரர் பகிரங்கமாக முழங்கத் தொடங்கிட்டினம். உந்த ரெண்டு கட்சிகளோடும் கூட்டுச்சேர்ந்திருப்பதால 'தங்கட நற்பெயர்' கெட்டுப்போகுதாம். செல்வத்தாரும், சுரேஷும் தமிழ் கூட்டமைப்பினர் மாநாட்டில போய் உட்கார்ந்து கொண்டு அசடு வளிய விளக்கம் சொல்லுகினம். "ஆயுதங்களோடு இயக்கம் நடத்துற நாங்கள் என்ன செய்வது கப்பம் வாங்கித்தான் ஆகணும்... இப்போதைக்கு மன்னிச்சுவிட்டுடுங்கள் காலப்போக்கில் கப்பத்தைக் கைவிட்டிடுவோம்..." கைவிட வேண்டி வரப்போவது கப்பம் வாங்குவதையா,, கூட்டமைப்பையா...?

**அலரி மாளிகை** முன்னால வீதித்தடை நீங்கி வாகங்களெல்லாம் அட்டகாசமாய் போய் வாரதப் பார்த்திருப்பியள். அந்தவழியாப் போறப்போ அலரி மாளிகைப் பக்கம் புதுசா எதையாவது காண்கிறியளே...அஸ்வான் அணை மாதிரி மாபெரும் கொங்றீட் மதில் மாளிகையைச் சுற்றி முளைக்குது. எதிர்காலத்தில குண்டு வெடிக்கும். சொல்லாமல் சொல்லுவதாக இருக்கிறது உந்த மதில் நிர்மாணம். என்ன அவசரம் என்று புரியவில்லை. வெளிநாட்டு நிபுணர்கள் சகிதம் இரவு பகலா கட்டுமான வேலை நடக்குது!

**பம்பலப்பிட்டி** கலியாண வீட்டுல கப்பம் கேட்டது தொடர்பான செய்திகளுக்கு சம்பந்தப்பட்டவையள் மறுப்பு அனுப்பியிருக்கினம். தங்களைத்தான் விசாரணைக்காக பொலிஸ் கூட்டிக்கொண்டு போனதென்று கூறி லண்டன் பாஸ்போட்டோட வந்து விளக்கம் தந்தவை. குறிப்பிட்ட கலியாணத்தின்ர கதாநாயகனான மாப்பிள்ளையார் 'கொஞ்சம் ஒரு மாதிரியான' ஆசாமியாம். லண்டனில் உந்தாள் செய்த அட்டகாசங்களை தாங்கள் நேராப் பார்த்தவையாம். அதனால 'பெண்ணின் நலன் கருதி' கலியாணத்தை நிறுத்த முயற்சி பண்ணினம். கப்பம் எதுவும் கேக்கேல்ல எண்டு சொல்லினம். அப்போ உந்த பத்துலட்சம் கப்பம் கேட்ட கதை எப்படி முளைச்சதெண்டு கேட்கைக்க உது பக்கத்து கோயில்ல கலியாணத்துக்கு வந்திருந்த அமைச்சர் யூ.பி. கிளப்பிவிட்ட புரளியெண்டு சொல்லுகினம்... யாரைத்தான் நம்புவதோ... பேதை உள்ளம்!

**காணாமல்போன** படைவீரர்களின் பெற்றோர் சங்கம் ஒரு பரிதாபத்துக்குரிய சங்கமாக இருந்து இப்போது அதுவும் ஒரு ஆடம்பரமான அரசியல் சங்கமாகிப் போய்விட்டது. அண்மையில் வன்னிக்குப்போன சங்க தலைவரின் மனைவி லண்டன் போவது போல் பலசோடி சப்பாத்துக்களும் பட்டு வர்ணச் சேலைகளுமாய் காட்சியளித்தாராம். யுத்தம் யாரை சாவடித்தாலும் யாரையாவது வாழவைக்கவும் செய்கிறது.

**இவ்வாரப் பொன்மொழி** கலைஞர் சொன்னது:

ஊர் வாயை மூடு-அல்லது உன் செவிகளை மூடு.
ஊர்வாயை மூடுவது கடினம். உன் செவிகளை மூடுவது சுலபம்!!

# வன்னிக்கு லொறிகளை அனுப்பி கணக்குக்காட்டுவது
# அரசியல் விளையாட்டு என்கிறார் பிரஜைகள் குழு தலைவர்

வன்னிப் பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடை நீக்கம் என்று இலங்கை அரசாங்கத்தால் பெரிதாக விளம்பரப்படுத்தப் படுவது வெறுமனே ஒரு கண் துடைப்பாகும் என்று வன்னிப் பிராந்திய பிரஜைகள் குழுவின் தலைவர் வண.எம்.எக்ஸ்.கருணாரத்தினம் அடிகளார் கடந்த வாரம் தெரிவித்துள்ளார். வன்னிப் பிரதேசத்திலுள்ள அனைத்து உட்கட்டமைப்புகளும் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுள்ள நிலையில், இவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்குரிய அவசியமான பொருட்கள் எடுத்துவரப்படுவதற்கு அனுமதிக்கப்படாதிருக்கும் போது மொத்த அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவது சாத்தியமற்றது. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வண.பிதா கருணாரத்தினம் அடிகளார் 'உதயன்' பத்திரிகைக்கு கடந்த வாரம் மல்லாவியில் வைத்து அளித்த பேட்டியின்போதே இக் கருத்தை வெளியிட்டார். விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்துக்கென தடை விதிக்கப்பட்டிருந்த பொருட்களுக்கான அத்தடை நீக்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுவது வெறும் கண்துடைப்பு என்றும் அப்பிரதேசத்துக்கு லொறிகள் போவதையும் வருவதையும் கணக்கெடுப்பதென்பது ஒரு அரசியல் விளையாட்டு என்றும் அடிகளார் வர்ணித்தார்.

"தடை தளர்த்தல் அமுலாக்கப்படும் தன்மையினை சீர்தூக்கிப் பார்க்கும்போது, இத்தகைய நடைமுறை ஒரு சுமுகமான நிலையை உருவாக்கும் என்று தோன்றவில்லை" என்று அடிகளார் கருத்துக் கூறியிருக்கிறார்.

"வன்னிப் பிரதேசத்தை கடந்த 12 வருடங்களாக நிர்மூல மாக்கி விட்டு பொருளாதாரத் தடையை நீக்கி விடுவதனால் மட்டும் என்ன பலன் என்று கருணாரத்தினம் அடிகளார் கேள்வி எழுப்பியுள்ளார்.

"இங்கு வாழும் மக்கள் தாங்கள் வசிக்கும் இல்லம் என்று சொல்வதற்கு ஒரு கட்டடமோ கட்டமைப்போ இல்லை. போக்குவரத்துக்கான சாலைகள் எதுவுமில்லை. நீர்நிலைகள் எவையும் தகுந்தபடி பராமரிக்கப்படவில்லை. மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றுக்கான கட்டடங்கள் எவையும் இல்லாமையினால் தக்கபடி இயங்க முடியவில்லை. அரசாங்கப்பணிமனைகள் எவற்றுக்கும் தளபாடங்கள் எதுவும் கிடையாது. இத்தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கேற்றபோதுமான நிதியும் வழங்கப்படவில்லை. இத்தகைய சூழ் நிலையில் தடை நீக்கப்பட்டு விட்டதாகக் கூறி லொறிகளின் தொகையைக் கணக்கெடுத்து விளையாட்டுக் காட்டுவதில் பயன் என்ன?

"பயிர்ச் செய்கைக்கான காலம் தொடங்கிவிட்டது. இருப்பினும் பசளைகளைப் பாதுகாத்து வைக்க வசதிகள் எதுவும் கிடையாது. யூரியா போன்ற பசளைகளைக் கொள்முதல் செய்ய விவசாயிகளிடம் பணம் கிடையாது. அவ்வாறு அவற்றை வாங்கினாலும் அவற்றைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள இடம் எதுவும் இல்லை. கடந்த இரு தசாப்தங்களாக வன்னிக்குரிய மேம்பாட்டுக்கான நிதியை அரசாங்கம் தரவில்லை. ஆனால் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை முற்றாக அழித்ததுடன் பொருளாதாரத் தடையை விதிக்கவும் இராணுவ பலத்தைப் பிரயோகிக்கவும் அரசாங்கம் முயன்று வந்திருக்கிறது.

"மக்களிடமோ ஏனைய நிறுவனங்களிடமோ பணவசதியும் உரிய கருவிகளும் இல்லாத நிலையில் அனுமதிக்கப்படும் பொருட்களைக் கொள்முதல் செய்வது எங்ஙனம்? இங்கு அடிப்படையான கட்டமைப்பை உருவாக்குவதில் அரசாங்கம் துரிதம் காட்ட வேண்டும். அதன் பின்னர் தான் பொருளாதாரத்தடை நீக்கத்தினால் உண்மையான பலன் கிடைக்க முடியும்.

"இலங்கையின் கடற்கரையில் மூன்றில் இரு பங்கு தமிழர்களின் தாயகத்திலுள்ளது. இருப்பினும் கடற்றொழிலைத் தமது சீவனோபாயத்துக்குப் பயன்படுத்தும் மீனவர்கள் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய வாழ்க்கை வழிகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான சீவனோபாயத் துக்கு வழிவகுக்கப்பட்டால் மட்டுமே அவர்கள் நிலைமை வழமைக்குத் திரும்பும்.

"இராணுவக் கட்டுப்பாட்டில் இப்பிரதேசம் இருந்த காலத்தில் வாய்க்கால்களின் மதகுகள் முற்றாக மூடப்பட்டுவிட்டன. இதனால் வன்னியின் இயற்கைச் சூழலின் சமநிலை பாதிக்கப்பட்டு விட்டது. அண்மையில் பெய்த பெருமழையினால் பெருவெள்ளம் ஏற்பட்டு இப்பிரதேசம் பெரும் பாதிப்புக்குள்ளானது. இருப்பினும், இப்பிரதேசத்திலுள்ள பெரிய குளமான வன்னிக் குளத்தில் அரைவாசிக்குக்கூட தண்ணீர் இல்லை. இராணுவத்தினர் பாதுகாப்பு அரண்களை அமைப்பதற்காக பெருவாரியான மண்ணைத் தோண்டி எடுத்தமையினால் இந்நிலை உருவானது. புளியங்குளம் முதல் ஓமந்தை வரையிலுள்ள வயல் நிலங்களில் இராணுவம் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளது. இதனால் விவசாயிகள் தங்கள் வயல்களில் வேலை செய்ய முடியாதிருக்கிறது. அவர்கள் வீதிகளில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது."

"சீமெந்து போன்ற கட்டுமானப் பணிக்கான அத்தியாவசியப் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் லொறிகளை அனுப்பி வைப்பதானது வெறுமனே ஒரு பொய்த் தோற்றமே அல்லாமல் வேறொன்றுமில்லை. வீடமைப்புகளுக்கான நிதியை முதலில் அனுப்பிவைக்கட்டும். அடுத்து மக்களைக் குடியமர்த்தட்டும். நீர்ப்பாசனக் குளங்களை புனரமைக்கட்டும். பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் போக்குவரத்துக்கேற்ற சாலைகளைச் செப்பனிடட்டும். இவை போன்ற உட்கட்டமைப்புக்கான அடிப்படைகளை உருவாக்கப் போதுமான பொருட்களை லொறிகளில் அனுப்பி வைப்பதன் மூலம் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கட்டும்."

இவ்வாறு வண.கருணைரட்ணம் அடிகளார் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார். ■

# ஒரு நாள் என்ன நடந்தது தெரியுமா?





"ஒரு நாள் என்ன நடந்தது தெரியுமா? ஒரு மாடலிங் ஷோ நடந்துட்டு இருந்துச்சு. நான் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கிட்டு இருந்தேன். என் ஃப்ரெண்ட் ஒரு சவால் விட்டா. நான் சேர்ல ஏறி நின்னு ஐஸ்கிரீமை நக்கிச் சாப்பிட்டா அவளோட வாட்ச் சை தர்றதா சொன்னா. நான் கவலையே படலை. சேர்ல ஏறுனேன், ஐஸ்கிரீமை அவ சவால் விட்ட மாதிரியே சாப்பிட்டேன். எல்லோரும் என்னையே பார்த்தாங்க. என் டைரக்டர் என்னைத் திட்டினாரு. ஆனா வாட்ச் ஜெயிச்சேன். ஏன்னா எனக்கு போட்டினா ரொம்பப் பிடிக்கும்" என்று சொல்லும் இருபத்தொரு வயது ஐஸ்கிரீம் நேஹா தூப்பியா. இந்த வருட மிஸ் இந்தியா-யுனிவர்ஸ் பட்டத்தை வென்றவர்.

பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் டெல்லியில் என்றாலும் மாடலாக நடைபோட வசதியாக மும்பையில் இருக்கிறார். படித்தது வரலாறு. புது டெல்லியின் மிகப் பிரபலமான ஜீஸஸ் அன்ட் மேரி கல்லூரியில்.

"அழகியா இருக்கிறவங்களுக்கு அறிவு இருக்காது என்கிறாங்க. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அழகியா இருப்பது என்பது ரொம்பக் கஷ்டமான விஷயம். அதுல நிறைய சாமாச்சாரங்கள் அடங்கியிருக்கிறது. அதுவும் போட்டிகள்ல கலந்துக்கணும்னா அழகு மட்டும் போதாது. பேசறவிதம், பழகுற விதம், பிரச்சனைகளை சமாளிக்கிற விதம்னு எல்லாத்தையும் கவனிக்கிறாங்க. அதனால வெறும் அழகு மட்டும் வெற்றியைக் கொடுத்துடறதில்லை" என்று வழக்கமாய் அழகிப் போட்டிகளில் பங்கு பெறும் அழகிகள் சொல்லும் சமாச்சாரத்தை அழகான பல்வரிசை தெரிய சொல்கிறார்.

ஆனால் வழக்கமாய் மிஸ் இந்தியா போட்டிகளில் கலந்து கொள்ளும் அழகிகளிலிருந்து இவர் கொஞ்சம் வித்தியாசமானவர். பொதுவாய் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் அப்போதுதான் வளர்ந்து வருபவர்களாக இருப்பார்கள். ஆனால் நேஹா மாடலிங் உலகில் பிரசித்தமானவர். கிட்டத்தட்ட மூன்று வருடங்களாய் பல விளம்பரங்களுக்கு மாடலாய் இருந்திருக்கிறார். ரீபோக், ஏர்டெல், மாருதி வேகன் ஆர், மிட்சுபிஷி, லேன்சர் என்று பிரபலமான விளம்பரங்களில் தோன்றியவருக்கு மிஸ் இந்தியா போட்டியில் கலந்து கொள்வதில் எந்தத் தயக்கமும் இருந்திருக்கவில்லை. இதுவும் வழக்கத்துக்கு மாறான ஒன்று. மாடல் அழகிகளின் விதிப்படி பிரபலமடைந்தால் பிறகு இதுபோன்ற போட்டிகளில் கலந்த கொள்ள மாட்டார்கள். அதற்கு மிக எளிமையான காரணம் தோற்று விட்டால் அசிங்கம், மார்க்கெட் போய்விடும்.

"எனக்கு அதுபோன்ற தயகம் எதுவும் இல்லை" என்று கூலாக சொல்கிறாள் நேஹா.

ஆண்களை பற்றி மிக மிக 'நல்ல' எண்ணங்களை வைத்திருக்கிறார் இந்த இந்திய அழகி.

"ஆண்கள் மிக பலவீனமானவர்கள். பெண்கள்தான் சக்தி. தொண்ணூறு சதவீத ஆண்களுக்கு முட்டியில்தான் மூளையிருக்கிறது. நான் பெண்ணாக இருப்பதில் ரொம்ப சந்தோஷம்" நேஹா ஆண்களைப் பற்றி கூறும் நான்கைந்து 'நல்ல' வார்த்தைகள் இவைதான்.

ஆண்கள் மேல் வெறுப்பு இருந்தாலும் நேஹாவக்கு நிறைய ஆண் நண்பர்கள் உண்டு என்று மாடலிங் உலகம் சொல்கிறது. அவர்கள் தொண்ணூறு சதவீதத்தில் சேர்த்தியா அல்லது மீதமுள்ள பத்து சதவீதமா என்பது குறித்து தகவல் இல்லை.

ஆண்களை தைரியமாக அட்டாக் செய்யும் நேஹா பயப்படுவது நாய், பூனை, குருவி, போன்ற வாயில்லா ஜீவன்களுக்கு. "ஐயோ பார்த்தாலே ஓடி விடுவேன்" என்று தன்னிலை விளக்கம் கொடுக்கிறார். உயரம் 5.7 என்றும், மற்ற அளவுகள் 33-24-36 என்று அவரது அழகின் அளவுகளாக மிஸ் இந்தியா செய்திக் குறிப்பு கூறுகிறது. கண்ணால் அளந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

நேஹாவுக்கு ரொம்பப் பிடித்த விஷயம் விளக்கு அணைப்பதாம் படுப்பதற்கு அல்ல பக்கத்து வீட்டுக்கு. "மாடியிலிருந்து கீழே இறங்கும்போது எல்லோர் வீட்டு காலிங்பெல்லையும்அழுத்திவிட்டு கீழே ஓடி வந்துவிடுவேன். கீழே வந்ததும் படிக்கட்டுக்கு கீழே இருக்கும் மெயின் சுவிட்சை ஆஃப் பண்ணிவிடுவேன். ஒரே இருட்டாயிடும். இது சின்ன வயசுல அடிக்கடி செய்யும் குறும்பு" என்கிறார் நேஹா. பெரிய வயதில் என்ன குறும்பு செய்கிறார் என்பதற்கு பதிலில்லை.

"சரி, மிஸ் இந்தியா ஆகவிட்டீர்கள் அதைக் கொண்டு என்ன செய்வீர்கள்?

இது ஒரு நிருபரின் கேள்வி.

'ஏழைக் குழந்தைகளுக்கு உதவுவேன், வறுமையை ஒழிப்பேன்' இப்படியெல்லாம் வரும் வழக்கமான ஸ்டேட்மென்டுகள் நேஹாவிடமிருந்து வரவில்லை. அவர் சொன்ன பதில்

சந்தோஷமாய் சிரிப்பேன்.

# மன்மத ரகசியம்

காதலிக்கும்போது காதலிக்காக கவிதை எழுதிய பல இளைஞர்கள் சில வருடங்களுக்குப்பின்-கவிதை என்றால் என்ன என்பதையே மறந்திருப்பார்கள். 1000 ரூபாய் பணம் கொடுத்து மனைவிக்காக ஒரு கவிதை எழுதச் சொன்னாலும் இவர்களால் முடியாது.

இவ்வாறில்லாமல் காதலித்த போது கொடுத்தது போன்ற நல்ல பரிசுகள், பல இடங்களுக்கு அழைத்துப்போவது போன்றவற்றைத் தொடர வேண்டும். பிறந்த நாளும், திருமண நாளும் உங்கள் மனைவிக்கு மிகவும் முக்கியம். அதை ஞாபகம் வைத்து பரிசளியுங்கள்.

காவியங்களில், திரைப்படங்களில் காண்பது போல் முழு நிறைவான குறைகள் இல்லாத துணையை எதிர் பார்க்காதீர்கள். காதலிக்கும்போது உங்களை மிகவும் நேசித்த முழுமையான ஒரு ஆண்மகனை, பெண்ணைச் சந்தித்த சந்தோஷத்தில் இருப்பீர்கள். யாராவது உங்கள் காதலர் காதலியைப் பற்றி ஏதேனும் குறை கூறினால் உங்களால் தாங்கிக் கொள்ள முடியாது. ஆனால் திருமணம் ஆன சில நாட்களிலேயே உங்கள் பார்வை வித்தியாசமாகிறது. உங்கள் காதலர் காதலியும் குறை உள்ளவர் தான் என்பதை உணர்கிறீர்கள். இப்போது உங்கள் நண்பர்கள், உறவினர்கள் கூறியவை உண்மை என நம்புகிறீர்கள். இப்போது காதலரை வெறுக்கத் துவங்கு கிறீர்கள்.

முன்னர் 100 சதவீத அப்பழுக்கில்லா காதலர் இப்போது 100 சதவீத சுயநலமியாக, சோம்பேறியாக உங்களுக்கு காட்சி தருவார். அப்பழுக்கில்லாத துணையைத் தேடுவது, எதிர்பார்ப்பது 100க்கு 100 சதம் காதலை திருமணத்தை சீர் குலைக்கும் ஒரு வழியாகும்.

தேவைக்கு ஏற்ப நெளிவு களோடு நடந்து கொள்ளுங்கள்" எப்போதும் தான் சொல்வது. தான் சரி என்று ஒருவர் நடந்து கொண்டால் திருமணம் வெகுநாட்கள் நிலைப்பது கடினம். ■

# "வீடு போரடித்தது ஓடி வந்துவிட்டேன்"

## ஜப்பானின் புதிய கவலை

ஜப்பான் மக்கள் திடீர் சந்தோஷத்திலிருக்கிறார்கள். காரணம் அவர்கள் ராஜாவுக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. தற்போதைய பட்டத்து இளவரசர் நாகு ஹிட்டோம சாகோ தம்பதிகள் திருமணமாகி எட்டாண்டுகள் குழந்தை இல்லாமல்தான் இருந்தனர். இப்போது பட்டத்து இளவரசி பிறந்திருக்கிறாள். ஜப்பான் மக்களுக்கு இதில் பெரிய ஆனந்தம். அவர்கள் எப்போதுமே அரச குடும்பத்துடன் உறவாடுவதில் சந்தோஷப்படுவார்கள்.

ஜப்பானின் அரசராக ஆண் வாரிசு வேண்டும். அடுத்ததாக ஆண் வாரிசு பிறந்தால் இந்த இள வரசியின் முக்கியத்துவம் குறைந்து விடலாம். ஆனாலும் ஜப்பானில் அரசிகளும் உண்டு. இருந்தாலும் தொடர்ந்து ஆண்களே பெரும்பாலும் அரச வாரிசாக இருந்துள்ளனர். இதெல்லாம் பெரிய இடத்து சமாச்சாரம். ஆனால் ஜப்பானில் சாதாரண பெண்களின் நிலை சற்றுக் கவலைக்கிடமாகவே இருக்கிறது.

ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு பெரியதுதான். இருப்பினும் எல்லாப் பெண்களுக்கும் நல்ல



வாழ்க்கை அமைவதில்லையே என்கிறது ஒரு ஆய்வு. இந்தக் குறையின் பின்னணி என்ன? பொருளாதார வளர்ச்சியும் அதனுடனே வளரும் சமூக பண்பாட்டு மாற்றங்களும்தான். இந்த பண்பாட்டு மாற்றங்கள் சில சமயங்களில் விரும்பத்தகாத அம்சங்களையும் கொண்டுள்ளதே!

ஷிபுயா என்றொரு டோக்கியோவின் பிரதான இடம். வருடத்தில் எல்லா நாட்களிலும் 24 மணிநேரமும் கேளிக்கைக்காரர்களுக்கு சொர்க்கபுரியாக விளங்கும் இடம் இது. 20 வயதிற்கு மேற்பட்ட 'பசையுள்ள' ஆண்களுக்கு தங்கள் விருப்பங்களுக்குரிய டிஸ்கொதெகள், பார்கள், 'பலான' பார்லர்கள் (அழகு நிலையம் என்ற பெயரில் இயங்குபவை) ஏராளம். போதாக்குறைக்கு வீட்டை விட்டு ஓடிவந்த டீன் ஏஜ்கள் கூட்டமும் கூட அங்கு ஏகதும்மாளம் தான். இங்கேதான் டீன் ஏஜ்டீன் ஏஜ்ஜுக்கும் குறைவான வயதுள்ள பெண்களும் கெட்டுப் போகிறார்கள்.

அமெரிக்காவில் இதுபோன்ற இடங்கள் பல இருந்தாலும் ஜப்பானுக்கு இது புதுசு. ஜப்பானியர்கள் தங்கள் கலாசாரத்தை மிகவும் போற்றுபவர்கள். ஆனால் இப்போது வளரும் அடுத்த தலைமுறை பழசை சிந்திப்பதில்லை. பையன்கள் மட்டுமல்லாது பெண் பிள்ளைகளும் வீட்டை விட்டு ஓடி வந்து லூட்டி அடிப்பது ஜப்பானியர்களுக்கு அதிர்ச்சி அளிக்கிறது. இது குறித்து டைம் பத்திரிகை விரிவாக ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறது.

டீன்ஏஜ் பெண்கள் இப்படி ஓடி வர முக்கியக் காரணமாய் பெற்றோரோடு ஏற்படும் மோதல்களைத்தான் சொல்கிறார்கள். இம்மோதல்களின் மையம் வறுமை, யந்திரத்தனமான வாழ்க்கை முறை இவற்றில் பொதிந்துள்ளது. இளமையில் வறுமை கொடியது என்கிறார் ஔவையார். வறுமையினால் பெற்றோர்களால் கொடுக்க முடியாதவற்றை வெளியில் தங்கள் சொந்த முயற்சியில் ஈட்டி விட வீட்டை விட்டு வெளியேறும் இவர்கள், தஞ்சமடையும் இடம்தான் ஷிபுயாவின் தெருக்கள். தொலைதூர பிரதேசங்களிலிருந்தும் பெண்கள் வருகிறார்கள். வந்த புதிதில் சிறுசிறு வேலைகளில் ஈடுபடும் இவர்கள் நாளடைவில் வேறு வகையிலும் சம்பாதிக்க விழைகிறார்கள். 'பசையுள்ள' ஆண்களின் பார்வையில் இவர்கள் பட்டுவிட்டால் பிறகு காசுக்கென்ன பஞ்சம்? சிறிது காலம்வரை சிறிய அளவில் நடந்து வந்த இது போன்ற சம்பவங்கள் இப்போது பெருகி விட்டதாம்.

பதிமூன்றே வயதுள்ள பியூஜி கூறுகிறாள்:

"வீடு போரடித்து விட்டது. ஓடி வந்து விட்டேன். இங்கு வாழ்க்கை உல்லாச மயமாகத்தான் இருக்கிறது. இசை, நடனம், ஊர் சுற்றல், புதிய புதிய நட்பு, புதுப்புது அனுபவங்கள் என்று வாழ்க்கை இன்பமயமாக இருக்கிறது. எனக்கு வீட்டைப் பற்றி இப்போதைக்கு கவலையில்லை."

பியூஜி வீட்டை விட்டு வெளியேற காரணம், தந்தை அவளை அடித்து விட்டார். இதுபோன்ற பெண்களுக்காகவே மெய்ஜி போன்ற வாலிபர்கள் காத்திருக்கிறார்கள். மெய்ஜியின் வேலை அழகான துடிப்பான பெண்களை திரட்டிக் கொண்டு போய் பலான விடுதிகளில் ஒப்படைப்பது. 'இதில் செம துட்டு' என்கிறான் மெய்ஜி. அழகு நிலையங்கள் என்ற பெயரில் இயங்கும் பலான விடுதிகளே இவர்களது எஜமானர்கள். ஓடிப்போன பெண்களுக்கு 'இதிலும்' உடன்பாடுதான்.

"பெண்களுக்கு காசு சம்பாதிக்க ரெடிமேடாக இருக்கிறது அவர்களது உடல், அதை, அவர்கள் பயன்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது" என்கிறார் டோக்கியோ காவல்துறை அதிகாரி ஒருவர். ஆனால், மைனர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது குற்றம். ஒரு கடையை மூடினால் நூறு கடைகள் முளைக்கின்றன. என்ன செய்வது என்று புலம்புகிறார்.

மைனர் பெண்களை அப்படியே பிடித்தாலும் என்ன செய்வார்கள்? அவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சீர்திருத்தப் பள்ளிகளில் கொண்டு போய் விட்டு விடுவார்கள். பல பெண்கள் இப்பள்ளிகள் வீட்டை விட கொடுமையானவை என்கிறார்கள். அவ்வளவு கண்டிப்பாம்! சில பெண்கள் இங்கிருந்தும் ஓடிவிடுகிறார்கள். இங்கும் 15 வயதுவரைதான் வைத்திருக்க முடியும். அதன் பிறகு (15 வயதிற்கு மேல்) அவர்கள் மேஜர் ஆகிவிடுகிறார்கள். வெளியேறிய பின்பு மீண்டும் சித்தம் போக்கே சிவன் போக்கு என்றால் என்ன செய்ய? என்கிறார் இப்பள்ளியின் தலைமையாசிரியர் ஒருவர்.

இப்படி ஓடி வரும் பெண்கள் எல்லோருமே சுற்றித் திரிவதில்லை. ஒரு கட்டத்திற்கு பிறகு சிலர் வீட்டிற்கு திரும்பி விடுகிறார்கள். மேலும் இவர்களிடம் செல்போன் இருப்பதால் பெற்றோர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளவும் முடியும். மேலும் ஈமெயில் போன்றவற்றாலும் தொடர்பு கொள்ளலாம். எனவே, பயமில்லாமல் ஊர் சுற்ற முடிகிறது என்கிறார்கள்.

எனவே, ஒரு விதத்தில் நாங்கள் ஓடி வந்தவர்கள் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் வீடு திரும்பலாம். அது எங்கள் சூழ்நிலைகளைப் பொறுத்தது. பசி, காசில்லாது போனால், புதிய ஆடைகள் தேவைப்பட்டால், தங்குவதற்கு இடமில்லாமல் போனால்... இப்படி பல்வேறு காரணங்களால் வீடு திரும்புவோம் என்கிறார்கள். என்றாலும் எப்படி பயமில்லாமல் நிச்சயமற்ற வாழ்க்கை இந்த சிறு வயதில் சாத்தியம்? வீட்டு நிலவரத்தை யோசித்துப் பார்த்தால் இது பரவாயில்லை. மேலும் இதில் கிடைக்கும் மட்டற்ற மகிழ்ச்சி வேறு எதிலாவது இருக்கிறதா? என்று கேட்டு அதிர வைக்கிறாள் ஒரு இளம்பெண். எல்லோருக்குமே மட்டற்ற மகிழ்ச்சிதானா? என்றால் இல்லை.

கிடைக்கின்ற ஆட்கள், அமைகின்ற நட்புகள், மோசமானவையென்றால் நொரிகோ காமிக்கு ஏற்பட்ட கதிதான். 15 நிமிடங்களில் வீட்டிற்கு வந்துவிடுவேன் என்று பெற்றோரிடம் தெரிவித்த பெண் அடுத்த சில நிமிடங்களில் கொல்லப்பட்டாள். காரணம்; ஒரு 34 வயது செக்ஸ் வெறியன். காமிக்கு வயது 14 தான்! தன் பாய்பிரண்டு சரியானவன் இல்லை என்பதால் 16 வயது கோமிகா வழிப்பறி திருட்டு முயற்சி ஒன்றில் இறந்து போனாள்.

இருப்பினும், ஓடிப்போகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகிறது என்கிறது புள்ளி விபரங்கள். இதற்கு நேர்மாறான விவகாரங்களும் உண்டு. அது என்ன?

மாய்ஜி எனும் பெண்ணுக்கும் அவள் தோழிகளுக்கும் ஒரு பழக்கம். பள்ளியில் படிக்கும் இவர்களுக்கு ஓடிப்போகும் பெண்களைப் போல வாழ ஆசை. அதற்கு இவர்கள் கடைபிடிக்கும் வழிமுறை 'அதிரடி'யானது. முதலில் தங்கள் செல்போன் மூலம் ஒரு ஆளை மடக்குவார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரச்சொல்வார்கள். சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பார் ஒரு பெண். திடீரென்று நாலைந்து பேர் அந்த ஆளைச் சூழ்ந்து கொண்டு 'கொரில்லா' அட்டாக் செய்வார்கள். அந்த ஆளின் பணத்தை பறித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள். பணம் தீர்ந்த பிறகு வேறொரு ஆள்.

இப்படி சராசரி பெண்களின் நிலை போய்க் கொண்டிருக்க இளம் அரசியின் கொண்டாட்டங்களுக்கும் குறைவேயில்லை. தங்கள் பண்பாட்டு பெருமையை விட்டுக் கொடுக்காதவர்கள் ஜப்பானியர் என்ற பெயருக்கு ஆபத்து வந்துவிட்டதையே இது போன்ற சம்பவங்கள் காட்டுகின்றனவோ?...

## இங்கிலாந்துப் பிரதமர்

## இங்கிலாந்துக்கு விஜயம்



தீவிரவாதத்துக்கு எதிராக நாடுகளின் ஆதரவைப் பெற கடந்த மூன்று மாதங்களாக முந்நூறு நாடுகள், தீவுகளுக்கு மேல் பயணம் செய்து கொண்டேயிருக்கும் இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயர், அண்மையில் இங்கிலாந்து சென்றார். அங்கு மூன்று மணிநேரம் இருந்துவிட்டு மீண்டும் தீவிரவாதத்துக்கு எதிராக ஆதரவு திரட்டும் பயணமாக சோமாலியா சென்றார். அங்கு பட்டினியால் இறக்கும் தறுவாயில் இருந்த மக்களிடையே தீவிரவாதத்துக்கு எதிராக பேசி அவர்களது ஆதரவைப் பெற்றார். ■

## முஷாரஃப் கொள்கைப் பரப்பு அமைச்சர்

உலக அரசியலில் திடீர் திருப்பமாக பாகிஸ்தானின் அதிபராக ஜார்ஜ் புஷ் இன்று பதவியேற்றுக் கொண்டார். அவரின் கொள்கை பரப்பு மந்திரியாக முஷாரஃப் பதவியேற்றார்.

பெருகிவரும் அமெரிக்காவின் செலவுகளை குறைக்கவே இந்த மாற்றம் என்று அமெரிக்க தரப்பில் கூறப்படுகிறது.

"அமெரிக்க தலைவர்கள் தினமும் பாகிஸ்தான் வந்து போவதற்கு, அங்கிருந்து தொலைபேசியில் பேசுவதற்கு,

பேச்சு தயாரித்து ஃபெக்ஸ் அனுப்புவதற்கு என்று நிறைய செலவு ஆகிறது. புஷ் பாகிஸ்தான் அதிபராவதால் இவையெல்லாம் குறையும்" என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் காலின்பாவெல் இஸ்ரேயிலில் கூறினார். காஷ்மீர் பிரச்சனையை தீர்ப்பதற்காக பாவெல் இஸ்ரேல் போயிருப்பது குறிப்பிடத்தக்கது. ■

## இராணுவ உடையில் புஷ்



பதவியேற்பின்போது முன்னாள் அதிபரைப் போலவே புஷ் ராணுவ உடையில் இருந்தார். "இந்தியாவுடன் நல்லுறவு வளர்ப்பீர்களா?" என்று நிருபர்கள் கேட்டதற்கு, "முதலில் முஷாரஃபை போல மீசை வளர்க்கப் போகிறேன்" என்று நகைச்சுவையாய் பதிலளித்தார் புஷ். ●


## காஷ்மீர் பிரச்சனை தீர்ந்தது படைகள் வாபஸ்!

பாகிஸ்தான் அதிபராக புஷ் பதவியேற்றதால் முஷாரஃப் கொட்டம் அடங்கியது. காஷ்மீர் பிரச்சனை தீர்ந்தது என்று புதுடெல்லியில் நடந்த ஒரு கவிதைப் புத்தக வெளியீட்டு விழாவில் வாஜபாய் வாழ்த்திப் பேசினார்.

"இனிமேல் எந்த விஷயத்துக்கும் அனுமதி கேட்டு அமெரிக்கா பறக்க வேண்டியதில்லை. பாகிஸ்தானுக்குப் போனால் போதும். இது இந்த அரசின் சாதனை. இனி பாகிஸ்தான் அதிபர் புஷ்ஷின் யோசனைப்படி எல்லையிலிருந்து படைகள் வாபஸ் பெறப்படும்" என்று அவர் கூறினார். ●

## அடுத்த அமெரிக்க அதிபர் பின்லேடன்

## டைம் பத்திரிகை கருத்துக்கணிப்பு



அமெரிக்காவின் அடுத்த அதிபராக யார் வரவேண்டும் என்று அமெரிக்காவில் டைம் பத்திரிகை கருத்துக் கணிப்பு நடத்தியது. அதில் ஒசாமா பின்லேடன் எழுபத்தைந்து சதவீத வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கிறார். அமெரிக்கர்கள் பயப்படுவது அவருக்கு மட்டும்தான் என்பதால் அவர் அதிபரானால் அரசு இயந்திரம் ஒழுங்காய் இயங்கும் என்று 68.3 சதவீத மக்கள் கூறியிருக்கிறார்கள். இவருக்கு அடுத்த நிலையில் ஆந்த்ராக்ஸ் கிருமி இருக்கிறது. இதற்கும் அமெரிக்க மக்கள் கட்டுப்படுவார்கள் என்று அந்தக் கருத்துக் கணிப்பு சொல்கிறது. மூன்றாவது இடத்தை கோக்கும் பெப்ஸியும் பிடித்திருக்கின்றன. □

யாவும் கலப்படமான கற்பனை

# சினிவிசிட்

## மினி சினி

✈ காதல் மன்னன் அமர்களம் போன்ற வெற்றிப்படங்களை தயாரித்த வெங்கடேஸ்வராலயம் பட நிறுவனம் தற்போது சூர்யா ஹீரோவாக நடிக்கும் 'ஸ்ரீ' மற்றும் பிரபுதேவாவின் 'அலாவுதீன்' ஆகிய படங்களைத் தயாரிக்கிறது.

✈ கடந்த 22 வருட கால சினிமாத் துறையில் தனக்கென தனியிடத்தை பிடித்திருக்கும் விஜயகாந்தின் வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளிவந்துள்ளது.

✈ இரவுப் பாடகன் மூலம் அறிமுகமாகும் குமதாஜ் நீச்சல், சிலம்பம், கராத்தே போன்ற பயிற்சிகளில் தேறியுள்ளாராம்.

✈ 'ஜெமினி' படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நடிப்பதற்கு, மும்பாயில் இருந்து வந்திருக்கும் நடிகை கிரண் தமிழ் கற்றுக் கொள்வதில் ஆர்வமாக உள்ளாராம்.

✈ அப்பாராஜித் பிலிம்ஸ் தயாரிக்க சூர்யா நடிக்கும் 'மௌனம் பேசியதே' பட தொடக்க விழாவில் விஜய், விக்ரம்,ஜோதிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

✈ முதல்வன், இந்தியன் போன்ற படங்களுக்கு ஸ்டில் போட்டோ கிராபராக பணிபுரிந்த ரமணி தன் நண்பர் ரகுவுடன் இணைந்து சென்னை ஆழ்வார் ரம் விளக்கு ஒயிட்ஸ் ரோட்டில் 'ஸ்ரீராம் கலர் லாப்' ஒன்றை நிறுவியுள்ளார்.

✈ சென்ற ஆண்டு விக்ரமன் இயக்கத்தில் வெளிவந்த 'வானத்தைப் போல' என்ற படம், சிறந்த பொழுது போக்கிற்கான படமாக மத்திய அரசால் தெரிவுசெய்யப்பட்டது. அதற்கான விருதை இயக்குநர் விக்ரமன் ஜனாதிபதி கே.ஆர். நாராயணனிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

✈ ஸ்ரீ சக்தி பிக்சர்ஸ் இன் 'என்னுயிரே' பட துவக்க விழாவில் கே.ஆர்.ஜி., பிரபு, இசையமைப்பாளர் பரணி, வி.சேகர், விவேக், ரோஜா, டைரக்டர் கே.வைரமணி, தயாரிப்பாளர் கே.சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சார்மி–சிலம்பரசன்

### முகப்பில்

ஐஸ்வர்யா ராய்

ஜோதிகா

சங்கவி



சொர்ணா

## அஜித்தின் பந்தா

அஜித் நடிக்க சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் புதிய படம் ஒன்றை தயாரிக்க திட்டமிட்டார் தயாரிப்பாளர் திருவேங்கடம். அஜித்திடம் கதை சொல்லப் போன சுரேஷ் கிருஷ்ணாவிடம் திரும்ப திரும்ப கதையைக் கேட்டாராம். இந் நேரத்தில் சுரேஷ் கிருஷ்ணாவின் இயக்கத்தில் உருவான ஆளவந்தான் எதிர்பார்த்தளவு வெற்றி பெறாததால் இயக்குநரை மாற்றும் படி தயாரிப்பாளரிடம் கூறிவிட்டார் அஜித்.

எனவே, தயாரிப்பாளர் திருவேங்கடம் இயக்குநரை மாற்ற முடிவு செய்த போதும், இப்போதைக்கு கால்ஷீட் இல்லை ஒரு வருடம் பொறுத்துக் கொள்ளுங்கள் என அஜித் கூறி விட்டாராம். கொடுத்த அட்வான்சை திரும்ப பெறவும் முடியாமல் அஜித்தின் கால்ஷீட்டை இழக்கவும் மனமில்லாமல் தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறார் தயாரிப்பாளர் திருவேங்கடம்.

## தமிழுக்கு வருகிறார் சம்யுக்த வர்மா

அன்பாலயா பிலிம்சின் கே.பிரபாகரன் தயாரித்தளிக்கும் 'அசோகா' படத்திற்கான பூஜை ஏ.வி.எம் ஸ்டுடியோவில் அண்மையில் நடைபெற்றது.

படத்தின் கதாநாயகனாக ஆக்ஷன் கிங் அர்ஜுன் நடிக்கிறார். இரண்டு கதாநாயகிகளை கொண்ட படத்தில் ஒரு நாயகியாக வருகின்றார் சம்யுக்த வர்மா. மலையாளத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் சம்யுக்தா வர்மாவை தமிழ்த் திரையுலகுக்கு கொண்டு வர பல தயாரிப்பாளர்கள் முயன்ற போதும் மறுத்து வந்த நடிகை தன்னை அறிமுகப்படுத்திய இயக்குநரான ஷாஜி கைலாஷ் இயக்கும் படம் என்பதால் தமிழுக்கு வர சம்மதித்துள்ளார்.

பெரிய பட்ஜெட்டில் தயாராகும் 'அசோகா' படத்தின் கதையை ஸ்டோன் என்பவர் எழுத வசனத்தை பாலகுமாரன் கவனிக்கிறார். கவிஞர் வைரமுத்துவின் பாடல்களுக்கு இசை அமைக்கும் பொறுப்பை ஏ.ஆர் ரகுமான் ஏற்றுள்ளார். பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'அசோகா' மிக விரைவில் திரைக்கு வரவுள்ளது.

## 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்ன் நடந்தது

எப்படியும் பொங்கலுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட 'கன்னத்தில் முத்தமிட்டால்' இன்னும் வெளியாகாது தள்ளிப்போய்க்கொண்டே இருக்கின்றது.

இதற்கு ஒடியோ ரிலீஸாக கொஞ்சம் தாமதமாகி விட்டதால்தான் படம் ரிலீஸாக தாமதமாகிறது என்று காரணம் சொல்லப்பட்டாலும் காரணம் அதுவல்லவாம்.

உண்மையில் இப்படம் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாகவும், புலிகள் தொடர்பானதுமான கதைப்பின்னணியில் உருவாகியுள்ளதால் படத்தை சென்சார்போர்ட் உட்பட முக்கியஸ்தர்கள் எல்லோருக்கும் போட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். படத்திற்கு சென்சார்போர்ட் சேர்டிபிகட் வாங்க கொஞ்ச நாளாகும் என்பதால், அச் செய்தி வெளியாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஒடியோ ரிலீஸ் கதையை பரவவிட்டுள்ளார்கள்.

## பாலுமகேந்திராவே...

தேவயானியை இயக்கவுள்ளவர்... யாக இருந்து வரும் மகேந்திர... இறக்குகிறார்.

கடைசியாக அவர் இயக்கிய ... யாரும் அவ்வளவு எளிதில் மறந்... யுலகில் தொழி... ஸ்டிரைக்குகள்... லோலகலப்பு... இப்போது... திரா. ஆனா... ஹீரோவின்... ராம். தே... தேவயா... ராம் ... என்... எதி...

## காதோடு சொல்லுகிறோம்

**இ**ஞ்சேருங்கோ இஞ்சேருங்கோ என்று தன் தொப்பையைக் காட்டி இள வட்டங்களின் தொண்டை தண்ணீர் வற்றச் செய்த அந்த நடிகை, கைவசம் இருக்கின்ற நான்கு படங்களுக்கு மேல் அட்வான்ஸ் வாங்க தயக்கம் காட்டுகிறாராம். ஏனெனில் அவருடைய மும்பாய் காதலர் அவசரப்படுத்துகிறாராம். இவ் வருட இறுதிக்குள் டும்டும் கொட்டலாம் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்லுகிறார்கள். அவரின் கொஞ்சல் நடிப்பால் குஷிப்பட்ட நெஞ்சங்களுக்கு நெருடலாகத்தான் இருக்கும் என்ன செய்வது எது எது எப்பெப்ப நடக்க வேண்டுமோ அது அது அப்பப்ப நடக்கத்தானே வேண்டும் ஊம்...

**'கா**தலுடன்' படம் எடுக்க வந்த அந்த ராச இயக்குநர் கதையே இல்லாமல் டைட்டிலை மட்டும் வைத்துக்கொண்டு பல மாதங்களாக டிஸ்கஷன் டிஸ்கஷன் என்று இழுத்து வந்ததால் டென்ஷனான லஷ்மிகரமான தயாரிப்பு நிறுவனம் அந்தத் தயாரிப்பையே கைகழுவி விட்டதாம். பதறிப்போன இயக்குநர், தயாரிப்பாளர்களிடம் ஓட... அவர்களோ முகம் கொடுத்துப் பேசவே மறுத்து விட்டார்களாம். தன் குருநாதர் விக்ரமானவரிடம் விஷயத்தைச் சொல்லி அழுதிருக்கிறாராம் டைரக்டர். தயாரிப்புத் தரப்பை கூப்பிட்டு, அவர் காம்பரமைஸ் செய்து அனுப்பி இருக்கிறார்.

**வ**ங்கியில் கடன் தருவார்கள் என்ற நப்பாசையில் ஒரே சமயத்தில் ஐந்து லோ பட்ஜெட் படங்களுக்கு தடாலடியாகப் பூஜை போட்டார் சங்கத்தின் தலைவர். சாம்பிளுக்கு ஒரே ஒரு படத்திற்கு மட்டும் சும்மா பத்து நாட்கள் ஷூட்டிங் நடத்தினார். இவர் திட்டத்தைப் புரிந்து கொண்ட எந்த பேங்கும் இவருக்கு லோன் தராமல் கைவிரித்து விட்டதாம். பணத் தட்டுப்பாட்டில் இருக்கும் தயாரிப்புத் தலைவர், தன் நண்பர் கேப்டன் நடிகரை வைத்து எடுத்த சில படங்களை தவறான வழியில் விற்க முயற்சி செய்துள்ளாராம். அதற்குள் நடிகரின் மைத்துனர் ஓடிவந்து தடுத்து 'இதில் எங்க மாமாவுக்கும் பங்கு உண்டு' என்று சண்டை போட்டுள்ளார். இந்த விஷயங்களை நடிகரின் காதுக்குக் கொண்டு சென்றனர் சிலர். ஆனால் அவரோ வெறும் மௌனத்தை மட்டும் பதிலாகத் தந்துள்ளாராம்.

**'மு**னிவரின்' மறு பெயர் கொண்ட நடிகர், ஒரு சில படங்களில் ஹீரோவாக நடித்தாலும் எதுவுமே இதுவரை ரிலீஸ் ஆகவில்லை. இப்போது சில டி.வி. சீரியல்களிலும் தலைகாட்டுகிறார்.



லாரன்ஸ்–மாதவன்–சிம்ரன்–சிநேகா

## ...டு இந்தியில் தேவயாணி

...ாலு மகேந்திரா. ரொம்ப நாளாக அமைதி ...ா. மீண்டும் தனது கேமராவை களம்

...ன் அப்துல்லா' பரபரப்பை ஏற்படுத்தியதை ...க முடியாது. இந்தப் படத்தில் தான் திரை ...வர் பிரச்சனை உருவானது. தொடர் ...ண்ணாவிரதங்கள் என திரையுலகமே அல் ...து.

...ண்டும் களம் இறங்குகிறார் பாலு மகேந் ... தமிழில் அல்ல. இந்திக்குப் போகிறார் ... தேவயாணியை முடிவு செய்துள்ளா... ...மலி முகமாக வேண்டும் என்பதால் ...யை அவர் தேர்ந்தெடுத்துள்ளா... ...த்திற்காக இசை அமைப்பவர் யார் ... பற்றி முடிவேதும் இதுவரை ...வில்லை.

## கணவனுக்கு கால் பிடித்தது அந்தக் காலம் கணவன் கால் பிடிப்பது இந்தக் காலம்!

என் புருஷன் அசிங்கம்தான், அழகில்லாதவர் தான் படிக்காதவர்தான் அவருக்கு இங்கிலிஸ் தெரியாது தான் ஆனால் நல்ல குணமுடையவர் என்று திட்டுதலையும் பாராட்டுதலையும் ஒரே யடியாக கொட்டித் தீர்க்கிறார் தேவயாணி.

சில மாதங்களுக்கு முன்னர் திருட்டுத் திருமணம் முடிந்துக் கொண்ட தேவயாணி, தனது ஆசைக் கணவன் ராஜகுமாரனை பக்கத்தில் வைத்துக்கொண்டே தன்னைத் தேடி வரும் பத்திரிகையாளரிடம் மேற்படி ஸ்டேட்மெண்டை எடுத்து விடுகிறாராம். இதனால் இராஜகுமாரன் செல்லமாக கோபப்பட்டாலும் அதை மனைவி புரிந்து கொள்வதாக தெரியவில்லை. எனவே இப்போதெல்லாம் யாராவது பத்திரிகையாளர்கள் போன் பண்ணி தேவயாணியின் பேட்டி தேவை என்று கேட்டால், "நான் வேற என் செல்லம் வேற இல்ல என்கிட்டவே கேட்கலாமே" என வெட்டி விடுகிறாராம் ஆசைக் கணவன்.

எது எப்படியோ, என்னதான் வெற்றிப்படம் ஒன்றை தந்த போதும், மனைவி வந்த நேரமோ என்னவோ கைவசம் படங்கள் ஏதும் இல்லாமல் மனைவிக்கு பி.ஏ வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார் இராஜகுமாரன். அண்மையில் அம்மன் படம் ஒன்றிற்காக வேப்பிலை ஆட்டம் ஆடிவிட்டு வந்த ஆசை மனைவிக்கு படப்பிடிப்பு தளத்தில் வைத்தே கால் பிடித்து விட்டாராம் இயக்குநர் ராஜகுமாரன். அடடா! நம்ம பெண்களுக்கும் இப்படியல்லவா கணவன் வாய்க்க வேண்டும்..!!

வாய்த்தால் நம்மவர்களை இறைவன்தான் காப்பாற்றவேண்டும்.



காயத்ரி ஜெயராம் படம்: மனதை திருடிவிட்டாய்

## மீண்டும் ...துகாப்புக்கு அண்ணன்!

...ல் செல்போன் நிறுவனத்தின் சென் ... உரிமையை நடிகை சிநேகா வாங்கி ...ார். இந்த நிறுவனத்தை கவனித்துக் ...ர் வேறு யாரும் இல்லை, சினேகாவின் ...பை கவனிப்பதற்காக துபாயிலிருந்து ...னேகாவின் அண்ணன் பாலாஜி ...

...ணன் வியாபாரத்தில் ஈடுபட் ... நடிகை சினேகா அவுட்டோர் ... படப்பிடிப்புக்கள் எல்லா ... தனது தாய்குலத்துடன் தான் ...ாராம். எனவே, முன்பு அண் ... வரும் போது அமைதியாக ...சில 'கொஞ்சல் பார்ட்டிகள்' ... தமது கைவரிசையை காட்டப் ...ார்களாம். அதனால், வியா... ...பொறுப்பை வேறுயாரிட... ...கொடுத்து விட்டு தங்கை... ...துகாப்பை கவனிக்க... ...டுள்ளாராம் அண்... ...லாஜி. ...டி எல்லா ...ள்களும் ...ட்டால் ...



லைலா-ரம்பா

## திரையுலக மறுபக்கம் 223

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

## குமாரரின் இளமை ஊஞ்சலாடுகிறது

தமிழ் திரையுலகின் நட்சத்திரங்களையும் அரசியற் புள்ளிகளையும் அடிக்கடி வரவழைத்து நட்சத்திர விருந்து படைப்பதில் அந்த நட்சத்திர குடும்பம் மிகவும் பிரபலமானது. நட்சத்திரத் தம்பதிகளின் புதல்விகள் திரைக்கு முன்னால் எவரது மனங்களிலும் நிலைக்கா விட்டாலும் திரைக்குப் பின்னால் நடைபெறும் விருந்துகளிலும், நிகழ்ச்சிகளிலும், தமக்கு தெரிந்த வித்தைகளையெல்லாம் எல்லோருடனும் பங்கு போட வேண்டும் என்ற பரந்து விரிந்த மனதை உடையவர்கள். இந்த மனப்பான்மைக்கு வழி சமைத்துக் கொடுப்பவரே சிட்டுக்களின் தாய்க்குலம்தான். ஆகா.. தான் பெற்ற இன்பம் தன் பிள்ளைகளும் பெற வேண்டும் என்ற பரந்த நோக்குடையவர் போலும்..!!! வழமை போலவே, அண்மையிலும் ஒரு நட்சத்திரவிருந்தை ஒழுங்கு படுத்தியிருந்தார்கள் அந்த நட்சத்திர தம்பதியினர். அந்த விருந்துபசாரத்தில் பெரும்பாலான சினிமா நட்சத்திரங்கள், இயக்குநர், தயாரிப்பாளர்கள் என அழைத்துத் தரப்பினரும் ஆஜராகியிருந்தனர். வழக்கம் போலவே, விருந்துபசாரத்தில் மது, மாது எதற்குமே பஞ்சம் இருக்கவில்லை. நட்சத்திர குடும்பத்தின் தந்தைக் குலம் உட்பட அனைவருமே மது போதையில் மிதந்து கொண்டிருந்த வேளையிலே அனைவரது கவனத்தையும் திருப்பும் விதமாக குலுங்கி குலுங்கி சிரித்தபடி வந்தார் கன்னமுகி நடிகை.

கன்னமுகியை கண்டதும், தனது வயதில் முப்பதுவருடங்களை குறைத்துக் கொண்டு குமாரன் போன்ற புது தெம்புடன் நடிகையை நோக்கி பாய்ந்து வந்தார் அந்த தந்தைக் குலம். பாய்ந்து வந்தவர் ஆங்கிலேயரின் முறைப்படி நடிகையின் செவ் இதழ்களில் 'இச்சா' இட்டு வரவேற்றார். நடிகையும், தனது தந்தையின் வயதை ஒத்த அந்த குமாரருக்கு பதில் 'இச்சா' கொடுத்து குமாரரின் கரங்களுக்குள் சரண் அடைந்தார். இவ்வாறு, நடிகையின் தோள்கள் மீது ஒரு கையை போட்டு அணைத்தவாறு, எல்லோரும் ஒன்று கூடியிருந்து மேற்கத்தைய ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த இடத்திற்கு நடிகையை அழைத்துச் சென்றவர், அங்கிருந்த மதுக் கோப்பை ஒன்றை எடுத்து நடிகையின் கையில் கொடுத்துவிட்டு மற்றையதை தான் எடுத்துக் கொண்டார். இருவருக்குள்ளும் மது இறங்க இறங்க, கட்டியணைத்தவாறு நின்ற இருவரின் உடல்களும் அங்கே போடப்பட்டிருந்த மேற்கத்தைய பாடல் இசைக்கு ஏற்ப ஆட ஆரம்பித்தன. கொஞ்சம் கொஞ்சமாக குமாரரினதும் நடிகையினதும் ஆட்ட வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. நடிகையின் மேடு பள்ளங்கள் எல்லாம் குமாரரின் மேனியை ஒத்தடம் போட தோள்களின் மேல் இருந்த குமாரரின் கைகள் மெல்ல மெல்ல கீழே இறங்கி, நடிகையின் மேடு பள்ளங்களோடு நர்த்தனம் ஆடியது. அதே இடத்தில் குமாரரின் வாரிசுகள் அனைவரும் நின்ற போதிலும் யாரும் இதனைக் கவனிக்கும் மனநிலையில் இருக்கவில்லை. எனினும், இருவரின் அருகே வந்த குமாரரின் மனைவி இருவரையும் பார்த்து "நன்றாக களைத்து விட்டீர்கள் அந்த அறையில் சென்று ஓய்வெடுங்கள்" என்று சொல்லி அனுப்பி வைத்தார். ஓய்வெடுக்க சென்றவர்கள் அறைக் கதவை மூடிக்கொண்டனர். அடடா சூப்பர் குடும்பம்? சூப்பர் மனைவி!!

## விபத்தில் சிக்கினார் லைலா!

நடிகை ரம்பா சொந்தமாக தயாரித்து வரும் படம் 'திரி ரோஸஸ்'. இப்படத்தில் கதாநாயகிகளாக ஜோதிகா, லைலா, ரம்பா நடிக்கிறார்கள். சண்டை காட்சியில் நடித்தபோது நடிகை லைலா காலில் அடிபட்டது.

படத்தின் படப்பிடிப்பு சென்னை பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் படமானது. மூன்று அடி இடைவெளிவிட்டு வரிசையாக பஸ்கள் நிறுத்தப்பட்டு, பஸ் கூரை மீது ஓடும் வில்லனை லைலா, ஜோதிகா, ரம்பா ஆகியோர் துரத்திச் செல்வது போல் காட்சி படமானது.

இக்காட்சியில் பஸ் மீது வில்லனை துரத்தியபடி தாவி ஓடும் போது லைலாவின் வலது காலில் அடிபட்டது. அவர் வலியால் துடித்தார். உடனடியாக 'ஐஸ்' கட்டி வைத்து ஜோதிகா சிகிச்சை செய்தார்.

அதைத் தொடர்ந்து அவரைச் சிகிச்சைக்காக ரம்பாவின் சகோதரர் வாசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். டாக்டர்கள் 'எக்ஸ்ரே' எடுத்து பார்த்ததில் லைலாவின் காலில் குதிக்கால் அருகே எலும்புடன் இணைக்கும் 'சவ்வு' கிழிந்து போய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக காலில் சிகிச்சை அளிக்கப்பட்டு கட்டுப்போடப்பட்டது. "வாரம் ஓய்வு எடுக்க வேண்டும்" என்று அவருக்கு டாக்டர்கள் அறிவுரை கூறினார்கள்.

அதைத் தொடர்ந்து லைலா படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு மும்பை சென்றார். விமான நிலையத்தில் 'சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி சென்று லைலா விமானத்தில் ஏறினார்.



மும்தாஜ்

## ...திரின் ...லையில் தேவி

...காதல் படங்கள் எடுப்பதில் வல்ல... கதிரின் அடுத்தபடமான 'காதல் ...ஸ்' பற்றி அதிகம் பேசப்படுகிறதோ ...லையோ அந்தப் படத்தின் நாயகி ...க்கும் கதிருக்கும் காதல் பற்றிக் ...ண்டதாக வந்த செய்திகள்தான் ...ம். ஆனால் கதிர் இது குறித்து ...லைப்படாமல் உள்ளார்.

...னக்குக் காதல் மீது அபார அன்பு ...டு. காதல் உண்டு. இப்போதைக்கு ... கவனமெல்லாம் 'காதல் வைரஸ்' ...தின்மீதுதான். எனக்கும் தேவிக்கும் ...டயே லவ் இருப்பதாக வரும் ...கள் எல்லாம் வெறும் புரளிகள். ...கு வரப்போகின்ற மனைவி நிச்சய... சினிமா சம்பந்தப்படாதவராகவே ...பார். அவருக்கும் சினிமாவுக்கும் ... சம்பந்தமும் இராது என்று தலை... ...அடித்துச் சத்தியம் செய்கிறார்.

## தமிழ்த் திரையில் 'அறியாத வயசு'

...ந்த வருடத்தில் விவகாரமான ...களின் எண்ணிக்கை தமிழில் குறை...தான் இருந்தது. ஆனால் இந்த ... மறுபடியும் சூடு பிடிக்கும் போல் ...கிறது.

...லையாளத்தில் சக்கைப் போடு ... 'சந்தன மரங்கள்' என்ற படத்தை ...ா ஸ்கிறீன் என்டர்டைன்மெண்ட் ...பனதினர் அடுத்த மாதமளவில் திரைக்கு விடப்போகிறார்கள்.

'சந்தன மரம்' என்றால் வீரப்பன் சம்பந்தப்பட்ட கதையா என கேட்டுவிடாதீர்கள். தமிழ் ரசிகர்களை உற்சாகமாக திரையரங்கை நோக்கி கவர்ந்திழுப்பதற்காக மேற்படி படம் 'அறியாத வயசு' என்ற பெயர் மாற்றத்துடன் தமிழுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

## பெண்ணே விழித்தெழு!

அந்தக் காலத்தில் பெண் என்றால்
அடுக்களைக்கே உரியவள் என்று
பந்தித்து வைத்திருந்தார்கள்
பழங்காலத்து பண்டிதர்கள்.
★★★
எந்தக் காலத்திலும் பெண்ணானவள்
எல்லையற்ற சக்தியானவள்
விந்தையான இக்காலத்திலேயே
விடுபட பெண்ணே விழித்தெழுந்திடுவாய்.
★★★
கையில்லையோ கண்ணே உனக்கு
காலில்லையோ நடப்பதற்கு!
பையை ஏன் வெற்றிடமாக்கி
பதுங்கி வீட்டில் முடங்கி விட்டாய்
தன்னம்பிக்கையோ உன்வசமுண்டு
தானீன்ற பிள்ளைகளுக்கெல்லாம்
தலைமை தாங்கி தனக்கோர் வேலையை
தனித்திருந்து செய்திடுவாய்
எம்மைப் பிடித்த பஞ்சநோய் எல்லாம்
பஞ்சாய்ப் பறக்க பெண்ணே நீ
விழித்தெழுந்திட வேண்டுமம்மா!
★★★
கணவனில்லை காணிக்கை போட
தலைவன் இல்லை தான் வாழவென
கவலையைத் தீர்த்து கண்ணியமாக
கண்ணீர் விட்டு கண்துடையாது
கண்மணியே உன் மனதை என்றும்
கல்லாக்கி இன்றே எழுந்து
வாழ்விலும் தாழ்விலும் மனமொருமித்து
மக்களுக்காக வாழ்வைத் துலக்க
நம்பிக்கையோடு சுய தொழில் புரிய
பெண்ணே விழித்தெழுந்திடுவாய்

பி. துஷிதா-வினாயகபுரம்.

## குயில் பாடும் கவியொன்று

இன்றைப் போலொரு
அந்திப் பொழுதில் தான்
அவர்களும்
கடைசியாய் இங்கிருந்து
காணாமல் போனார்கள்!
✶❍
அன்று
கூந்தல் நெடுத்த
அந்த மார்பழகி
நீண்ட நேரம்.
கடலை உற்றுப் பார்த்தாள்!
பின் அவனைப் பார்த்தாள்!
✶❍
காற்றுக் கலைத்திருந்த
கேசத்தினுள்ளே
துழாவும் விரல்களின் நுனியில்
அவன்
மனதின் இறுக்கம்
மடிந்து கிடந்தது.
✶❍
மௌனம் போர்த்திருந்த
மன வெளிகளுக்குள்
மாறி மாறித் தூது சென்றேன்....
என்
இறகுகள் ஓய்ந்து விழுந்தன.
தத்தித் தத்தி தாவிய போது
கால்கள் வலித்தன.
அவர்களோ,
பாறையின் உறைவாய்
உறைந்து கிடந்தார்கள்.
✶❍
பனித்த விழிகளுடன்
வாஞ்சையாய்ப்
பார்த்தவளின்
பார்வையைத் தவிர்த்த விட்டவன்
விட்டெறிந்த கல்லை
சத்தமில்லாமல் விழுங்கிக்
கொண்டது
சமுத்திரம்.
✶❍
அழுத்தங்களில் கரைந்துபோன
ஒரு சில மணித்துளிகளின் பின்
ஒட்டியிருந்த மண் தட்டி
ஒவ்வொருவராய் எழுந்தார்கள்.
✶❍
வடக்கும் தெற்குமாய்
இடம் மாறிப் போன
திசை வெளியில்
எதிரெதிர் ரயிலாய்க்
கடந்து போனார்கள்.
✶❍
தூரத்தே,
தாயின் விரல்
விடுபட்ட சுதந்திரத்தில்
ஆனந்தத் தாண்டவமாடிற்று
சிறு குழந்தையொன்று!
✶❍
ஓங்கி ஓங்கி அடிக்கும்
அலைகள்
யாரின் மனதைச் சுட்டிற்று?
✶❍
அன்றே'
குரலொடுக்கி ஊமையானேன்.
✶❍
சோர்ந்து படுத்திருந்த
பின்னொரு நாளில்
பேரதிர்வாய் அச்சேதி வந்தது.
அவர்கள் காதலர்கள் அல்லவாம்.
✶❍
மீண்டும் நான் பாடலானேன்.

மனோகவி-திருக்கோவில்.

## எதிர்கால அத்தியாயங்கள்

மனிதனுக்கு...!
மனிதனே...!
யமனான அந்நாளில்
புனிதச் செயலென்று
புவிதனில்... ஏதுமில்லை!

பிள்ளையிழந்த...
பெற்றோரும்!
பெற்றோர்....
இழந்த பிள்ளைகளும்
கணவரையிழந்த...
மனைவியாளும்!
வல்லுறவால்...
உயிரிழந்த...வனிதையரும்!
காதலையிழந்து...
கைதியாய் ஆன...
காளையரும்!
கண்ணீரேயான..
கன்னியரும்!

சொத்து...சுகமிழந்து...
போற்றிய கலையிழந்து...!
இரத்த உறவிழந்து
தேற்றுவார் யாருமின்றி
இன்னும்
பல இழந்து
அழித்திட எண்ணி
ஆயுதமேந்தி
அழிந்திட்டோரும்
யுத்தத்தின் விளைவிதுவோ
இல்லை
முன் வினைப் பயனிதுவோ?
ஏங்கித் தவித்து...
மொத்ததில் அழியுதிங்கே..
எதிர்கால அத்தியாயங்கள்.

வி. லோகேஸ்வரி,
அக்கரைப்பற்று-07.

## தேன் கிண்ணம்

### விமர்சனம் எனது தாலாட்டு!

கவிதை தேசத்தின்
கைக் குழந்தை நான்!
கவிஞர்கள் எனது மூதாதையர் !
நிஜங்களும் நிழல்களும்
சகபாடிகள்.......
விமர்சனம் எனது தாலாட்டு!
என்னைக் கிள்ளாமல்
தொட்டிலை ஆட்டிவிடாதீர்கள்!

உண்மையும் பொய்மையும்
உறங்க வில்லை' என்
கவிதையின் இதயத்தில்!
மனசுகள் உடைந்து போகும்
மாலை நேரம்
வார்த்தைகள்
வரிகளாய்த் தொடங்கும்!
கவிதையின் சாயலவற்றில்!

விமர்சகன் என்
செவிலித் தாய்;
திட்டித் தீர்க்கும் போதெல்லாம்
மட்டில்லா மகிழ்ச்சி இது
இன்னுமொரு தாலாட்டென!

என் கவிதை
அழுத பின் சிரிக்கும்
நிதர்சனமாக
சின்னக் குழந்தைக்குள்
சில்லறைத் தனங்களில்லை!
மொழியை முழுமையாக
கற்றுக் கொள்ளாததினால்!

கவிதை தேசத்தின்
கைக் குழந்தை தான்!
கவிஞர்கள் எனது மூதாதையர்!
நிஜங்களும் நிழல்களும்
சகபாடிகள்......!
விமர்சனம் எனது தாலாட்டு!
என்னைக் கிள்ளாமல்
தொட்டிலை ஆட்டிவிடாதீர்கள்!


முகம்மது ஹாரீத்-
அட்டாளைச்சேனை 11

## பொன்னொளி இரவு

ஒரு ஜனனத்தின் ஜாலங்களை
ஜாடையிலே பருகும் போது...!
ஊறிப்போன உணர்வுகளெல்லாம்
பீறிப்பாயும் நினைவுகளாய் - என்னில்
கீறிக்கிடக்கிறது.
❀❀
அர்த்தப்படாத பொழுதிலே..!
பௌவியமாய்த் தென்றல் வீச
படர்ந்து வரும் பௌர்ணமியில்
பனித்திவலை எனைச்சூழ
தூறலுக்காய் ஏங்கிநிற்கும்
துளசிச் செடியாய்
மன்னவன் மடி மீது
மண்டியிட்டு நான் இருந்தேன்
❀❀
இரவில் கறுப்பழகுதான்
இயற்கையின் பாதியழகு ஏன்
நிலவே உன்அழகிற்கு - அந்த
வடுக்கள் தான் வண்ணம் சேர்க்கிறது
இன்னும் சொன்னால்
கருவனம் இன்றேல் -உன்
ஒளிஏது...?
❀❀
ஊமையாய் சபிக்கப்பட்ட
கொடிகளின் சிணுங்கலும்
பனித் தோய்வின் நடுங்கலும்
நிலவொளியில் இரவில் தான்
நிறைவை செய்ய முடியும்.
❀❀
பூக்களை ஒன்றாக்கி
மணங்களை வேறாக்கி
வினோத சஞ்சாரத்தில்
விடை தேடவைக்கிறதே.!
❀❀
அந்தப் பொன்னொளி பட்டால்
குருதி கூட சோலையாகி விடுமல்லவா....?
விடிகாலைப் பொழுதுவரை - மலர்
ஆடை அவிழ்க்கும் வண்டுகளும்
ஓய்யார உயர்ந்துபாடி - இலை
ஓரத்தில் மின்மினிகள்- இரவிலே
இரை தேடி இளைப்பாறும்
அழகு பார்த்தால் என்
கண்கள் ரெண்டும் போதாதே....!
❀❀
சலனம் இழந்த இரவில் என்
கண்களுக்குள் ஒழுகிய
வெண் ஒளிச் செழுமையை
ஆழம் காட்டும் கறுப்பிரவின்
நீளம் இல்லாத சொற்களால்
சாயம் பூசி இருக்கிறேன்.
சரி செய்து பாருங்கள்.

எஸ். தேன்-சம்பூர் 07


## பேனா நண்பர்கள்



பெயர்: பி. பிரேம்நாத்.
வயது: --
முகவரி:
P.O.BOX- 929
POSTAL CODE-32010
HAWALLY
KUWAIT.
பொழுது போக்கு:
பத்திரிகை,
பேனாநட்பு.



பெயர்: செல்வி பஸீலா
வயது: 24
முகவரி:
BLOCK NO-01
STREET NO-11
HOUSE NO-11
CODE NO-305301
DAIYA, KUWAIT.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எம். ஜெயந்தா
வயது: 28
முகவரி:
P.O.BOX -33139
DOHA-QATAR.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.

## காதல் ஒரு குற்றவாளி(யா)?

அன்பே நம் காதல் ஒரு குற்றவாளி(யா)?
அதிலே விசாரனைக் குழுவாக
உனது அண்ணன் மாரும்!

காவலர்களாக உனது அத்தான் மாரும்!
ஆலோசகராக உனது
குடும்பத்தினரும் இருந்து
நம் காதலுக்கு சிறைத் தண்டனை விதித்தாலும்...
சிறைக் கம்பிகளை
உடைக்குமளவுக்கு வலிமையானது நம் காதல்...
சிறைக்கம்பியினூடு கசியுமளவுக்கு
புனிதமானது நம் காதல்...
இவற்றை என்றும் கூறிவை உம்மவர்க்கு.

நிமல்ராஜ், மட்டக்களப்பு.




நம்முடைய மூளையில் எந்த இலட்சியத்தைக் கொண்டிருக்கிறோமோ அதற்கு ஏற்றபடிதான் அதிக நாட்கள் வாழ முடியும். தென்துருவப் பனி ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் ஸ்காட், இவர் இருபது வயதிலேயே மாலுமியானார்.

இவருடைய இலட்சியம் பனியைப் பற்றிய உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்குச் சொல்ல வேண்டும். என்பதுதான் அதனால் துருவ ஆராய்ச்சி மேற்கொண்ட பயணங்களில் கலந்து கொண்டார்.

## இலட்சியம் உள்ளவரா நீங்கள்?

இலட்சியம் என்பது நோக்கம்! அது மட்டும் தான் இருக்க முடியும். வாழும் பிராணிகளில் நாம்தான் இலட்சியதுடன் வாழ இயலும். அதனால் தான் மனிதனாகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்று மேல் நாட்டு அறிஞர் எட்வட்ஸ் கூறுகிறார்.

வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உயர்ந்த ஒரு இலட்சியம் இல்லாவிட்டால் மனிதன் மிருகமாகப் போய்விடுவான் என்கிறார் விவேகானந்தர். உன்னதமான இலட்சியத்திற்காக வாழ்வதுதான் வாழ்க்கை.

உலகில் எல்லாம் மறைந்து போய் விடும். ஆனால் இலட்சியம் மட்டும் மறையாது. இலட்சியம் தாரகை போன்றது. அதனை கைக்குள் அடக்கிவிட இயலாது. அதனை வழிகாட்டியாகக் கொண்டு பின் தொடர்ந்து சென்றால் போக வேண்டிய இடத்தை அடைந்து விட முடியும்.

நம்முடைய இலட்சியம் சிற்சில சமயங்களில் மறையலாம். ஆனால் ஒரு நாளும் அழியாது. நிலவை மேகம் மறைப்பது போல லட்சியத்தைச் சில குறுக்கீடுகள் மறைக்கக் கூடும். ஆனால் அது மறுபடியும் சிதைவின்றி தோன்றி ஒளி வீசும்.

இலட்சியமே உலகின் எஜமானர். அது நம்மை உயர்ந்த இடத்தில் அமர்த்தும். உயர்ந்த இலட்சியங்கள் தான் உயர்ந்த உள்ளங்களை அமைக்கும் .

அடிவானத்தை நோக்கிச் செல்லும் போது அது பின்னால் நகர்ந்து கொண்டே இருக்கும் . அதேபோல் நம்முடைய இலட்சியத்தை நோக்கி முன்னேறும் பொழுது தான் பின்னால் சென்று கொண்டே இருக்கும்.

இலட்சியத்தை நேசிக்கிறோம் என்பதற்கு என்ன அடையாளம் என்றால் அதற்காக வாழ்ந்து காட்டுவதுதான். நாம் உணவு உட்கொள்வதன் பயனாக நீண்ட நாட்களாக வாழ்வது இல்லை.

இவரைத் தலைவராகக் கொண்ட ஆராய்ச்சிக்குழு புறப்பட்டது. அதில் ஐந்து பேர் இருந்தனர். இதுவரை எவரும் செல்லாத தென் துருவப் பனிமலைக்குப் புறப்பட்டனர். எதிர்பார்த்ததைவிட அதிகமாகப் பனிப்புயல் வீசியது.

எப்படியும் ஆராய்ச்சியில் வெற்றி காண வேண்டும் என்ற இலட்சியத்தின் காரணமாக மனந்தளராமல் பனியில் ஊர்ந்து கொண்டே சென்றார் ஸ்காட். தங்களுடன் அழைத்துச் சென்ற விலங்குகள் பனியால் விறைத்து இறந்தன.

அதனால் பொருட்களை எல்லாம் இவர்களே இழுத்துக் கொண்டு சென்றனர். கடுமையான பனிப்புயலையும் கடுகாகக் கருதி இலட்சியத்திலே கவனமாக இருந்தார். கடின உழைப்பால் மனித வாடையே அறியாத தென் துருவத்தை ஸ்காட் குழு அடைந்தது.

ஒருவர் பின் ஒருவராக பனியின் கொடுமைக்குப் பலியானார்கள். இறுதியில் ஸ்காட் மட்டும் உயிருடன் இருந்தார் ஒரு வாரம் வரைக்கும் தான் ஸ்காட் மெதுவாகச் சென்று கொண்டே இருந்தார்.

அதன் பிறகு அவருடைய உடலும் தளர்ந்தது. இனிமேல் உயிருடன் இருக்க முடியாது என்று உணர்ந்தார். உடனே தென்துருவம் பற்றிய எல்லா விவரங்களையும் தெளிவாக எழுதினார்.

அந்தக் குறிப்பைக் கொண்டு தென்துருவத்தைப் பற்றி அறிந்துகொள்ள வழிஅமைத்தார்.அவருடைய இலட்சியம் நிறைவேறியது. ஆனால் பனியின் கொடூரம் ஸ்காட்டின் உயிரைப் பறித்துக் கொண்டது.

உயிர் போனாலும் பரவாயில்லை இலட்சியம் நிறைவேற வேண்டும் என்ற நோக்கம் கொண்டு செயல்பட்டு வெற்றியும் பெற்றார். நாமும் இவரைப் போல இலட்சியத்துடன் செயல் பட்டால் நிச்சயம் வெற்றியைப் பெற முடியும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

03.02.2002தொடங்கி 09.02.2002வரை

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை, முதற்கால்,) செய்தொழில் விருத்தி, பொருள் வரவு, காரியானுகூலம், உண்டு. உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வளிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்படைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### இடபம்:
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி மிருகசீரிடத்து முன்னரை,) பொருள் விரையம், மனக்கவலை, காரியங்களில் வீண் தடைகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வி தேக்கநிலையடையும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மிதுனம்:
(மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்,) தொழில் விருத்தி, குடும்ப சுகம், மனக்கவலை தீர்தல், வெளியிடப் பயணமுண்டு. உத்தியோகத்தில் சில பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும்.மாணவர்களுக்கு கல்வியில் உள்ள தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 03.

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம்,ஆயிலியம்,) கருமங்களில் வெற்றி, பொருள் வரவு, பெரியோர் உதவி, வெளியிட வாசம் உண்டு. உத்தியோகத்தில் நன்னிலை தோன்றும் விவசாயிகள். வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செய்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### சிங்கம்:
(மகம்,பூரம்,உத்தரத்து முதற்கால்,) மனக்குறை தீரும். காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, பொருள் வரவுக்கு இடமளிக்கும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### கன்னி:
(உத்தரத்து பின்முக்கால் அத்தம், சித்திரையின் முன்னரை,) தொழில் விருத்தி, கருமங்களில் வெற்றி, வெளியார் உதவி, பணக் கஷ்டம் உண்டு. உத்தியோக ரீதியான தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள் ' வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்டநாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்.04.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி விசாகத்து முன்முக்கால்,) பெரியோர் உதவி, மகிழ்ச்சி, குடும்ப சுகம், பணவரவு ஏற்படும். உத்தியோ கத்தில் உள்ளோர் விழிப்புடன் செயற்படவும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செய்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### விருட்சிகம்
(விசாகத்து நாலங்கால், அனுஷம், கேட்டை,) தொழில் கஷ்டம், குடும்பக் கவலை, பிள்ளைகளால் பிரச்சனை, பொருள் கஷ்டம் ஏற்படும். உத்தியோக ரீதியான பிரச்சனைகள் தோன்றி மறையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 06.

## கிரக நிலை

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன், |
| மீனம் | - செவ்வாய். |
| கும்பம் | - வெள்ளி. |
| இடபம் | - சனி. |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| தனு | - கேது. |

சந்திரன் துலாம் விருட்சிகம் தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்,) வீண் சிரமம், பணவிரயம், பெரியோர் பகை, குடும்ப சிக்கல் உண்டு. வெளியிடப் பயணம் தாமதமாகும். உத்தியோகத்தில் கஷ்டங்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன் னரை ,) குடும்ப மகிழ்ச்சி, காரியானு கூலம், பிரயாண மிகுதி, தொழில் விருத்தியுண்டு. உத்தியோகஸ்தர்கள் எதிர் பார்த்த முன்னேறம் கிடைக்கும். மாணவர் களுக்கு கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்டநாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) முயற்சிகளில் தடை, மனக்கலக்கம், அன்னியர் உதவி, செலவும் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் எதிலும் கவனமுடன் செயற்படவும். விவசாயிகள், வியாபாரிக்ள் இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) குடும்பமகிழ்ச்சி, பெரியோர் உதவி மனக்குறை நீங்கும். வெளியிட வாழ்க்கை உத்தியோகத்தில் கஷ்டங்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வி மேன்மையுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பிறந்த வீடா? புகுந்த வீடா?

திருமணமான அனேகப் பெண்களின் பிரச்சனை அவளது பிறந்த வீட்டாருக்கும், கணவனுக்குமான ஒற்றுமையின்மைதான். தன் வீட்டாரை மனைவி மதிக்க வேண்டும், அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என நினைக்கும் கணவன்மார், அதே மாதிரி மனைவி குடும்பத்தாரிடமும் தான் நடந்து கொள்ள வேண்டும் என உணர்வதில்லை. இதனால் கணவன் மனைவிக்குள் ஏற்படும் சச்சரவுகள் ஏராளம். உங்கள் பிறந்த வீட்டாரை உங்கள் கணவர் வெறுக்கிறாரா? அம்மாதிரி சந்தர்ப்பங்களில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்கள்....

எதற்கெடுத்தாலும் உங்கள் பிறந்த வீட்டுப் பெருமை பேசாதீர்கள். நீங்கள் உங்கள் பிறந்த வீட்டில் ராணி மாதிரி வளைய வந்திருக்கலாம். உங்களை அவர்கள் தங்கத் தட்டில் வைத்துத் தாங்கியிருக்கலாம். அதே மரியாதை புகுந்த வீட்டிலும் கிடைக்கும் என்று எதிர் பார்க்காதீர்கள். அப்படிக் கிடைக்காத பட்சத்தில் உங்கள் பிறந்த வீட்டாரோடு, புகுந்த வீட்டாரை ஒப்பிட்டு விமர்சனம் செய்யாதீர்கள். பிரச்சனைகளுக்கு அதுதான் ஆரம்பம்.

உங்கள் பிறந்த வீட்டாருக்கு முன்னால் உங்கள் கணவரையோ, அவரது குடும்பத்தாரையோ விமர்சனம் செய்யாதீர்கள். கூடிய வரையில் அவர்களது நல்ல குணங்களைப் பற்றி மட்டுமே பேசுங்கள்.

உங்களுக்கும், உங்கள் கணவருக்குமிடையே ஆயிரம் இருக்கலாம். அது உங்கள் பெற்றோருக்குக் கூடத் தெரிய வேண்டாம். தனிமையில் இருக்கும் போது நீங்கள் அவரை ஒருமையில்கூட அழைக்கலாம். ஆனால் உங்கள் வீட்டார் முன்னிலையில் அதைத் தவிருங்கள். எந்தக் கணவனாலும் அதை அத்தனை சுலபத்தில் சகித்துக் கொள்ள முடியாது. மற்றவர்கள் முன்னிலையில்தான் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் என்றே எல்லா கணவர்களும் எதிர்பார்ப்பார்கள்.

உங்களுக்குள் ஏற்படும் சின்னச் சின்னசண்டைகளைக் கூடியவரை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பெற்றோரைப் பஞ்சாயத்திற்கு அழைக்காதீர்கள். என்னதான் மருமகன் என்றாலும் மாமனார்-மாமியாரது தலையீட்டைப் பொறுத்துக் கொள்ள எந்த ஆணுக்கும் பிடிக்காது தான்.

திருமணத்திற்குப் பிறகு புகுந்த வீடுதான் உங்கள் வீடு. எனவே சதா சர்வ காலமும் உங்கள் பிறந்த வீட்டைப் பற்றி, அங்குள்ளவர்களைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், புகுந்த வீட்டுப் பிரச்சனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

திருமணத்திற்குப் பிறகு இரு வீட்டாரையும் தூரத்தில் வைத்திருப்பதே உங்களுக்குப் பாதுகாப்பு. தூர இருந்தால் சேர உறவு என்பது இங்கே ரொம்பப் பொருத்தம்.

உங்களுக்குள் ஏற்படும் சண்டை-சச்சரவுகளின்போது உங்கள் புகுந்த வீட்டாரை இழுக்காதீர்கள். அது உங்கள் பிறந்த வீட்டாரின் மீதான அவரது எரிச்சலை இன்னும் அதிகரிக்கும்.

திருமணத்திற்குப் பிறகு உங்கள் பிறந்த வீட்டை நீங்கள் மறந்துவிட வேண்டும் என்றில்லை. அவர்களுக்காக செலவு செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்றில்லை. உதாரணத்திற்கு உங்கள் அம்மாவுக்கு ஒரு சேலை வாங்கினால், கூடவே மாமியாருக்கும் ஒன்று வாங்கி விடுங்கள். மாமியாரைவிட, உங்கள் கணவர் உச்சி குளிர்வார்.

வீட்டிலுள்ள மற்ற மருமகன்களோடு உங்கள் கணவரை உங்கள் பிறந்த வீட்டார் ஒப்பிட்டுப் பேசுவதை ஊக்குவிக்காதீர்கள்.

உங்கள் கணவர் உங்கள் வீட்டாரை மதிக்கிறாரோ, இல்லையோ, நீங்களும் அவரது வீட்டாரிடம் அப்படியே நடந்து கொள்ளாதீர்கள். அவரே தலை குனியும் அளவுக்கு எல்லோரிடமும் அன்பைப் பொழியுங்கள். நாளடைவில் அவரது நடவடிக்கைகளில் மாற்றத்தை உணர்வீர்கள். ■


## செல்வாஸின் 7 சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** E

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

**உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09- 02-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

செல்வி. சி.பவித்ரா,
170, மோதரைவீதி, கொழும்பு-15.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





### நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா



"ஜப்பான்காரங்க வந்திருக்காங்க. டிஸ்கஷன் நடக்குது... வா."

ஐந்தாவது மாடியில் இருந்த வைரவனின் ஆபீஸ் அறையில் கண்ணாடியருகே மலர் ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன. எதிரே புன்னகையுடன் அனிதாவின் புகைப்படம் இருந்தது. மது அவளிடம் ஏராளமான பத்திரிகைகளைக் கொடுத்து விட்டு, "கொஞ்சம் இரு... நான் அந்த லஞ்சுக்கு டேபிள் ரிசர்வ் பண்ணணும். இதோ வந்துர்றேன்" என்று சொல்லிச் சென்றாள்.

அனிதா அந்த அழகான விஸ்தாரமான அறையைக் கவனித்தாள். யாரோ ஒரு ஆள்வந்து காபி கொண்டு வைத்துவிட்டு, "சுகர் போடலாமா?" என்று கேட்டுவிட்டு இரண்டு கட்டிபோட்டுவிட்டுச் சென்றான். 'ப்ரைவேட்' என்று எழுதியிருந்த அறையைப் பார்த்தாள். அனிதா.

'யாருக்கு ப்ரைவேட்... உள்ளே ஜப்பான்காரர்கள் இருப்பார்களோ?' தயங்கினாள்.

'அவர்கள்தான் கான்ஃபரன்ஸில் இருக்கிறார்களாமே என்று மெள்ள அந்தக் கதவைத் திறந்து பார்த்தாள். திறக்கவில்லை. கைவிட்டபோது தானாக எதிர்ப்பக்கம் திறந்து கொண்டது. உள்ளே வைரவன் கண்ணாடி முன் நிற்க, சீதள் அவனுக்கு கோட்டு அணிவித்துக் கொண்டிருந்தாள். கைக்குட்டையைப் போதிய அளவு தெரிய அமைத்துக் கொடுத்தாள்.

"தாங்க்ஸ் சீதள்" என்று அவள் கன்னத்தில் ஒரு முத்தமிட்டு, அவள் முதுகுப் பக்கமாக அவளைச் சுற்றி வளைத்துத் தன் அருகில் கொண்டுவந்து ஒருமுறை மார்பைப் பிடித்துவிட்டபோது, அனிதாவைப் பார்த்தான்.

"ஹாய் அனி... நீ இங்க வந்திருக்கிறதா யாரும் சொல்லலையே."

சீதள் இயல்பாக "வேற ஏதாவது... மிஸ்டர் வைரவன்" என்றாள்.

"தட்ஸ் ஆல்."

அவள் சென்றதும், அனிதாவை நேராகப் பார்த்து, "அனி... நான் இப்ப ஜப்பான்காரங்களோட கான்ஃபரன்ஸ் போகணும். ஸூட் மாத்திக்க வந்தேன்" என்றான்.

"பார்த்தேன்" என்றாள் அனிதா.

அவன் ஆபீஸ் அறை உத்தமமாக இருந்தது. ப்ரேம் போட்டு அவள் படம் சிரித்துக் கொண்டிருக்க, நிஜ அனிதாதான் சிரிக்கவில்லை. குழப்பமாக இருந்தது. "இது என்ன உறவு? மார்பைத் தொடும் உறவு-இதெல்லாம் ஆபிஸில் உண்டா என்ன..."

"என்ன யோசிக்கிறே?"

"ஒண்ணுமில்லை."

"இட்ஸ் நத்திங்... சும்மா போட்டுக் குழப்பிக்காதே- விநோதமான கதவுகளையெல்லாம் திறக்காதே.. இருக்கியா-எனக்கு ரெண்டு மணி நேரம் ஆகும்"-

வைரவன் கேட்க,

"இல்லை... நான் போறேன்" என்றாள் அனிதா. "குழப்பிக்காதே... சொதப்பாதே... நான் வரும்வரைக்கும் டி.வி பார்த்துக்கிட்டு இரு. எல்லாத்துக்கும் ரொம்ப சாதாரணமான காரணம் இருக்கு."

"சிதாராவைப் பார்த்தேன்"- அனிதா சொல்ல,

"ஓ மை காட்... அவ என்ன சொன்னா?" -வைரவன் கேட்டான்.

"உங்களைப் பத்திப் பேசிக்கிட்டு இருந்தோம்."

"என்ன சொன்னா?"

"அவளை நீங்க கல்யாணம் பண்ணிக்க இருந்ததா..."

"லுக் அனி..."- வைரவன் ஏதோ சொல்ல ஆரம்பிக்க, அதற்குள் பஸ்ஸர் ஒலிக்க, கதவ திறந்து இரண்டு ஜப்பானியர்கள் நுழைந்தனர்.

"மிஸ்டர் ஸாக்கமோட்டா, மிஸ்டர் யசோதா, இது என் மனைவி" என்று அனிதாவை அறிமுகப்படுத்தினான் வைரவன்.

அந்த ஜப்பானியர்கள், இருக்கிற கண்ணையும் சின்னது பண்ணிக் கொண்டு இடுப்பு வரை குனிந்து நிமிர்ந்து, "வெலிப்ரீஸ்டு" என்று மஞ்சளாகச் சிரித்தார்கள்.

"அப்புறம் பேசலாம் என்ன" என்று அனிதாவிடம் சொல்லிவிட்டு அவர்களுடன் அடுத்த அறைக்குச் சென்றான். அவன் கண்களில் கவலை தெரிந்தது.

அனிதா வெளியே வந்தபோது, சீதள் அறைக்குள் நோட்டுப் புத்தகத்துடன் நுழைந்து கொண்டிருந்தாள். அனிதாவை, 'ஒற்றுமே நடக்கவில்லை' போல சகஜமாகப் பார்த்துக் புன்னகைத்தாள்.

'எங்கே போவது?'

வாசலில் வகைக்கு ஒன்றாக அனிதாவக்கு கார்கள் காத்திருந்தன. சீருடையில் டிரைவர் அவளுக்காகக் கதவைத் திறந்து வைத்தான். பெருமூச்சுப் போல கார் கிளம்பி போலிஸ்காரரின் அருகில் நாமத் திருப்பத்துக்கு நிற்கும்போது டிரைவர் அவளிடம், "சிதாரா அம்மா இந்த கவரை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாங்க.... எங்க போகணும்மா?" என்றான்.

"எங்க வீட்டுல அவங்கள்லாம் காஞ்சிபுரம் போயிருக்காங்க இல்லையா?"

"ஆமாம்மா. காலைல போயிருப்பாங்க."

"அங்க போங்க."

"அவங்க இந்நேரம் புறப்பட்டிருப்பாங்க."

"காஞ்சிபுரம் போங்க." என்றாள்.

"சரிங்க... ஒரு நிமிஷம்" என்று காரை சாலையோரத்தில் நிறுத்தினான்.

"ஆபீஸ் போய் வெளியூர் டியூட்டிக்கு பர்மிஷன் கேட்டுக்கிட்டு வந்துர்றேங்க."

"கேட்டுக்கிட்டு வாங்க" என்றாள் அனிதா. சிதாரா கொடுத்திருந்த அந்த நீலநிற கவரைப் பிரித்தாள். 'அனிதாவக்கு அன்புடன்' என்று சிதாரா அதில் எழுதியிருந்தாள். 'இவை இனி எனக்குத் தேவையில்லை' கால் கடிதம் மடிக்கப்பட்டு அதனிடையில் வண்ண வண்ண போட்டோக்கள். சிதாராவும் வைரவனும் பல்வேறு போஸ்களில், பல்வேறு ஸ்தலங்களில், அவற்றில் சில வேறு அந்தரங்கமாகவே இருந்தன. என்ன இடம் என்று தெரியவில்லை. வெளிநாடாக இருக்கலாம்.. பெங்களூராக இருக்கலாம். கோவாவாக இருக்கலாம்... பீச்சாங்கரையில் சிதாராவின் முதுகை வைரவன் தேய்த்துக் கொண்டிருந்ததும்... அவளை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு சமுத்திரத்தில் ஓடுவதும்... You have married a great lover... best of luck என்று சிதாரா எழுதியிருந்தாள்.

சற்று நேரத்தில் கார் டிரைவர் திரும்பி வந்து, "அய்யா சொன்னாருங்க. இப்ப போக வேண்டாம்... மீட்டிங் முடிஞ்சு ரெண்டு மணில வந்துருவாராம். அவரும் வர்றதா சொன்னாங்க. இப்ப வீட்டுல காத்திருக்கும் படியா சொன்னாங்க."

"டிரைவர்... காஞ்சிபுரம் போங்க" என்றாள்.

"அம்மா... நான் போறதில தயக்கம் இல்லைம்மா. கார்ல பெட்ரோல் இருக்குது... ரெண்டு மணில போயிருலாம். ஆனா, அனுமதி இல்லாம போனா என் வேலை போயிரும்மா... ஒரு நிமிஷம்கூட விடமாட்டாங்க. அண்ணாமலைக்கு ஆனகதி எனக்கும் ஆயிரும்மா" என்றான்.

அனிதாவக்கு இப்போது காரணமில்லாத கோபம் வந்து "உன் கிட்ட பத்து ரூபா இருக்கா?" என்றாள்.

"இருக்கும்மா... அம்பது ரூபாயே இருக்கும்மா..." சட்டென்று அதைப் பிடுங்கிக் கொண்டு காரைத் திறந்தாள். எதிர்வந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். அந்த பஸ் ராதாகிருஷ்ணன் சாலையில் சென்று பீச் பக்கம் இடது புறம் திரும்பியது. சட்டென்று இறங்கினாள். சில சிறுவர்கள் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார்கள். மெள்ள நடந்தாள். சற்று தூரத்தில் கார் அவளைப் பின் தொடர்ந்தது. நேராக ஐஸ் அவுஸ் வரை நடந்தாள்.

**'வினோதமான கதவுகளை யெல்லாம் திறக்காதே!'**

தாகம் எடுத்தது. குளிர்பானங்கள் விற்றுக்கொண்டிருந்த பெட்டிக் கடையில் சென்று ஒரு லைம் எடுத்துக் குடித்தாள். டிரைவர் கைகட்டிக்கொண்டு பானட்டின் மேல் தொப்பியை வைத்துக் காத்திருந்தான்.

ஒரு ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டாள்.

"எங்கம்மா போகணும்?"

"பின்னால அந்த கார் வருதில்லை, ஆட்டோக் காரரே."

"அதிலிருந்து தப்பிக்கணும்."

கார் டிரைவரிடம் கோபித்துக் கொண்டு, காரில் இருந்து இறங்கி கண்ணில் பட்ட ஒரு ஆட்டோரிக்ஷாவில் ஏறிக் கொண்ட அனிதாவிடம் ஆட்டோரிக்ஷாக் காரர், "ஏம்மா அந்தாளு பேஜார் பண்றானம்மா? பேட்டை பக்கம் கூட்டிட்டுப் போய் கீச்சுரலாமா?" என்றார்.

"இல்லைப்பா... அது எங்க கார்தான். எங்க டிரைவர்தான்..." என்றாள் அனிதா.

"டிரைவர் வெச்சிக்கிட்டு, கப்பல் கணக்கா கார் வெச்சுக்கிட்டு இந்த ரங்கசாமி ஆட்டோல வர்றியா? என்னம்மா நீ சமூக சேவையா, ஏழை பங்காளியா இல்லை-பைத்தியமா?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் ஆட்டோக்காரர்.

"அதெல்லாம் ஏதும் இல்லை... நீ போறியா?"

ஆட்டோ வேகமாகச் சென்றது. திடீர் என்று 'யு டர்ன்' அடித்து எதிர்பக்கம் சென்று சந்துக்குள் மறைந்து, ஐஸ் அவுஸ் பக்கம் புகுந்து திருவல்லிக்கேணியில் வெளிப்பட்ட போது பின்னால் வந்த காரைக் காணவில்லை. ஐம்பது ரூபாயில் பாக்கி இருந்த பணத்திலிருந்து ஆட்டோ சார்ஜ் கொடுத்தாள்.

"தாங்க்ஸ்ப்பா..." என்று சொல்லி, ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டாள் அனிதா.

"திரும்ப ஏதாவது சவாரி போகணும்னா வாங்கம்மா... இங்கதான் ஸ்டாண்டுல தாம்மா கெடப்பேன். இது நம்ம பேட்டை... எவனாவது தகறால் பண்ணான்னா சொல்லு... கீச்சுரலாம்..."

[அனிதா வருவாள்...]

## பாப்பா முரசு சிறுகதை

# ராஜா வீட்டு ஆட்டுக்குட்டி!

பிறந்து சில மாதங்களே ஆன ஒரு ஆட்டுக்குட்டிக்கு உடம்பெல்லாம் கொழுப்பு.

ஆமாம்! குழந்தையாக இருக்கிறோம் என்ற ஒரே காரணத்தால் அது மிகவும் சுதந்திரமாகவும், உல்லாசமாகவும் இருந்தது.

வீட்டு எஜமானரும் அது குட்டிதானே என்று விட்டு விட்டார். அது எது செய்தாலும் அவர் கண்டு கொள்வதில்லை.

அதனால் ஆட்டுக்குட்டிக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

தாய் ஆட்டிடம் வயிறு முட்டப் பால்



குடிக்கும். பிறகு சிறிது நேரம் அங்கேயே உலவிக் கொண்டிருக்கும். பிறகு சிறிது நேரம் படுத்து உறங்கும். உறங்கி எழுந்த பின் சோம்பல் முறிக்கும். பிறகு வெளியே ஊர் சுற்றக் கிளம்பிவிடும்.

சுற்றச் சென்ற இடத்திலும் சுவையான இளம் இலைதழைகளையும் ஒரு பிடிபிடிக்கும். பிறகு உல்லாசமாக அங்கும் இங்கும் சுற்றித் திரியும்.

கண்ணில் கண்ட மிருகங்களையெல்லாம் கேலியும், கிண்டலும் செய்யும்.

தன்னுடைய சுதந்திரத்தை அவற்றுடன் ஒப்பிட்டு, "என்னைப் போன்ற சுகவாசி உலகில் வேறு யார் இருக்கிறார்? பிறந்தால் என்னைப் போல் பிறக்க வேண்டும். என்னைப் போல் கஷ்டமே இல்லாமல் சுதந்திரமாகவும், ஆனந்தமாகவும் வாழ வேண்டும். நீங்களெல்லாம் ஒரு பிறவியா? எதற்காகப் பிறந்தீர்கள்? பூமிக்கு வெறும் பாரம்!" என்று அவற்றின் மனம் புண்படும்படியாகப் பேசிச் சிரிக்கும்.

ஒரு நாள்

அந்த ஆட்டுக்குட்டி, தனது காலைக் கடன்களையும், காலை கடமைகளையும் முடித்துக் கொண்டு வெளியே புறப்பட்டது.

ஏதாவது விலங்குகள் தென்படுகின்றனவா... பேசி சிரிக்கலாமே... என்று எண்ணியபடி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே சென்றது.

துரதிர்ஷ்டவசமாக அதன் கண்களுக்கு எந்த விலங்குகளுமே தென்படவில்லை.

அப்போது காலை பதினோரு மணி இருக்கும்.

வயல்கள் நிறைந்த பகுதியில் அந்த ஆட்டுக்குட்டி சென்று கொண்டிருந்தது. ஒரு நிலத்தில் ஒரு காளை மாடு ஏர் பூட்டி உழுது கொண்டிருப்பதைப் பார்த்தது.

உடனே அதற்கு மகிழ்ச்சி கரை புரண்டது.

'ஆ! ஒரு காளை மாட்டியது. வெறும் வாயை எவ்வளவு நேரம்தான் மெல்லுவது? என் கஷ்டம் பார்த்து கடவுள் உதவி புரிந்துள்ளார்,' என்று நினைத்தபடி அந்தக் காளையின் அருகே சென்றது.

"ஏ முட்டாள் காளையே!"

"யாரது?"

"நான்தான் ஆட்டுக்குட்டி!"

"என்ன விஷயம்?"

"ஹூம்! என்ன ஜென்மமோ நீ. கொளுத்துகின்ற வெயிலில் இப்படி நிலத்தில் கிடந்து கஷ்டப்படுகிறாய். உனக்கு இந்த அடிமை வாழ்வில் சலிப்பே ஏற்படுவது இல்லையா?"

"தெரியவில்லை.!"

காளை எரிச்சலோடு ஆட்டுக்குட்டியை பார்த்தது.

"என்னைப் பார்த்தாயா' சுதந்திர புருஷன், ராஜா வீட்டு கன்னுக்குட்டி என்று சொல்லுவார்களே. அதேபோல் நான் ராஜா வீட்டு ஆட்டுக்குட்டி. எனக்குக் கட்டுப்பாடு, வேலை, கடமை என்று எதுவுமே இல்லை. இருபத்தி நான்கு மணி நேரமும் சந்தோஷத்துடன் இருக்கிறேன். ஹாஹ் ஹாஹ்ஹா!"

காளைக்கு எரிச்சல் உச்சத்தை அடைந்தது.

"ஏ பெருமைக்காரனே! முளைத்து மூன்று இலை விடவில்லை. அதற்குள் இத்தனை தற்பெருமையும், தலைக்கனமுமா? இது நல்லதற்கில்லை. நீ மிகவும் கஷ்டப் படுவாய்!" என்றது காளை.

"ஓ! சபிக்கின்றாயா? அட பொறாமைக்காரா. என் வாழ்க்கையில் கஷ்டம் என்பதற்கு இடமே இல்லை. நான் எத்தனை சந்தோஷமாக வாழ்கிறேன் என்று நீ தொடர்ந்து பார்க்கத்தான் போகிறாய். வரட்டுமா? உன் கஷ்டத்திற்கு என் ஆழ்ந்த அனு தாபங்கள்!" என்று சொல்லி விட்டு ஆட்டுக் குட்டி துள்ளிக் குதித்த ஓடியது.

மாலைவரை உழுத காளை வீடு திரும்பும் வழியில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டது.

காலையில் அதனிடம் தற்பெருமையடித்து விட்டு சென்ற அந்த ராஜா வீட்டு ஆட்டுக் குட்டியை, ஒரு ஆசாமி கயிறால் கட்டி இழுத்து வந்து கொண்டிருந்தான்.

அவனோடு இன்னொரு மனிதனும் பேசிக் கொண்டு வந்தான்.


"ஆட்டுக்குட்டி கொழு கொழுவென்று இருக்கிறது. பிரியாணி போட வாங்கிக் கொண்டு போகிறாயா?"

"இல்லை! நம்ப ஆத்தாளுக்குப் பலி குடுக்கணும். குட்டியிலேயே வாங்கி வளர்க்கிறேன் என்பது நேர்த்திக் கடன். அதற்காகத் தான் வாங்கிக் கொண்டு போகிறேன்."

காளை மாடு அந்த பேச்சுக்களைக் கேட்டுவிட்டு ஆட்டுக்குட்டியை பார்த்தது.

'என் வாழ்நாளில் அழவே மாட்டேன்,' என்று காலையில் பெருமையடித்த அதன் கண்களில் கண்ணீர்.


இப்போது காளை மாடு சந்தோஷத்தோடு செல்லத் தொடங்கியது. ■





1-45 வரையான புள்ளிகளை இணைத்து மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **09.02.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **432**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 430

**பரிசுக்குரியவர்:**
ரி.கிஷோர்கான்,
அன்நூர் தேசிய கல்லூரி, வழைச்சேனை-05.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ.ஆர்.எம்.றிஸ்வான், மெடஹம, விபில. | ஏ.ஆர்.றஸ்லினா, 17,2ம் ஒழுங்கை, வெட்டுக்குளம் வீதி, புத்தளம். |
| சானாஸ் பேகம், 122/1 மடவள வீதி, கட்டுகஸ்தோட்டை. | ஜெ.விகாசினி, 67,கோயில் வீதி, மஸ்கெலியா. |
| ஜெயக்குமார், மலர்சாந்தன், ஆண்டு 7 கொ/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. | யூ.சௌமியா, 145/30 ஜெம்பட்டார் வீதி, கொழும்பு-13. |
| அ.சர்மிகா, க/காபொக்க த.ம.வி., மடுல்கலை. | பாத்திமா றுஸ்கா நளீர், மூதூர் மத்திய கல்லூரி, (தேசிய பாடசாலை) மூதூர். |
| ச.நிடோசனா, வ/இறம்பைக்குளம், மகளிர் ம.வி., வவுனியா. | மனோகரன் ராஜி சிவாஜினி, அட்டப்பள்ளம், நிந்தவூர்-10. |

## விடுகதைகளும் விடைகளும்

1. குள்ளக்கோழிக்கு குடலுக் குள் சதங்கை-அது என்ன?
2. சிகப்புப்பெட்டியில் சின்னச் சின்ன சேதிகள் ஆயிரம் உண்டு-அது என்ன?
3. வேலியைத்தாண்டி வெள்ளைக் குதிரை பறக்கிறது-அது என்ன?
4. குட்டைப்பனையில் எட்டுக்கலயம்-அது என்ன?
5. சலசலவென சத்தம் வரும் பேசமட்டும் வராது-அது என்ன?
6. நாலு மூலைப் பெட்டி, நந்த விலை பெட்டி ஓடும் குதிரைப் பெட்டி அது என்ன?
7. எட்டாத வெகு தூரத்தில் தொட்டில் ஆடுது அது என்ன?
8. பகலில் துயிலுவான் இரவில் அலறுவான் அது என்ன?
9. நரைத்த கிழவி குதித்து ஓடுகிறாள்? அவள் யார்?
10. ரத்தத்திலே வளர்வது ரத்தம் இல்லாதாது அது என்ன?

### விடைகள்

1. வேர்க்கடலை. 2. தபால்பெட்டி.
3. பருத்தி. 4. கத்தரிக்காய்.
5. அருவி. 6. அம்மி.
7. குரு விக்கூடு 8. ஆந்தை.
9. சாம்பல் 10. நகம்.

## ஏரியா-51

ஏரியா-51 என்பது அமெரிக்காவில் நெவேதா என்கிற பாலை வனத்தில் பூமிக்கடியில் உள்ள ஆராய்ச்சி மையம். 26 மைல் சுற்றளவில் உள்ள இந்த ஆராய்ச்சி மையத்தை மறைப்பதற்காக ஒரு செயற்கை மலையையே உருவாக்கி இருக்கிறார்களாம். இங்கு 600 பேர் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

1947ம் ஆண்டில் நியூ மெக்சிகோவில் அயல் கிரக உடல்கள் கிடந்ததாக செய்திகள் வெளியானது. இதை அமெரிக்க அரசு மறுத்தது. அங்கு கிடந்தது கால நிலையை அறிவிக்கும் வெதர் பலூன்கள் என்று தெரிவித்து விட்டது.

1989ல் பாப் லாசர் என்பவர் தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்தபோது தங்களிடம் உள்ள அயல் கிரக கலம் எப்படி வேலை செய்கிறது என்பதை கண்டறியும் ஆராய்ச்சியை ஏரியா 51ல் செய்வதாக கூறினார். அதன்பிறகுதான் இந்த செய்தி பிரபலமானது.

ஏரியா 51ல் அயல் கிரகவாசிகளின் கலம் மற்றும் உடல்கள், இருப்பதை அரசு ரகசியமாக வைத்திருக்கிறது என்று 48 சதவிகித மக்கள் நினைக்கிறார்கள்.

இந்த இடம் 'ஏவி-6' போன்ற அதிநவீன உளவு விமானங்களை உருவாக்கி சோதிக்கும் இடம்தான் என்கிறார்கள் சிலர்.

இப்படி ஒரு உளவு விமானம் தயாராவதையோ, ஏரியா-51' இருப்பதையோகூட அமெரிக் காவின் ராணுவத் தலைமையகமான பெண்டகோன் இன்னமும் மறுத்து வருகிறது. ■

## நாலுவரிச் செய்திகள்

* அயோடின் டிஞ்சரின் தன்மைகளைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா டாக்டரும் அல்ல, விஞ்ஞானியும் அல்ல. அமெரிக்க ராணுவ மேஜர் பிராங்க் உட்பரி என்பவர் தான். பாதுகாப்பான, மலிவான, சுலபமாக தயாரிக்க கூடிய நோய் கிருமி எதிர்ப்பு திறன் கொண்டது 'டிஞ்சர்' என இவர் கண்டுபிடித்தார்.

* இன்று கேமரா, பிலிம் என்றெல்லாம் சொன்னால் உங்களுக்கு தெரியும்! 'பிலிம்' என்ற வார்த்தை எப்படி உருவானது தெரியுமா உங்களுக்கு? கிரேக்க மொழியில் 'பெல்மா' என்றால் காலுக்கு கீழே உள்ள மெல்லிய தோல் என்று பொருள். இந்த வார்த்தை ஆங்கிலத்தில் 'பில்மென்' என்று அழைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு பிறகு பில்மென், 'பிலிம்' அகிவிட்டது. மெல்லிய தோல் போல் இருப்பதால் இதை பிலிம் என்கின்றனர்!

* இங்கிலாந்தில், இளம் வயதிலேயே பிரதம மந்திரி ஆனவர்களுள் தற்போதைய பிரதம மந்திரி டோனி ப்ளேயரும் ஒருவர். இவரது வயது 44. மிக மிக இளம் வயதில் இங்கிலாந்தில் பிரதம மந்திரியானவர் யார் தெரியுமா? வில்லியம் பிட் 1783ம் ஆண்டில் ஆட்சி பீடம் ஏறிய போது இவருக்கு வயது இருபத்தி நான்கு.

* விஞ்ஞானிகள் ஏவும் விண்கலன் செல்லும் ராக்கெட்டானது குறைந்தது மணிக்கு 48 ஆயிரம் கிலோ மீட்டர் வேகத்தில் செல்கின்றன.

1972-ல் அமெரிக்கா விண்வெளியில் ஏவிய அட்லாஸ் ராக்கெட் தொடக்கத்தில் 51 ஆயிரத்து 400 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றது.

* 1870ல் இங்கிலாந்தில் கண்டு பிடிக்கப்பட்டதுதான் பேட்மின்டன் விளையாட்டு. ஆனால் இதற்கான விதிமுறைகள் பின்னாளில் இந்தியாவில் உள்ள பூனாவில் உருவாக்கப்பட்டன.

# வினையால் ஒரு வெள்ளைப்புறா

**லெப்**... ரைட்... லெப்... ரைட் அந்தப் பயிற்சி முகாமின் எண்திசைகளிலும் எதிரொலித்தவண்ணம் இருந்தது. அது பயிற்சி முடித்து வெளியேறும் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி. மேடையிலே முப்படைத்தளபதிகளுடன் பிரிகேடியர் கபில ரட்னாயக்கவும் கம்பீரமாக நிற்கிறார். அவர் நாட்டின் வடபகுதியான யாழ்ப்பாணத்திலுள்ள அரியாலைப் பகுதியில் பிரிகேடியராகப் பணிபுரிகிறார். நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சனையினால் அவசரகாலச்சட்டத்தின் கீழ் சிவில் நிர்வாகப் பொறுப்புக்களையும் அவ்வப்பிரதேசங்களுக்குரிய பிரிகேடியர்களே கவனிக்க வேண்டியிருந்தது.

"சமன்! எங்கட ஏரியாவில இருக்கிற குடும்ப விபரம் எல்லாம் எடுத்தாச்சா?



இணுவில் சர்மா

ஓம் சேர்.

எல்லாருக்கும் ஐ.சி.கொடுக்க வேணும்.

நாளைக்குக் கொடுக்கிறதா கிராம நிலதாரிட்ட சொல்லியிருக்கு சேர்.

ஸ்கொட்டில நாலு பேரை வரச்சொல்லு நான் வெளிய போக வேணும்.

அவர் தமக்குத் தேவை ஏற்படும் போது பிக்கப்பில் விரும்பியபடி எங்கும் போய்வர முடியும். அவர் பகுதியில் வசித்த அதிபர் ஒருவரின் மீது அவருக்கு ஒரு கண். அதிபரின் கணவர் வெளிநாடு ஒன்றில் பணிபுரிகிறார். அதிபரை ஒரு முறையாவது அடைந்துவிட வேணும் என மனதிலே நெடுநாளாக ஆசை. அதிபருக்கு இரு பிள்ளைகள். ஒருவன் ஓ.எல்.படிக்கும் மாறன் மற்றவன் ஆண்டு ஆறில் பயிலும் மனோ.

மாறனுடைய நடவடிக்கைகளில் சந்தேகம் இருப்பதாகக்கூறி அரியாலை முகாமில் அவனை தடுத்து வைத்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் அதிபர் பார்த்து சாப்பாடு எல்லாம் கொடுத்து விட்டுப் போவார். பல வழிகளிலும் முயன்றும் அவனை விடுவிக்க முடியவில்லை.

***

பியந்த..! இனிப்போதும் வீட்டில தேடுவாங்க. நீபோ... நண்பனின் பேச்சைக் கேட்கக்கூடிய நிலையில் பியந்த இந்த உலகில் இல்லை அவன் போதை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு போதைப்பிரியனாகப் படிப்படியாக மாறிவருகிறான். வீட்டிலே ஸ்பெஷல் கிளாஸ் என்ற போர்வையில் தாய் மாலினியை ஏமாற்றி வெளியில் நண்பர்களுடன் சேர்ந்து போதைப் பொருள் பாவிப்பதில் ஈடுபடுவது தினசரியாகிவிட்டது. வாழ்வில் பாதியை இழந்த நிலைக்கு அவன் வந்துவிட்டான். அவனுக்கு வீட்டுக்கஷ்டங்கள் ஒன்றும் தெரியாது. தந்தை பெருந்தொகைப்பணத்தை வீட்டிற்கு அனுப்பி வைப்பார். இதைவிட அவ்வப்போது லீவில் வரும் போது நகைகளாகவும், பணமாகவும், பொருட்களாகவும் ஏராளமாகக் கொண்டு வருவார். அவனுக்கு இவற்றைப்பார்க்கும் போது தந்தையின் தொழிலையே தானும் மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசை உள்மனதில் எழும்.

***

மனதில் எழுந்த சோகத்தை அதிபரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பிரிகேடியரிடம் பலமுறை சென்று பேசிப்பார்த்தார். பலன் ஒன்றும் இல்லை. அவரின் வார்த்தைப்பிரயோகங்கள் அதிபருக்குப் புதிராகவே இருந்தது. அப்போது தான் பிரிகேடியரின் உள்நோக்கம் புரிந்தது. இப்படிப்பட்ட கீழ்த்தரமான அதிகாரிகளினால்த்தான் இன்னும் எம் பிரச்சனை தீர்ந்தபாடில்லை என மனதினில் எண்ணிக்கொண்டார்.

திடீரென ஒருநாள் மாறன் வீட்டிற்கு வந்தான். "அம்மா! என்னை விட்டுட்டாங்கள். எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. என்ர ஐ.சி.யை உங்கள வந்து இண்டைக்குப் பின்நேரம் எடுக்கட்டாம்."

ஐயா எங்க?

மே ஒபீசெக்கே இன்னவா!

சேர் குட்ஈவினிங்.

எண்ட.. எண்ட. கோமத?

நல்லா இருக்கிறோம் சேர்.

ரொம்ப நன்றி சேர். மகன்ர ஐ.சி வேணும்.

எதுக்கு நன்றி? நாங்க செய்யறத செஞ்சிட்ட இனி நீங்கதா செஞ்ச வேணும்.

என்ன சேர் செய்ய வேணும்!

எனக்கு நீங்கதான் வேணும். அதிபர் தமிழ்க் கலாச்சாரத்தில் ஊறி வளர்ந்தபடியால் அன்று முதல் அவர் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

***

பட்டியலை எல்லோரும் பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். யார்? யார்? எந்த ஊர்? என்று ஒன்றும் புரியவில்லை. கொழும்பு பஸ் நிலையத்தில்தான் அந்தப் பெயர்ப்பட்டியல் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் விடயம் மட்டும் புரிந்து செய்தி பரவத் தொடங்கியது. கொழும்பு- பதுளை பிரயாணப்பாதையில் புளத்சிங்கள என்ற கிராமத்தால் அந்தத்தனியார் பஸ் போய்க்கொண்டிருந்த போது குண்டு வெடிப்பில் பஸ்சில் பிரயாணம் செய்த அனைவரும் இறந்து விட்டார்கள் என்பது மட்டும் ஊர்ஜிதமாகிக் கொண்டிருந்தது. க.மாலினி என்ற பெயரையும் அந்தப் பட்டியல் பரிதாபமாகத் தாங்கியிருந்தது.

பரபரப்பாகச் செய்தி பரவியது.

***

செய்தியை அறிந்து ஊர் மக்கள் திகைத்தனர். அதிபரும் பிள்ளைகளும் எங்கே போயிருப்பார்கள்? அதிபரின் பரிதாப மரணத்தை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அதே போல் மாறனும் மனோவும் எங்கே போனார்கள் என்பதும்?

***

அவர்களின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுத்து பியந்தவால் துடுப்பெடுத்தாட முடியாமல் சரியாக்களைப்புத் தொட்டது. வேகமாக வந்த பந்து ஒன்று அவனின் தலையைத் தட்டிச் சென்றது. அதன் பின் அவனுக்கு நினைவு இல்லை. உடன் அவன் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டான். அவசர சிகிச்சைப்பிரிவு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

இயங்கிக் கொண்டிருந்த வோக்கியை நிறுத்தி விட்டு சிவந்த கண்களும் தொங்கிய தலையுமாகக் காட்சி தந்தார் கபில ரட்னாயக்க. செய்திகளின் சிதறல்கள் அவர் இதயத்தைத் துளைத்துச் சென்றன. சீரான வாழ்வு சிலந்தி வலையாக ஒரு நொடியில் அறுந்ததை எண்ணி மனம் கலங்கினார். பஸ் குண்டு வெடிப்பில் மாலினி இறந்தது ஒரு செய்தி. மகன் பியந்த போதைப் பழக்கத்தாலும் விபத்தினாலும் இனி சுயமாகச் சிந்தித்துச் செயற்பட முடியாமல் சித்தசுவாதீன முற்றவனாக மாறிவிட்டான் என்பது மற்றச் செய்தி. இனி நான் மட்டும் வாழ்ந்து என்ன பயன் என எண்ணினார். கலைந்த தேனீக்களாக அவர் மனம் சம்பவங்களைச் சுற்றிச்சுற்றி வந்தது. வீணான பெண்ணாசையும் அதிகாரமும் எனக்கு வினையாக முடிந்ததோ என எண்ணினார்.

***

எண்ணி முடிந்த வாக்குகளின் பெறுபேறுகளின்படி பழைய அரசு மண்கவ்வ புதிய அரசு பதவியேற்றது. புரியாத புதிருக்கு விடை காணும் முயற்சியில் புதிய அரசு முனைப்புடன் செயற்பட்டது. புத்தாண்டுடன் போர் நிறுத்தம் புரிந்து கொண்டார்கள்.

சமன் இன்றைக்கு எங்கட போடரில இருந்து அவங்கட பொயின்ருக்குக் கிட்டப்போய்க் கதைக்கலாம் எண்டு யோசிக்கிறன்.

ஓம் சேர். அவையும் நேற்று வந்திட்டுப் போனவைதானே.

அப்ப என்னோட நீயும், காமினியும், ரஞ்சித்தும் ஆம்ஸ் இல்லாமல் வாங்கோ.

ஓ கே சேர்.

சென்றியில அவையோடை கதைச்சுப் போட்டுப் போவோம்.

நல்லது சேர்.

அவர்கள் எதிரே தெரிந்த காவலரணை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காவலரனுக்கருகில் பச்சை வரி உடையில் சிரித்த முகங்களுடன் இரு உருவங்கள் இவர்களை வரவேற்கக் காத்திருக்கின்றன. பிரிகேடியர் நெருங்க நெருங்க எங்கோ பரிச்சயப்பட்ட முகங்களாக! ஓ! இது மாறன் மற்றது மனோ. அவரின் மனதில் மங்கலாகப் பழைய சம்பவங்கள். கைலாகு கொடுப்பதற்காக பிரிகேடியர் நகர்ந்த வேளை அந்தத் திடீர் சத்தம் எல்லோரார் கவனத்தையும் திசை திருப்பியது. கண்ணிவெடியில் ஒரு காலை இழந்த நிலையிலும் மாறனின் கைத்தாங்கலில் கபில ரட்னாயக்க நிமிர்ந்து நிற்கிறார்.

இணைந்த இரு கைகளின் இறுக்கத்திலும் சமாதானத்திற்கான சரித்திரம் வலுப்பெற்றது. **(யாவும் கற்பனை)**

# மாமேதை



கட்டாரிலிருந்து மெய்யன் நடராஜ்

**இ**ந்த இரண்டு மூன்று தினங்களாய் எனக்கு சுகக்குறைவாக இருந்தது. பருவப் பெயர்ச்சியின் நிமித்தம் லேசாய் தடுமல் தலைவலியோட உடம்பும் அசதியாய் இருந்தது. பெனடோல் மாத்திரைகள் வாங்கிக் குடித்துப் பார்த்தன். அப்போதைக்கு குணமாவது போல் இருக்கும். பழையபடி இரவில் காய்ச்சல் அடிப்பது போல் தோன்றும். இன்று என்னால் படுக்கையை விட்டு எழும்ப முடியாத நிலை. அதனால் இன்று வேலைக்குப் போக இயலாது என்று தீர்மானத்தோடு காலை ஏழு மணியைத் தாண்டியும் படுக்கையில் கிடந்த என்னை. "என்னங்க.. நேரமாச்சு. எழுந்திரிங்கப்பா. வேலைக்குப் போகணும்தானே!" என்றவாறு போர்வைக்குள் சுருண்டு கிடந்த என்னருகில் வந்தாள் மனைவி.

எப்போதும் எழு மணிக்குச் சரியாய் எழுந்துவிடும் நான் அவளின் குரல் கேட்டும் சலனமில்லாமல் இருந்ததால் போர்வையை மெல்ல இழுத்துவிட்டு என் தலையில் கை வைத்து பார்த்ததும் அதிர்ந்தவளாய் "ஐய்யய்யோ காய்ச்சல் இப்படி அடிக்குதே! சரி சரி இன்னைக்கு வேலைக்குப் போகாட்டிப் பரவாயில்லை" என்றவாறு ஓடிச் சென்று அவசர அவசரமாய் சூடாய் காப்பி தயாரித்து எடுத்து வந்து குடிக்கச் செய்தாள். குடித்துவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டேன். "மறுபடியும் படுக்காதீங்க. போய் முகங்கழுவிட்டு வந்து புறப்படுங்க. ஆஸ்பத்திரிக்குப் போவோம்" என்ற மனைவியின் அன்புக் கட்டளைக்குக் கட்டுப்பட்டவனாய் மெல்ல எழுந்து குளியலறைக்கு போக முற்பட்டேன். அந்நேரம் "மஹா.. மஹா" என்று யாரோ அழைக்க ஓடிச்சென்று கதவைத் திறக்கும் ஓசை என் காதில் விழுகிறது. "அடடே நந்தினியா. வா. வா" என அவள் வரவேற்கும் நந்தினிக்கு நான் வைத்திருக்கும் பெயர் ஊர்வம்பு.

எப்போது வீட்டிற்கு வந்தாலும் எவர் கதையையாவது அளக்காமல் சென்றதாய் நானறியேன். இன்று யாரைப்பற்றி என்ன சொல்லபோகிறாளோ! எல்லோர் வீட்டுக் கதையையும் எங்களிடம் சொல்லும் அவள் எங்கள் கதையையும் இதே போல் மற்றவர்களிடம் சொல்வாள் என்பது தெரியும். இவளோட அளவிற்கதிகமாய் தொடர்பு வைக்க வேண்டாமென்று மகாவிடம் சொல்லி வைத்திருக்கின்றேன். இருந்தாலும் இதற்கென்றே வீடு தேடி வருபவளை போவென்று துரத்தவா முடியும்.

குளியலறையிலிருந்து வெளியே நான் வந்த போது மஹாவும் நந்தினியும் ஏதோ சுவாரஷ்யமாக பேசிக் கொண்டிருந்தார்கள். "மஹா உனக்கு விசயம் தெரியுமா? இதை உனக்கு சொல்றதுக்காகத்தான் நான் வந்தேன் அதற்குள்ளே மறந்துட்டேன் பார்த்தியா!" என அவள் சொன்னது காதில் விழ மேலும் என்ன சொல்ல போகிறாள் என காதை கொடுத்தேன்.

"நம்ம மூக்காயி மகன் அதான் அந்தக் கேனப் பய பூராசு. அவனுக்கு கல்யாணம் ஆயிடிச்சி தெரியுமா? பொண்ணு ரொம்ப அழகானவளாம். என்னால நம்ப முடியலடி. எப்படித்தான் அவனுக்குப் பொண்ணு கொடுத்தாங்களோ தெரியல. பாவம் அந்த பொண்ணு. இவனோட எப்படித்தான் குடும்பம் நடத்தப் போவுதோ." மூச்சுவிடாமல் அவள் சொல்லி முடித்ததை கேட்டதும் என் மனைவிக்குப் போலவே எனக்கும் ஆச்சரியம்தான். இந்த பூராசு பிறவியிலேயே மூளை வளர்ச்சிக் குன்றியவன். யார் என்ன சொன்னாலும் செய்வான். மூளைதான் வளரவில்லையே தவிர ஆள் நன்கு வளர்ந்திருந்தான். மாடு மாதிரி உழைப்பான். பொறுப்பற்ற பெற்றோரால் சாப்பாட்டிற்காய் பல நேரங்களில் பல வீடுகளில் இவன் கையேந்தி நிற்பதைப் பார்த்திருக்கின்றேன். நல்ல உடையின்றி, குளிக்காமல் மஞ்சள் காவி படிந்த பற்களோடு ஒரு பைத்தியக்காரனைப்போல் ஊருக்குள் உலவிக் கொண்டிருந்தான்.

இவனது கோலம் கண்ட சிறுவர்கள் இவனை வம்பிற்கிழுப்பார்கள். இவன் கெட்ட வார்த்தையில் திட்டுவான். பதிலாக சிறுவர்கள் இவனுக்கு கல் அடியை பரிசாய் வழங்குவார்கள். அந்நேரங்களில் அவனைப் பார்க்கப்பரிதாபமாக இருக்கும். சிறுவர்கள் மாத்திரமன்றி சில பெரியவர்களும் இவனை துன்புறுத்துவார்கள். அந்நேரம் அவர்கள்தான் மூளை வளர்ச்சிக் குன்றியவர்களாய் எனக்குத்தோன்றும். அப்போதெல்லாம் ஆண்டவன் மேல் எனக்குப் பொல்லாத கோபம் வருவதும் உண்டு. ஏன்தான் இப்படிப் பட்டவர்களைப் படைக்கின்றானோ என ஆத்தரப்படுவேன். இப்படிப்பட்டவனுக்குத் திருமணம் என்றால் நம்பமுடியாத விசயமல்லவா? நந்தினி பொய் சொல்ல மாட்டாள் என்பதால் நம்பினேன்.

நான் ஆடை மாற்றிக் கொண்டு வந்தபோது நந்தினி புறப்பட்டு விட்டிருந்தாள். அதற்குள் மஹா என்னை சாப்பிட அழைக்க காய்ச்சலால் கசந்த வாய்க்குள் இரண்டு இட்லியை திணித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டேன். கூடவே மஹாவும் வந்தாள். இருவரும் அருகில் இருக்கும் தனியார் ஆஸ்பத்திரியை நோக்கி மெல்ல நடந்தோம். வழியில் எனக்கு அவன் மூளைவளர்ச்சிக் குன்றியவன் என்று தெரிந்தும் துணிந்து அவனைக் கைப்பிடித்த அந்த பெண்ணின் ஞாபகம். கட்டிக்கப் போகிறவன் கொஞ்சம் கறுப்பா இருந்தாலும் தட்டிக் கழிக்கிற பெண்கள் வாழும் சமுதாயத்தில், அதுவும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு பெண்ணா? என்ன மென்மையான இதயம். யாரும் யாருக்கும் வாழ்வு கொடுக்கலாம். ஆனால் ஒருவனின் ஊனத்தை பெரிதாய் எண்ணாமல் தன்னையே தானமாய் வழங்க தன்னலம் கருதாதவர்களால்தான் முடியும். உண்மையில் அப்பெண் சாதாரணப் பெண் அல்ல. பெண் என்னும் பெயரில் அவனுக்காய் மண்ணில் அவதரித்த கருணை தெய்வம்" என எண்ணிக் கொண்டே ஆஸ்பத்திரியையும் அடைந்து விட்டோம்.

எங்களின் முறைக்காக ஆஸ்பத்திரியின் வரவேற்புக்கூட நாற்காலியில் அமர்ந்திருந்தோம். எங்களைப் போலவே இன்னும் சிலரும் அமர்ந்திருந்தார்கள். அந்நேரம் ஆஸ்பத்திரியின் உட்பக்கமிருந்து ஒரு வயதான பெண்மணி வந்தாள். முகத்தைப் பார்த்தேன். அது பூராசின் தாய். அவளை அவ்விடத்தில் கண்டபோது முன்னெப்போதும் இல்லாத மரியாதை தோன்றியது. இப்படியொரு மகனைப் பெற்றதுமன்றி, கல்யாணம் வேறு செய்து வைத்து விட்டாளே! "கெட்டிக்காரிதான்." மனசுக்குள் புகழ்ந்து கொண்டேன். அப்போது "என்னங்க கொஞ்சம் மூக்காயி அக்காவுக்கு பின்னால் நிற்கிற பெண்ணைப் பாருங்க. அவதான் பூராசின் பெண்டாட்டி" மஹா காட்டித்தந்த அந்தப் பெண்ணை ஆவலோடு பார்த்தேன். நந்தினி சொன்னது போல் அவள் தேவதை போலவே இருந்தாள். "ச்சே... இப்படி ஒரு பெண்ணை எப்படி பூராசுக்கு கட்டிவைக்க ஏற்பாடு செய்தாங்க?" மஹாவிடம் கேட்டேன்.

"அது ஒண்ணும் பெரிய காரியம் இல்லீங்க. நல்ல அழகா இருக்கிறாளா, இந்தத் திமிர்ல எவன் கிட்டயோ பல்ல' காட்டியிருக்கா. இவ திமிரை அடக்குறதுக்காக எவனோ ஆசை காட்டி மோசம் செய்திட்டுப் போயிட்டான். இப்போ மூணு மாசம். சொந்த ஊர்ல இருந்தா குடும்ப மானம்போய்விடும். அத்தோடு பிறக்கப் போகிற குழந்தைக்கு ஒரு அப்பா வேணும். அவளை பெத்தவங்க பூராசோட அப்பனுக்கு கொஞ்ச பணத்தையும் சாராயத்தையும் கொடுத்து பூராசு தலையிலே இவளைக் கட்டி வச்சிட்டாங்க. நந்தினி எல்லாவிபரத்தையும் சொல்லிட்டுத்தான் போனாள்" காதுக்குள் இவ்வளவு பெரிய விசயத்தை கிசுக்கிசுத்தபோது என் கற்பனையில் மிதந்த அந்த கருணை தெய்வம் அந்த நிமிஷத்திலேயே கலைந்து போனது. இப்போது போதிய அறிவு இருந்தும் முட்டாள்களாய் போகும் இது போன்றவர்களுக்குள் மூளை வளர்ச்சிகுன்றிய பூராசு ஒரு மாமேதையாக எனக்குத் தெரிகிறான்!

# கண்ணாமூச்சி ரே... ரே... 10

## பட்டுக்கோட்டை பிரபாகர்

**உ**தவி கமிஷனர் மார்த்தாண்டன் களத்தில் இறங்கினார்.

சந்திரஜித் வெறியர்கள் அனுப்பின மிரட்டல் கடிதத்தை ஜெராக்ஸ் பிரதி எடுத்துக் கொண்டு லேபரட்டரிக்கு அனுப்பி வைத்தார். மதுலதா வீட்டில் முதலில் சக்கையாய் விசாரித்தார். டிராஃபிக் டிபார்ட்மெண்ட்டிற்கு வெள்ளை மாருதியின் எண் சொல்லப்பட்டது. சந்திரஜித்தை விசாரித்தார்.

"சில நண்பர்கள் மதுலதா பேட்டில அப்படி சொல்லியிருக்கிறதை என் கவனத்துக்குக் கொண்டு வந்தாங்க. நேர்ல சந்திக்கிறப்போ அப்படி எந்த விதத்தில குறைஞ்சி போச்சி என் முகம்னு கேட்கச் சொன்னாங்க. லாயர் நோட்டீஸ் விடச் சொன்னாங்க, மான நஷ்ட ஈடு வழக்கு ஏன் போடக் கூடாதுன்னு கேட்டு. ஏதோ பக்குவமில்லாம பேசிட்டாங்க விடுங்கன்னுதான் நான் எல்லார்கிட்டேயும் சொன்னேன்."

"இந்த கையெழுத்து உங்களுக்கு பரிச்சயமானதா இருக்கா, பாருங்க? அடிக்கடி உங்களுக்கு லெட்டர் எழுதற யாராவது ரசிகர் கையெழுத்து மாதிரி இது தெரியுதா?"

"செகரட்டரி ராமனைத்தான் கேக்கணும் நீங்க."

ராமன் வாங்கிப் பார்த்து உதடு பிதுக்கினான். ரசிகர் கடிதங்களைக் கட்டுக் கட்டாகத் தூக்கி வைத்தான். நான்கு போலீஸ் அதிகாரிகள் அவற்றைக் கட்ட விழ்த்து ஒன்றைக்கூட விடாமல் அலச ஆரம்பித்தார்கள்.

மார்த்தாண்டனுக்கு அங்கேயே போன் வந்தது.

"ஹலோ மார்த்தாண்டன் ஹியர்."

"சார், நீங்க அனுப்பி வச்ச லெட்டர்ல ரத்தத்தாலதான் மேட்டர் எழுதப்பட்டிருக்கு. சந்தேகமே இல்லை. ஹ்யூமன் ப்ளட். கைரேகைகள் ஏழெட்டு இருக்கு."

"தாங்க் யு" யோசனையாய் வைத்தார்.

"மிஸ்டர் சந்திரஜித், இதுவரைக்கும் உங்களுக்கு எந்த ரசிகராவது ரத்தத்திலே எழுதியிருக்காரா?"

"இல்லை சார். ராமன், அப்படி எதுவும் ரத்தத்திலே எழுதி லெட்டர் வந்திருக்கா..?"

"இல்லை சார்" என்றான் ராமன்.

"உங்களுக்கு எவ்வளவு மன்றங்கள் இருக்கு?"

"ஆயிரத்தி நானூத்திப் பத்து" என்றான் ராமன்.

"தலைமை எங்கே?"

"மெட்ராஸ்ல தான்."

"தலைவர் அட்ரஸ் கொடுங்க."

"இதோ..."

பெற்றுக் கொண்டு மார்த்தாண்டன் இரண்டு இன்ஸ் பெக்டர்களுடன் ஜீப்பில் புறப்பட... ரசிகர் கடிதங்கள் அலசும் பணி தொடர்ந்து கொண்டிருந்தது.

சங்கரதாஸ் பல் தேய்த்து முடித்தவுடன் போன் செய்தான்

"ஹலோ" என்றான் சுதிர்.

"சுதிர், நான்தான். ராத்திரி எதுவும் பிரச்னை இல்லையே?"

"இல்லை. நாலு மணி நேரத்துக்கு ஒரு தடவை நீ சொன்ன இன்ஜெக்ஷனைப் போட்டுக்கிட்டே இருந்தேன். இப்பவும் தூக்கம்தான்."

"ரூம் கதவு மூடிதானே இருக்கு?"

"ஆமாம். நான் போன் பேசறது அவளுக்குக் கேக்காது."

"அதுக்குத்தான் கேட்டேன். இப்ப துர்க்கா எங்கே இருக்கா?"

> "இது ஒரு ஊசி மருந்து. இதிலே பத்து ஊசி இருக்கு. இது சிங்கப்பூர்ல தயாரிச்சது. தயாரிச்ச ஒரே மாசத்தில இந்த ஊசி மருந்தை தடை செஞ்சிட்டாங்க. ஃபாக்டரி, ஸ்டாக்கிஸ்ட்ஸ் எல்லார்கிட்டேயும் பிடுங்கிட்டாங்க மிச்சமுள்ளதை."

"அவ ஆத்தாவோட இருக்கா."

"அதாவது புருஷனோட சண்டை போட்டு கோவிச்சிக்கிட்டு."

"ஆமாம். புரியுதோ புரியலையோ ஆமாம் போட்டு வைக்கிறேன்."

"பேப்பர் பார்த்தியா?"

"பார்த்தனே.. ரெண்டு ராத்திரி ஆச்சி. ஆனா நியூஸ் எதுவும் இல்லையே.."

"அமுக்கிட்டாங்க. நான் நேர்ல வர்றேன். உனக்கு வேலை வச்சிருக்கேன்."

சங்கரதாஸ் போனை வைத்துவிட்டு, குளித்து, உடையணிந்து தன் அறையை விட்டு வெளியே வந்தபோது.. கீழே ஹாலில் அவனுக்காக அந்த இளைஞன் கையில் ஒரு சின்ன பார்சலோடு காத்திருந்தான்.

"சுலைமான் ராவுத்தர் கொடுக்கச் சொன்னாரா?"

"ஆமாம் சார்."

"ரொம்ப தேங்ஸ்ன்னு சொல்லு. அப்புறமா நான் போன் பண்ணிப் பேசறேன்னு சொல்லு."

பார்சலை வாங்கிக் கொண்டு வெளியே நடக்குமுன், "ஏய்!"

"அய்யா!"

"யாராச்சும் என்னைத் தேடி வந்தா... நான் வர லேட்டாகும்னு சொல்லு."

"சரிங்கய்யா."

வெளியே வந்து நீல நிற டோயாட்டோவை எடுத்துக் கொண்டு சல்லென்று சாலையில் வழுக்கினான். பெஸண்ட் நகர் பங்களாவிற்கு வந்து நிறுத்தி, இறங்கி பார்சலோடு வாசலுக்கு வந்து பஸ்ஸர் அழுத்தினான்.

மாஜிக் ஐயில் இவனைப் பார்த்து விட்டுக் கதவைத் திறந்தான் சுதிர்.

"இதென்ன பார்சல்?"

"சிங்கப்பூர்லேர்ந்து அப்பா சுலைமான் ராவுத்தார்கிட்டே கொடுத்தனுப்பிச்சிருக்கார். நான்தான் நாலு நாளைக்கு முன்னாடி போன் பண்ணி அனுப்பச் சொன்னேன்."

"சரி, என்ன இது?"

"இது ஒரு ஊசி மருந்து. இதிலே பத்து ஊசி இருக்கு. இது சிங்கப்பூர்ல தயாரிச்சது. தயாரிச்ச ஒரே மாசத்தில இந்த ஊசி மருந்தை தடை செஞ்சிட்டாங்க. ஃபாக்டரி, ஸ்டாக்கிஸ்ட்ஸ் எல்லார்கிட்டேயும் பிடுங்கிட்டாங்க மிச்சமுள்ளதை."

"ஏன்?"

"இது ட்யூபர்குளோசிஸ்க்காக விசேஷமா கண்டுபிடிக்கப்பட்ட மருந்து. முப்பது ஊசி தொடர்ந்து போட்டா பிரமாதமான ரெக்கவரி தெரியும்."

"பின்னே ஏன் தடை செஞ்சாங்க?"

"டி.பி இல்லாத சாதாரண உடம்புக்கு தப்பித் தவறி இதைப் போட்டுட்டா.. நாலஞ்சி ஊசிகள்லயே சிறுமூளையை உடனே பாதிச்சி... மெண்ட்டல் டிஸ்ஆர்டர் ஏற்படுத்திடுது. ஒரு ஹாஸ்பிடல்ல தவறுதலா இதை ரெண்டு சாதாரண பேஷண்ட்சுக்குப் போட்டு.. அவங்க ரெண்டு பேருக்கும் மெண்டல் டிஸ் ஆர்டர் வந்துடுச்சி. உடனே இந்த மருந்தை தடை செஞ்சி கம்பெனியை சீல் வச்சிட்டாங்க. இந்த அட்வர்ஸ்-எஃபெக்ட் இல்லாம இதே மருந்தை தயாரிக்கிறதுக்கு முயற்சிகள் எடுத்துக்கிட்டிருக்காங்க."

"தடை செய்யப்பட்ட ஊசி உனக்கு மட்டும் எப்படி கிடைச்சது?"

"தடை செஞ்சாலும் சில டீலர்கள் பதுக்கி வச்சி அநியாய லாபம் வச்சி டி.பி. பேஷண்ட்சுக்கு விக்கிறாங்க. இங்கே என் ஃபிரண்டு ஒருத்தனுக்கு இந்த ஊசி அதி முக்கியமா தேவைப்படுதுன்னு அப்பா கிட்டே சொன்னேன். வாங்கி அனுப்பி வச்சிட்டார்."

"அது சரி. யாருக்கு இங்கே டி.பி?"

"நம்ம மதுலதாவுக்குத்தான்."

"என்ன உளர்றே நீ?"

"நானா? தினம் ஒரு ஊசின்னு பத்து நாள் போட்டுக்கிட்டதுக்கப்புறம் மதுலதா பிரமாதமா உளறப் போறாப் பாரு. தமாஷா இருக்கும்."

"மை காட்! இப்பதான் தாஸ் எனக்கு விபரீதமே புரியுது. பத்து நாளைக்கு இவளை இங்கே வச்சிக்கிறதா?"



"ம்கூம், வா, எல்லாம் சொல்றேன் விபரமா. இப்படி உக்காரு" என்று சோபாவில் அமர்ந்து சிகரெட் கொளுத்திக் கொண்டான் சங்கரதாஸ்.

சங்கரதாஸ் திட்டத்தை விபரமாகச் சொல்லி முடித்ததும், சுதிர் அப்படியே முகம் வெளிரிப் போய் உட்கார்ந்திருந்தான்.

"என்ன சுதிர், பேச மாட்டேங்கறே?"

"இவ்வளவு கொடூரமா மதுலதாவை தண்டிக்கணுமான்னு.."

"யோசிக்கிறியா? நான் யோசிச்சி முடிச்சிட்டேன் சுதிர் அவளோட திமிருக்கும், அலட்சியத்துக்கும் இது தேவைன்னு படுது. மதுலதா உயிரோடவும் இருப்பா. செத்தும் போயிருப்பா. எவ்வளவு புதுமையான தண்டனை."

"யாரும் கண்டுபிடிக்க மாட்டாங்கன்னு சொல்றியா தாஸ்?"

"நான் சொன்ன பிளான்ல எதாச்சும் ஓட்டை இருக்கான்னு சொல்லு."

சுதிர் யோசித்து, "இல்லைன்னுதான் படுது" என்றான்.

"மதுலதா முரண்டு பண்ணாம சாப்பிட்டாளா?"

"இல்லை. அடம்தான். அறைஞ்சி, அறைஞ்சிதான் சாப்பிட வச்சேன்."

"நான் சொல்லிக் கொடுத்தபடியே பேசினியா?"

"ஆமாம். உன்னைக் கடத்திட்டு வந்து இருபது லட்சம் வேணும்னு கேட்ருக்கோம்னு சொன்னேன். கடத்திட்டு வந்து மூணு நாளாச்சின்னு சொன்னேன்."

"குரலை மாத்திதானே பேசினே?"

"ஆமாம் தாஸ்."

"கண்ணை கட்டினபடியேதானே எல்லாம்?"

"ஆமாம்."

"வா, பாப்போம் என்ன செய்றான்னு."

சங்கரதாஸ் நடந்து மதுலதாவை வைத்திருக்கும் ஏ.சி அறயின் கதவைத் திறந்து உள்ளே வந்தான்.

கட்டில் மேல் மயக்கத்தில் கிடந்தாள் மதுலதா.

"சிரின்ஞ்சை எடு. முதல் ஊசி என் கையால துவக்கி வைக்கிறேன்" என்றான் தாஸ் மெதுவான குரலில். பார்சல் பிரித்தான். சுதிர் எடுத்துத் தர.. ஊசியின் மருந்தை லோட் செய்து கொண்டு, காற்றுக் கொப்பளங்களை வெளியேற்றி விட்டு மதுலதாவின் புஜத்தில் குத்தி மருந்து முழுக்கச் செலுத்தி விட்டு வெளியே எடுத்தான்.

ஊசி குத்தினபோது முனகினாள். கண் இமைகள் அசைந்தன. மீண்டும் சலனமற்ற மயக்கம். மார்புகள் சீராக ஏறி இறங்கிக் கொண்டிருக்க.. கைகளும், கால்களும், கண்களும் கட்டப்பட்ட நிலையில் பாவமே என்று கிடந்தாள்.

இருவரும் வெளியே வந்தார்கள்.

(கண்ணாமூச்சி தொடரும்)

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

## உண்மைத் தொடர் 40

**ஜெ**ர்மனியப்படைகள் மிக வேகமாக தோல்வியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. பல நகரங்கள் ரஷ்ய படைகளிடம் வீழ்ந்தன. சில இடங்களில் தோல்வியை ஒப்புக் கொள்வதுபோல் படைகளை வாபஸ் பெற ஹிட்லர் உத்தரவிட்டான். ஆனால் பல இடங்களில் சாத்தியமற்றது என்றும் தெரிந்தும்கூட எதிர்த்து நிற்குமாறு கட்டளையிட்டு ஆயிரக்கணக்கான ஜெர்மனி வீரர்களை பலிகொடுத்தான்.



தோல்விகளின் தொடர்ச்சியாக செக்கோஸ்லாவாக்கியா உட்பட ஐரோப்பாவின் பல கேந்திர நிலைகள் ஹிட்லரின் கைமீறிப் போயின.

தோல்வியடைந்து பெர்லினை நோக்கி திரும்பிக்கொண்டு இருந்த ஜெர்மன் படைகள் இடையில் அகப்பட்ட மக்களை மோசமாக துன்புறுத்தின. இந்தத் தோல்வி பயணத்தின் போது ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.



யுத்தத்தில் பல முனைகளில் ஹிட்லருக்கு தோல்வி கிடைத்துக் கொண்டிருந்த போதிலும் அவன் வசம் இருந்த நாடுகளில் சித்திரவதைக் கூடங்கள் மாத்திரம் எந்தவித பாதிப்பும் இன்றி இயங்கிக்கொண்டு இருந்தன. சில இடங்களில் போர் தளபாடங்களுக்கும் எரிபொருளுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவிய போதிலும் சித்திரவதை முகாம்களுக்கான எரிபொருள் விநியோகத்தை குறைக்கக்கூடாதென தனது அதிகாரிகளுக்கு ஹிட்லர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தான்.

போரின் பிற்பகுதியில் பல சித்திரைவதை முகாம்களில் மனித உடல் உருக்கப்பட்டு அதனால் பெறப்பட்ட சவர்க்காரம் உட்பட உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. ஹிட்லரின் போர்க் கால நிர்வாகத்தில் காணப்பட்ட ஒரு வெற்றிகரமான அம்சம் அதன் தோல்வியில் விளிம்பை நோக்கிச் சென்று கொண்டு இருந்த போதிலும் அதனைக் காரணம் காட்டி உற்பத்தி முடக்கத்தை மேற்கொள்ளாது சகலதையும் வழமைபோல் இயங்க வைக்க அரும்பாடுபட்டான். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றான். இதன் காரணமாக யுத்தத்தின் கடைசி வருடங்களில்கூட ஜெர்மன் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படவில்லையென வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டிடுகின்றனர்.

எவ்வாறனெனிலும் ஹிட்லரையும் அவனது கூட்டணியை விடவும் எதிர்த்தரப்பு பலமாக இருந்தது. நவீனத்துவங்களால் நிரம்பிக் காணப்பட்டது. ஆதலினால் போரின் தோல்வி ஹிட்லருக்கு பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டது. இதுவரை காலமும் ஹிட்லரின் எதிர்தரப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை வழங்கிக்கொண்டிருந்த அமெரிக்கா பாரியளவில் ஆயுத தளபாடங்களை விநியோகித்ததுடன் ஐரோப்பாவில் தமது படைகளையும் பரவச்செய்தது. 1944ம் ஆண்டின் இறுதிப் பகுதியாகும்போது ஐரோப்பாக் கண்டத்தில் சிறிய பகுதிகளில் மாத்திரமே ஹிட்லரின் ஆதிக்கம் காணப்பட்டது.

பிரேக் என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தம் ஐரோப்பாவின் போரை முடித்து வைக்கும் சண்டையாக அமைந்தது.

(5ம் பக்கத் தொடர்ச்சி....)

நீங்கள் இந்திய ராணுவத்திட்டையும் காசுவாங்கி, இலங்கை ராணுவத்திட்டயும் காசுவாங்கி, வவுனியாவிலயும் கப்பம் வேண்டி, புலிகளை அழிக்கும் வேலையிலயும் மும்முரமா இருந்து, பிறகு அவர்கள் ஆதரவுடனேயே எம்.பியுமாகி... எல்லா வேளைகளிலும் தமிழ் மக்கள் மானம் காப்பதையே குறியாய்க் கொண்டு செயற்பட்டதைக் குற்றம் சொல்லுது மனுசன்.

அதில உள்ள கெட்டித்தனம் ஆளுக்கு விளங்குதில்லை. உங்கட இயக்க எம்.பியாக மட்டக்களப்பிலிருந்து 1988 தேர்தலில தெரிவான கருணாகரன் -ஜனா- பாளிமெண்டில அவசரகாலச்சட்டத்திக்கு ஆதரவாய்க் கையுயர்த்தேக்கையும் நீங்கள்தான் அவருக்குத் தலைவராயிருந்தனீங்கள் எண்டும் சொல்லுறார்.

அதுமட்டுமில்லை, இந்திய ராணுவம் வெளியேறின நேரம் தலைமன்னார்க் கடற்கரையில் ஆயுதங்களைப் போட்டுவிட்டுத் தப்பியோடி இந்தியா போன நீங்கள், அங்கை என்னமோ சபீனாவோ கபீனாவோ கடத்தினதாயும், மரத்தால ஏறிக் கொப்பால இறங்கினதாயும் ஏதேதோ கொச்சை கொச்சையாய்க் கதையள் சொல்லுது. அரசியல்ல கோவமிருந்தால் இப்பிடித் தனிப்பட்ட முறையில அபாண்டப் பழிகளைச் சுமத்தித் தாக்குதல் நடத்திறதெல்லாம் படிச்சவையின்ர குணம் போலும். எனக்கு அதுகளைக் கேக்கவே காது கூசுது. தமிழன் மானமாய் வாழ நீங்கள் வேணும், உங்கட வீரப் பேச்சு வேணும். அதுதான் எனக்குத் தெரிஞ்சது.

எனக்குள்ள கவலை எல்லாம், எம்.பி ஆன பிறகு உங்களை முழுசாய்க் காணக் கிடைக்கேல்லை எண்டதுதான். எவ்வளவெல்லாம் செய்து முடிக்கத் திட்டம் வைச்சிருந்தனீங்கள். மேடைமேடையாய்ச், சொன்னனீங்கள். இப்ப ஏன் ஒரு பேச்சையுமே காணேல்லை எண்டதுதான் என்ர பிரச்சனை. தலைவர் பிரபாகரனும், பிரதமர் ரணிலும்தான் இனி அதையெல்லாம் பாத்துக் கொள்ள வேணும் எண்டு நீங்கள் விட்டிட்டிருக்கிறதாய்த்தான் நான் விளங்கிக் கொள்ளுறன். அப்ப நீங்களெல்லாம் ஏன்? எண்டு கெக்கெட்டம் விட்டுத் திரியிறவைக்கு உறைக்கிற மாதிரியும், வாயைப் பொத்திற மாதிரியும், உங்கட தற்போதைய வேலைத் திட்டத்தையும் முயற்சிகளையும் எடுத்து விடவேணும் நீங்கள்.

அண்ணையிடமிருந்து நான் எதிர்பார்ப்பது அவ்வளவே.

மிகுந்த பட்சமுடன்,

**சாதாரணன்.**

(5ம் பக்கத் தொடர்ச்சி...)

## ரஜினியின் அரசியல்........

தற்போது தமிழக முதல்வராக இருப்பவர் பன்னீர்செல்வம் அவர் தேவர் இனத்தைப் சேர்ந்தவர். ஆகவே ஜெயலலிதா மீண்டும் வெற்றி பெற்றால் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவருக்கு முதல்வர் பதவி இல்லாமல் போய் விடும் என்ற பிரசாரத்தை தி.மு.க கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. ஆனால் இப்பிர சாரம் எவ்வளவு தூரம் எடுபடும் என்பது தெரியவில்லை. ஏனெனில் ஒரு புதுயுக்தியை ஜெயலலிதா கையாண்டிருக்கிறார். அவர் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோர வில்லை. எங்கள் வீட்டுப்பிள்ளை எம்.ஜி.ஆரின் சின்னமான இரட்டை இலைக்கு வாக்களிக்க வேண்டும் என்ற ஆண்டிப்பட்டி தொகுதி முழுவதும் விளம்பரங்கள் செய்யப்பட்டுள் ளன. ஆண்டிப்பட்டிக்கும் இரட்டை இலைக் கும் உள்ள உறவு என்பது அவ்வளவு சாதா ரண உறவல்ல. அமெரிக்காவின் புரூக்ளின் மருத்துவனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர்., தொகுதிக்கு வராமல் படுக்கையில் இருந்து கொண்டே 1984ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார். எம்.ஜி.ஆர் இறந்து விட்டார். அவருடைய உடலை விமானத்தில் கொண்டு வருகிறார் கள் என்று தி.மு.க கட்டவிழ்த்து விட்ட பிர சாரம் இங்கு எடுபடவில்லை. இத்தகையச் சூழலில் ஜெயலலிதா ஜெயிப்பது என்பது உறுதியாகிவிட்ட விஷயம். அப்படி அவர் வெற்றி பெற்று முதல்வராகி விட்டால் மூன்றாவது அணி என்பது மறுபடியும் தேவையற்ற ஒன்றாக மாறி விடும்.

இதுவரை விவாதித்த விஷயங்களை கணக்கில் எடுத்துக் கொண்டுதான் ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்து பேச முடியும். 1991ம் ஆண்டில் இருந்து 1996 வரை நடை பெற்ற அ.தி.மு.க ஆட்சியின் போது ரஜினி காந்துக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையேயான உறவு என்பது சீர்கெட்டது. அப்போதைய அ.தி.மு.க அமைச்சரான ஆர்.எம்.வீரப்பன் மேடையில் இருக்கும் போது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று ரஜினி பேசினார். இப்படி பேசிய ரஜினி காந்தை கண்டிக்கவில்லை என்று ஆர்.எம் வீரப்பன் அமைச்சரவையில் இருந்து நீக்கப் பட்டார். ரஜினிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே சீர்கெட்டு போன உறவைத் தங்க ளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள் வதற்கு வீரப்பன் முதற்கொண்டு எல்லாக் கட்சிகளுமே பிரயத்தனம் நடத்தின. அவர் கட்சி தொடங்குவார் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அப்படி எதையும் அவர் செய்யவில்லை.

ஆனால் தி.மு.கவுக்கும் தமிழ் மாநில காங்கரசுக்கும் இடையே ஒரு பாலமாக அவர் விளங்கினார். 1996ம் ஆண்டு தேர்தலின் போது தி.மு.க கூட்டணிக்கு ஆதரவாக வாக் களிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் வைத்த வேண்டுகோள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதா என்பதை அப்போதே கேள்வி எழுப்பியவர்களும் உண்டு. அவர் ஆதரிக்கா விட்டால்கூட தி.மு.க வெற்றி பெற்றிருக்கும் என்பதுதான் உண்மை. ஏனென்றால், அந்த காலக்கட்டத்தில் ஜெயலலிதா மீது அப்படி ஒரு வெறுப்பு நிலவியது. அ.தி.மு.கவுக்கு எதிராக வாக்களிக்க விரும்பியவர்கள் தி.மு.க. வுக்கு வாக்களித்தனர். ரஜினிகாந்த் மறுபடியும் 1998 மக்களவைத் தேர்தலில் அதே கூட்ட ணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். கோவையில் குண்டு வெடிப்பு நடந்த சூழலில் அவர் வைத்த வேண்டுகோளை மக்கள் புறக்கணித்தனர் என்றுதான் சொல்ல வேண்டும். கண் முன் னால் நடந்துள்ள ஒரு கொடுமையான சம்ப வத்தை முழுவதுமாக மறைப்பது போன்று அவருடைய பேச்சு அமைந்திருந்தது. உளவுத் துறை சரியாக செயல்படாததால்தான் குண்டு வெடிப்புகள் நடைபெற்றது என்ற உண் மையை அவர் சுலபமாக மறைக்கப்பார்த் தார். தேர்தலில் வெற்றி பெற தி.மு.க.வின் எதிரிகள் குண்டு வைத்து, அக்கட்சிக்கு கெட்ட பெயரை வாங்கித்தர முயல்கிறார் கள் என்ற அடிப்படையில்தான் அவருடைய பேச்சு அமைந்திருந்தது. அவர் அரசியலுக்கு வருவார் என்று பேசப்பட்ட ஒன்றரை ஆண்டுக்குள்ளாகவே அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டார் என்பதுதான் உண்மை.

ஆனால் தமிழகத்தில் உள்ள பத்திரிகை களும், சோ போன்ற வேறு சிலரும் ரஜினி காந்த் மிகப்பெரிய செல்வாக்குமிக்கவர் என்ற தோற்றத்தை உருவாக்க முயன்று வருகின்ற னர். தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரண்டு கட்சிகளுமே அமைப்பு ரீதியாக பலம் வாய்ந் தவை. அமைப்பு ரீதியாக பலம் இல்லாமல் கட்சியைக் கட்டுவது என்பது அவ்வளவு இலேசான காரியம் அல்ல. அது ஒருபுறம் இருக்க தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகள் மீது மக்கள் ஒரேயடியாக வெறுப்படைந்து விட்டனர் என்றும் கூற முடியாது.

ரஜினிகாந்துக்கு தன்னுடைய பலம் என்ன என்பது தெரியும். கடந்த இரண்டு ஆண்டு களாக அவர் எந்தப் படத்திலும் நடிக்கவில்லை. சாட்டிலைட் தொலைக்காட்சிகளின் தாக்குதலின் காரணமாக சினிமாவே ஆட்டம் கண்டுபோய் இருக்கிறது. ரசிகர்களின் தேவை வேறுவிதமாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கும் ரஜினிகாந்த் அர சியலுக்கு அவ்வளவு விரைவில் வந்துவிட மாட்டார் என்று நம்பலாம். ■

# இது வன்னி சென்று வந்தகதை...

**கா**ணாமல் போன படைவீரர்களின் பெற்றோர் உறவினர் சங்கம் அண்மையில் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர தேசங்களுக்குச் சென்று அந்த இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் உட்பட பலரை சந்தித்ததுடன் புலிகளின் பிடியிலிருந்த 10 சிறைக் கைதிக ளையும் விடுதலை செய்து வந்தமை யாவரும் அறிந்ததே.

இந்த வன்னிச்சுற்றுப் பயணத்திற்கு தென்னிலங்கையிலிருந்து சுமார் 1700 பெற்றோர், உறவினர்கள் கலந்துகொண்ட னர். இந்தப் பயணத்தை, நடவடிக்கையின் போது காணாமற்போன படைவீரர்களின் பெற்றோர் உறவினர் சங்கம் என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது. இந்த அமைப்பின் தலைவராக ஈ.பி.நாணயக்கார என்பவர் கடமையாற்றுகிறார்.

இவர் வன்னிக்கு கூட்டிச்சென்ற 1700 பேரையும் போதிய வசதிகள் அற்ற மடுப்பிர தேசத்தில் தவிக்கவிட்டு விட்டு ஒரு சில ரைக் கூட்டிக்கொண்டு கிளிநொச்சி சென்ற தாகவும் இந்த பயணத்தை ஒழுங்கு செய்ததில் பாரிய குறைபாடுகள் இடம் பெற்றதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமல்போன ஆயிரக்கணக்காண படைவீரர்கள் புலிகளின் பிடியில் இருப்பதாக கூறப்பட்டுவந்ததைத் தொடர்ந்து அதில் தமது பிள்ளைகளும் இருக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளும் ஆவலில் பல பெற்றோர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் இந்த பயணத்தில் இணைந்து கொண்டனர். குறிப்பிட்ட குடும்ப அங்கத்தவர்கள் வந்தால் தமது பிள்ளைகள் குறித்த விவரத்தை அறிந்துகொள்ள முடியும் என்று முன்னதாக இந்த சங்கத்தினால் பெற்றோருக்கு நம் பிக்கையூட்டப்பட்டிருக்கிறது.

இந்தப் பயணத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரிடமிருந்தும் 500 ரூபா அறவிடப்பட்டது. வன்னியிலுள்ள அகதிக ளுக்கு கொடுப்பதற்கெனக் கூறி மேலும் 500 ரூபா பெறுமதியான உணவு பொட்டலங் கள் பெற்றோரிடமிருந்து சேகரிக்கப்பட்டன. ஒரு வீட்டிலிருந்து இரண்டு பேர் வருவதா யின் அவர்களுக்குத் தேவையான உணவு பணம் என்பவற்றை எடுத்துவருமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

தமது பிள்ளைகள் குறித்த தகவல்களை அறிந்துகொள்ளும் ஆவலில் அம்பாந் தோட்டை எம்பிலிப்பிட்டிய போன்ற தூர இடங்களிலிருந்து வயதான பல பெற் றோர் இந்த வன்னி விஜயத்தில் பங்கேற் றிருந்தனர்.

கடந்த 20ம் திகதி இரவு 7 மணியளவில் அனைவரும் மடுவை சென்றடைந்தனர்.

பயணத்தை ஒழுங்கு செய்தவர்கள் மாத்திரமே கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவர்களை சந்திக்கமுடியும் என்று சங்கத்தின் தலைவர் நாணயக்கார கூறிய போது பெற்றோர்கள் பலர் தங்களுக்கும் புலிகளை சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்காத ஆத்திரத்தில் திட்டித் தீர்த்தனர்.

தங்களுக்கும் கிளிநொச்சி செல்ல அனு மதிப்பதாக கூறியதனாலேயே இந்த பயணத்தில் கலந்துகொண்டதாக பலரும் ஆத்திரத்துடன் கூறினர். இவை எதனையும் காதில் போட்டுக்கொள்ளாத நாணயக்கார அவரது மனைவி மற்றும் வேறு சில அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் வன்னி சென்றார்.

21ம் திகதி கிளிநொச்சி புலிகளின் காரியாலயத்தில் தமிழ்ச்செல்வனை சந்தித்த போது தாங்கள் சுமார் 3000 பேர் மடு வந்திருப்பதாக நாணயக்கார கூறியிருக் கிறார்.

இது பொய்யென அவரது முன்னா லேயே மற்றொரு என்.ஜி.ஓ. பெண்மணி கூறியிருக்கிறார்.

இந்தப் பயணத்தில் நடந்த மிகவும் வேடிக்கையான சம்பவம் இதன் பின்னர் தான் அரங்கேறியது.

தாங்கள் 10 சிறைக்கைதிகளை விடுதலை செய்வதாக தமிழ்ச்செல்வன் கூறியதும் அவர்களுக்கு விடுதலைப் பெற்றுக்கொடுத்த பெருமைக்கு உரிமைகோரி நாணயக்கா ரவின் மனைவியும் மேற்சொன்ன என்.ஜி.ஓ. பெண்மணியும் கை நீட்டி அடித்து கொள்ளாத குறையாக வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதனை பெரும் விரக்தி நிலையில் தமிழ்ச்செல்வனும் புலி உறுப்பினர்களும் பார்த்துக்கொண்டு நின்றனர்.

இந்த வன்னி விஜயத்தின்போது ஒரு சில சிறைக்கைதிகளேனும் விடுதலை செய்யப்படலாம் என்று முன்கூட்டியே எதிர் பார்க்கப்பட்டது. ஆனாலும் அவர்களை கிளிநொச்சியில் இருந்து மடுவரையாவது அழைத்துவர எந்தவொரு போக்குவரத்து ஒழுங்கும் பயண ஏற்பட்டாளர்களால் செய்யப்பட்டிருக்கவில்லை. கடைசியில் விடு தலையான 10 பேரும் புலிகள் வழங்கிய லொறியொன்றிலேயே மறுநாள் காலை மடுவந்து சேர்ந்தனர்.

இந்த பயண ஒழுங்குகளுக்காக பலர் நன்கொடை வழங்கியிருந்தனர். சிலிங்கோ நிறுவனத்தலைவர் லலித் கொத்தலாவல ஒரு இலட்சம் ரூபா கொடுத்திருந்தார்.

அனைத்து மக்களாலும் அனுதாபமாக நோக்கப்பட்ட காணாமல்போன படையி னரின் பெற்றோர் உறவினர் சங்கமும் ஒரு வியாபார சங்கமாக ஆகிவிட்டதா என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். ■



# ஸ்போர்ட்ஸ்

## டெஸ்ட் களமாகிறது சார்ஜா

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான எல்லைப் பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதால் பாகிஸ்தான் மே.இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகள் சார்ஜாவில் நடைபெறுகின்றன.

மே.இந்திய-பாகிஸ்தானுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் ஒன்று பாகிஸ்தானில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அண்மைக்காலமாக இந்திய பாகிஸ்தான் இடையிலான பதற்ற நிலை தீவிரமடைந்துள்ளதால் பாகிஸ்தான் வருவதற்கு, பாதுகாப்பு நிலவரங்களை காரணம் காட்டி மே.இந்திய தீவுகள் அணி தயக்கம் காட்டியது.

எனவே, போட்டிகள் தடைப்பட்டால் பெருமளவு நஷ்டம் ஏற்படும் எனக் கருதிய பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சார்ஜாவில் போட்டிகளை நடத்த விரும்பியது. இதற்கு அனைத்து தரப்பினரதும் சம்மதம் கிடைத்ததால் இரு நாடுகளுக்குமிடையேயான போட்டிகள் சார்ஜாவில் இடம்பெறுகின்றன.

எனவே, இது சார்ஜா மைதானத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியாகவும், போட்டியில் பங்கு பற்றும் எந்த நாடுகளுக்கும் சொந்தமில்லாத மைதானத்தில் நடைபெறும் 3வது டெஸ்ட் போட்டியாகவும் குறிப்பிட்ட போட்டி முக்கியம் பெறுகின்றது.

## ரசிகர்களின் தாக்குதலுக்கு இலக்கான 'ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்'



பங்களாதேஷ்-பாகிஸ்தான் அணி களுக்கிடையில் அண்மையில் டாக்காவில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியின் போது ரசிகர்களின் தாக்குதலுக்கு சொகிப் அக்தார் இலக்கானார்.

இவ் இரு நாடுகளுக்கிடையிலும் நடைபெற்று வரும் மூன்று ஆட்டங்களை கொண்ட இரண் டாவது போட்டியின் போது முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டை இழந்து 281 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் அணி சார்பாக யூசுப் யொஹனா, யூனிஸ் கான் அப்துல்ரஸாக் ஆகியோர் ஆகியோர் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 112 (ஆ.இ), 73, 43 (ஆ.இ) ஓட்டங்களைப் பெற்றனர்.

எனவே 282 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியினர் 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களை பெற்று, தமது இன்னிங்சை முடித்துக் கொண்டனர். பங்களாதேஷ் அணி சார்பாக தெனஷார் இம்ரான் 65 ஓட்டங்களையும் அல் சாஹேரியர் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சக்லைன் முஷ்தாக், சஹீட் அப்ரிடி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றி தமது அணியின் வெற்றியை உறுதிப் படுத்திக் கொடுத்தனர்.

பங்களாதேஷ் அணியினர் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது, பந்து தடுப்பில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் வீரர்கள்மீது ரசிகர்கள் கற்களை வீசி கலகம் செய்தனர். ரசிகர்களால் வீசப்பட்ட கல் ஒன்று, ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ் என்று அழைக்கப்படும் பாகிஸ்தானின் அதிவேகப் பந்துவீச்சாளர் சொகிப் அக்தாரின் தலையில் பட்டதால், அக்தார் மைதானத்தில் மயங்கி விழுந்தார்.

இதனால், ஆட்டம் அரை மணி நேரம் இடை நிறுத்தப்பட்டதுடன் அக்தார் உடனடியாக மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டார்.

பிந்திக் கிடைத்த தகவலின் படி அக்தார் தற்போது தேறி வருவதாகவும் ரசிகர் ஒருவர் டாக்கா பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூரங்கள் விட்டு...

இலக்கிய நயம்

தருவது சிற்பி

அவளது ஏமாற்றத்தின் வெளிப்பாடு முகங்களில் அந்திச் சூரியனின் சிவப்பாய் பரவிக் கிடந்தது. கரன் மெதுவாய்ப் பின்புறம் சென்று. தோள் தொட்டான். வெடுக்கென்று கையை உதறிவிட்டாள்.

"பேசமாட்டாயா"

"......."

"சரி பேசாவிட்டால் ஒன்றுமில்லை. நான் போகின்றேன்." திரும்பிச் செல்பவன் போல் பாசாங்கு செய்தான். அவள் தலை மெல்லத் திரும்பியது. "போகத்தான் போகின்றாயா?" என கண்கள் பேசின. உதடுகள் மட்டும் எதையுமே உச்சரிக்காமல் ஏதோ கட்டளையிட்டது. மனதைப் போர்த்திருந்த திரையை விலக்காது, இன்னும் பிடிவாதமாய் நின்றாள். அவன் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியிலும் நெஞ்சு இடறி

"சே! இந்த ஆம்பிளைகளே சுத்த மோசம்... எப்பதான் பெண்களின் கள்ளத்தனமான மனசைப் புரிஞ்சு கொள்ளப் போறாங்களோ" மனம் அலுத்துக் கொண்டது. போக வேண்டாம் என்பது போல் செருமல் செருமினாள். அவன் திரும்பியபோது அவளின் நெஞ்சு ஏறி இறங்கியது. காற்றின் வேகத்தில் உயரும் மேல்ச்சட்டையின் ஊடே பளீரெனத் தெரியும் இடைப்பகுதிகளை அவன் வெறிப்பது சந்தோஷம் தந்தது.

"நன்றாய்ப்பார். பார்த்து அவஸ்தைப்படு. உடம்பெங்கும் உஷ்ணமாக்கு. அந்த உஷ்ணத்தின் விளைவாய் என்னிடம் ஓடிவா. உனக்குரியவை எல்லாமே இன்னும் அப்படியே உனக்காய். ஒரு மணிக்கும் மேலாக உன்னையே எதிர்பார்த்து காத்துக்கிடக்கிறதே..."

நினைக்கும்போதே அவளுக்குள் கிளர்வுற்றது. அந்தக் கிளர்வின் அதி உச்சமாய் விறைத்துப்போன முயல்க்குட்டிகள் சிறைக்குள் இருப்பதை பார்த்தபோது அவன் மனதில் யாரோ எழுதிய அந்த ஏடாகூடாக் கவிதை நினைவில் வந்தது.

**"பெண்ணே விட்டுவிடு**
**முயல்க்குட்டிகளை**
**சிறைக்குள் அடைத்து வைப்பது**
**மிருகவதைச் சட்டப்படி**
**குற்றமாகும்"**

கவிதையை நினைத்துப் பார்த்து கொடுப்புக்குள் நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"என்ன, என்ன, என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு. போக வேண்டியதுதானே."

"போகலாம்தான். ஆனால் காலை இழுக்கிறதே"

"என்ன என்ன இழுக்கிறது"

"முயல்"

"முயலா? என்ன உளறல் ஆரம்பமாகியாச்சா. இந்தக் கடற்கரையில் எங்கேயிருக்கிறது முயல்?"

"அது இருக்கிறது. ஆனால் உனக்குத்தான் தெரியவில்லை. நான் கேள்விப்பட்டிருக்கின்றேன் சிறைபிடித்து வைத்திருப்பவர்களுக்கு தாம் பிடித்து வைத்திருப்பவர்களைப் பற்றி ஞாபகம் இருக்காது என்று" சொல்லி விட்டு அவன் கண் போன திசை கண்டபோது அவள் தலைகுனிந்தாள்.



"என்ன பேச்சையே காணவில்லை. முயலைக் கண்டு பிடித்துவிட்ட வெட்கமா, அல்லது எப்போது உன் கைகளால் விடுதலை அளிக்கப் போகின்றாய் என்று எனைக் கேட்கின்றாயா"

"விடுதலையா, யாருக்கு விடுதலை?"

"என்ன கேள்வியிது, முயலுக்குத்தான்"

"முயல், முயல்... முயல்... இதென்ன இன்றைக்கு முழுவதுமே முயல்ப் பைத்தியமாய் இருக்கு"

"இன்றைக்கு மட்டுமில்லை. என்றைக்குமேதான். ஆனால் இன்றைக்குச் சற்றுக் கூடுதலாக காற்று உதவி செய்கின்றது."

புரியாதது போல உதடு பிதுக்கினாள். கண்களைச் சொருகினாள். 'ச்' கொட்டினாள்.

"என்ன புரியவில்லையா? அனேக நேரங்களில் நாங்கள் காற்றுக்கு நன்றி சொல்வோம். உனக்குத் தெரியாதா. நீ 'குஷி' படம் பார்க்கவில்லையா?"

"பார்த்தன்."

"எதைப் பார்த்த"

"நீங்க பார்த்ததை நான் பார்த்தன்"

"நீ எதைச் சொல்கிறாய். 'குஷி' படத்தையா இல்லை ஜோதிகாவின்..."

"ம்ம்.. போதும். இதுக்கு மேல் விளக்கம் தேவையில்லை." என உறுமிக் கொண்டே அப்போதுதான் கவனிப்பவள்போல் மேல்ச் சட்டையை இழுத்து விட்டாள், இன்னும் கொஞ்சம் வேகமாய் இந்தக் காற்று வீசக்கூடாதா என ஏங்கியபடியே.

"சரி எப்படியோ நீ என்னுடன் பேசிவிட்டாய் அது போதும்." என்றவன் தன் நெஞ்சினுள் புதைந்திருந்த அவள் தலையைக் கோதிவிட்டான். திறந்திருந்த அவனின் மார்புப் பகுதியில் பரவிய அவள் விரல்களின் அசைவில் அவன் சிலிர்த்து போனான். உணர்வுப் பிரவாகத்தில் மூழ்கிப் போயிருந்த அவளுக்கு அசையாச் சாமியாய் இருக்கும் கரனைப் பார்த்ததும் கொஞ்சம் எரிச்சலாயும் வந்தது.

"என்ன முயல் என்றீர்கள், விடுதலை என்றீர்கள். இப்போது ஒன்றையுமே காணவில்லை?"

"நான் தவத்தில் லயித்திருக்கின்றேன். கலைத்து விடாதே!"

"என்னது? என்னது? இந்தக் கோலத்தில் தவமா"

"ஆம். அது உனக்குப் புரியாது. ஊரும் நண்டுகளின் நகர்வை அனுபவிக்கும் தவம். அதன் தடங்களை பத்திரப்படுத்தும் தவம்."

"முயலில் இருந்து இப்போது நண்டுக்குத் தாவியாச்சா"

என்ன செய்வது தூரத்தேயிருந்து முயல் சுண்டியிழுக்கின்றது என்றால் அருகில் வந்ததும் நண்டுகளின் நர்த்தனங்கள் இம்சைப் படுத்துகின்றது. ம்ம்ம்... இன்னும் எத்தனை பிராணிகளைத்தான் இந்தப் பிரம்மன் ஒரே கூட்டுக்குள் அடைத்து வைத்திருக்கின்றானோ...."

"பிராணிகள் மட்டுமல்ல, போதை தரும் பூக்களும் இருக்கிறது. சிலருக்குத்தான் அது கண்களுக்குப் புலப்படுவதில்லை. ம்ம்... என்ன செய்வது"

"வேண்டாம் சுபா! என்னைச் சீண்டிப் பார்க்காதே"

"சீண்டினால் என்னவாம்"

"ஒன்றுமில்லை" எனக் கூறிக்கொண்டே கோர்த்திருந்த கரங்களால் இறுக்கினான். இரு உடல்களுக்கும் இடையில் நெரிபட்டு மூச்சுத் திணறியது காற்றுக்கு. எட்ட இருந்தாலும் கிட்ட வந்தாலும் சித்தம் கலைக்கும் போதையொன்றை அவன் சுவைக்கத் தொடங்கியபோதே அவள் முகம் அந்திச் சிவப்பாய் மாறத் தொடங்கியது இன்னும் வேண்டும் வேண்டும் என்ற தவிப்போடு.

உண்டார் கள் அல்லது அடுநறாக்
-காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல்இன்று.

*(குறள் 1090)*

---

★ இந்த வருட டயறி கிடைத்ததா?

இ.ராம்சுதன்-வவுனியா.

கிடைத்தது. அதை எடுத்து வைத்துக் கொண்டு, இந்த ஆண்டு முழுவதும் எப்படியும் டயறி எழுதியே தீர்வது என்று தீர்மானித்து, முதல் பக்கத்தைத் திறந்து வைத்துக் கொண்டு யோசித்தேன். மனதில் உள்ளதை அப்பட்டமாக எழுத முடியாது. இதை யாராவது எப்போதாவது பார்ப்பார்கள் என்பது சங்கடத்தைத் தருவதாக இருந்தது. அதன் பிறகு, யாரெல்லாம் இதைப் படிக்கப் போகிறார்கள் என்று கற்பனை செய்து கொண்டு அதற்குத் தகுந்தபடி என்ன எழுதலாம் என்று சிறிது நேரம் யோசித்தேன். முடிவில், இவ்வளவு நேரத்தைச் செலவு செய்து யோசித்து ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டிருக்க முடியாது என்று முடிவைத்தேன். வழக்கம் போல இந்த வருடமும் முடிந்தபின், இதன் பக்கங்கள் Rough useக்கே கிழிபடப் போகின்றன என்பதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது.

★★★

★ அநியாயம் அழிந்து நியாயம் எப்போ பிறக்கும்?

ஜெ.லக்கி-பெரியகல்லாறு.

'அ' அழியும் போது அதாவது 'அகந்தை' அழியும்போது.

★ தமிழ்க் கூட்டமைப்பு என்ன செய்கிறது?

ம.ருத்ரா மணிவேல், செல்வகந்தை.

ஒரு கிசு கிசு. அந்த நாலுகட்சிக் கூட்டுக்குள் தன் பேச்சாலேயே உருப்படாமல் போன ஒரு முதல்வர் பேச்சாளர் பதவிக்கு, சொத்துப் பிரச்சனையால் கட்சியைச் சீர்குலைத்தார் என்று அவரது கட்சிக் காரர்களாலேயே குற்றஞ்சாட்டப்பட்டவர் பொருளாளர் பதவிக்கும் கேட்டார்களாம். "கூட்டுக்குள்ளே இருக்கிறதென்றால் இருங்கோ. இதுக்குள்ள வேற கட்சிகட்ட வெளிக்கிட்டால் நடக்கிறதே வேறு" என்று தலையடி அடித்திருக்கிறார்கள் அந்தக் கூட்டின் யாழ் முதன்மையாளரும், மட்டு. முதன்மையாளரும்.

★★★

★ இலக்கம் 7, சொர்க்கம், மேல் உலகம். இந்த முகவரி உள்ள இடத்திற்கு நீங்கள் போனதுண்டா?

சித்தாரா-புத்தளம்.

போவேன் என்ற நம்பிக்கைகூட இல்லை.

★★★

★ "நீதிக்குப் பின்பாசம்" என்பது தற்போதும் உள்ளதா?

ஏ.எஸ்.அஹமத் சிபாத், நிந்தவூர்-11.

உள்ளது. அதற்கு முன் பணம் என்பதும் சேர்த்து.

★ என் அபிமான இயக்குனர்களான கே.எஸ்.ரவிக்குமார், மணிரத்னம், ஷங்கர் இவர்களின் முகவரிகளை தயவுசெய்து தரமுடியுமா?

எல்.விக்கி, வெல்லம்பிட்டிய.

இதோ தந்தோம்! இனிமேலும் இதே முகவரிகளைக் கேட்டு தபாலட்டைகள் அனுப்பிக் கொண்டிருப்பதை விக்கி தயவு செய்து நிறுத்தி விடுங்கள்.

கே.எஸ்.ரவிக்குமார்,10, 15ஆவது குறுக்குத் தெரு, சாஸ்திரி நகர், சென்னை 600 020.

மணிரத்னம், 3, வினஸ் காலனி முதல்தெரு, சென்னை 600 018.

ஷங்கர், 8, அனுமந்த தெரு, 40 வடக்கு உஸ்மான் சாலை, சென்னை 600 017.

★★★

★ அரச ஊடகங்களில் அரசு சார்பான செய்திகள் மிகையாக வருவதைத் தவிர்ப்பதற்குக் கண்காணிப்புக்குழு அமைக்கப் பட்டிருக்கிறதே?

பி.பிரேமதாஸ், நீர்கொழும்பு.

முதலில் அரச ஊடகங்களில் கன்னாபின்னாவென அரச கட்சிக் காரர்களுக்குப் பதவிகள் வழங்குவதை நிறுத்தினால் அதுதான் சிறந்த முன்னுதாரணமாக இருக்கும்.

★★★

## சிந்தியா பதில்கள்



★ பெண்களின் உள்ளம் படுகுழி என்கிறார்களே, அது உண்மைதானா?

ஏ.எஸ்.எம்.ஹசன், வெலிப்பன்ன.

விழுந்தால் எழுப்பித் துரத்தி விடாதபடி அங்கேயே விழுந்துகிடக்க விரும்புகிறவர்கள் சொல்வது உண்மையாகத்தானிருக்கும்.

★★★

★ ரஜினி காந்தின் முகவரியைத் தருவீர்களா?

பி.கருணாகரன், பம்பலப்பிட்டி.

அட இதையெல்லாமா கேட்டுக் கொண்டிருப்பீர்கள்? ரஜினிகாந்த், சூப்பர் ஸ்டார், தமிழ்நாடு என்று போடுங்கள்.

★★★

★ சிந்தியா! அதிக அன்பு கொள்வது தப்பா?

க.சுதர்சன், செங்கலடி.

அடுத்தவரும் உங்கள்மீது அன்பு கொண்டுதானாக வேண்டும் என்று வற்புறுத்தாதவரை தப்பில்லை.

★★★

★ தமிழ் நடிகைகள் குறித்து சிந்தியாவின் அறிவாற்றலுக்கு ஒரு பரீட்சை. எங்கே யார் யாரென்று சொல்லுங்கள் பார்க்கலாம். குல்பிச் சிரிப்பு, குழிவிழும் சிரிப்பு, கொள்ளையிடும் சிரிப்பு?

ஆர்.மனோகரன், கொழும்பு-13.

லைலா, ஸ்நேகா, பூமிகா, என்ன, நான் பாஸா?

# மன்னாதி மன்னன் 91

**இராஜகுமாரன்**

## சொர்ணகாந்த ரூபியின் நிபந்தனை

இராஜ ரிஷி விஸ்வா மித்திரர் கொண்ட கோபத்தின் பயனாக நகரில் வாழும் அனைத்து உயிர்களும் அதனதன் உடல்களை விட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்று சாபமிட்டார். அதன்படி பிரிந்த உயிர்களனைத்தும் முனிவருடைய கமண்டலத்திற்குள் அடங்கிவிட்டன.

தங்கமாபுரி அரசி சொர்ணகாந்த ரூபி தன்நகரத்தின் மக்களனைவரும்



இறந்து கிடப்பதைக் கண்டாள். ஆனால் அவளை கணவனை இழந்த சோகம் வாட்டவில்லை. அரசருக்குரிய இறுதிக்கிரியைகளை செய்து முடிப்பதற்கும் மிகக் குறைந்த அளவிலேயே அரண்மனை ஊழியர்கள் இருந்தனர். அவர்களுடைய உதவியுடன் தன் கணவருக்குரிய இறுதிக் கடமைகளை முடித்தாள். இவ்வாறு இறுதிக் கடமைகள் முடிந்ததுடன் அரசி சொர்ணகாந்த ரூபியும் உயிர் துறந்தாள்.

சொர்ணகாந்த ரூபி பிரதிஷ்டாபுரி என்ற நகரத்தின் அரசன் சற்குண ராஜாவுக்கு மகளாகப் பிறந்தாள். அவளுக்கு சஞ்சீவி மடந்தை என்று பெயர் சூட்டினர் . தங்கமாபுரி அரசன் தங்கேஸ்வரன் அதே பிரதிஷ்டாபுரி நகரிலேயே ஒரு பிராமணனுக்கு மகனாகப் பிறந்தான் அவனுக்கு ஆதிசேடன் என்ற பெயர் சூட்டினர் .

சஞ்சீவி மடந்தை பருவ வயதை அடைந்ததும் அவளுக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுத்து மணம் முடித்து வைக்க மன்னன் சற்குண ராஜா திட்டமிட்டார். இத்தகவல் அறிந்த சஞ்சீவி மடந்தை நேராக மன்னரிடம் சென்று "தந்தையே எனக்குத் திருமணம் செய்வதானால் மணாளனாக வர வேண்டியவர் எனது நிபந்தனைக்கு கட்டுப்பட வேண்டும். எனக்குக் கணவனாக வர வேண்டியவர் தங்கமாபுரி சென்று அந்நகரத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தவராக இருக்க வேண்டும். அத்தகைய ஒருவரைத்தான் நான் எனது மணாளனாக ஏற்றுக் கொள்வேன். அவ்வாறு தங்கமாபுரி நகரத்திற்குச் சென்று திரும்பி வந்தவர் எவராயினும்இருப்பாரானால் நமது அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருக்கும் ஆராய்ச்சி

இறந்து போவதற்கு என்ன காரணம் என்பதை அவளுடைய கற்பு நெறியின் மேன்மையினால் உணர்ந்து கொள்கிறாள். உடனடியாக விஸ்வாமித்திரரை அணுகி அவர் கொடுத்த சாபத்தை நீக்கிவிடுமாறு பணிந்து வேண்டுகிறாள். முனிவரோ தான் கொடுத்த சாபத்தை உடனடியாக நீக்க முடியாதெனக் கூறிவிடுகிறார். ஆனால் சொர்ணகாந்த ரூபிக்கு அவள் வேண்டும் வரத்தைக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

முனிவர் கொடுத்த வாக்குறுதியை அடுத்து அரசி இவ்வாறு கோரினார். "முனிவர் பெருமானே நானும்இப்பூவுலகில் ஒரு பெண்ணாகப் பிறந்தவள் தானே! எனவே என்றாவதொரு நாள் என் உயிரும் பிரிந்து போகத்தானே வேண்டும் . ஆனால் என் கணவர் இறந்த பின் நான் மட்டும் தனியாக உயிர் வாழ முடியாது எனக்கு ஒரு மறுபிறவி இருக்குமானால் இந்த ஜென்மத்தின் நினைவு அடுத்த பிறவியிலும் இருக்க வேண்டும். அதேபோல் இப்பிறவியில் என் கணவராக வாய்த்தவரே அடுத்த பிறவியிலும் என் கணவராக அமைய வேண்டும். இந்த வரங்களுடன் மேலும் சில கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்கும் படி தங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன் அடுத்த பிறவியிலும் எனது பத்தாவது வயது முதல் தொடர்ந்து ஆறு வருடங்கள் வரை இரவு வேளைகளில் தங்கமாபுரி நகரிலுள்ள சுந்தர மூர்த்தி கோயிலுக்குச் சென்று ஆலய தரிசனம் செய்து திரும்புவதற்கேற்ற ஒரு தெய்வீகக் குதிரையையும் எனக்களிக்க வேண்டுகிறேன்." இவ்வாறு சொர்ணகாந்த ரூபி விஸ்வாமித்திர மகாரிஷியிடம் வேண்டினாள். முனிவரும் "அவ்வாறே ஆகுக" என்று வரமளித்து விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

விஸ்வாமித்திர மகாரிஷியிடம் வரம் பெற்று அரண்மனை திரும்பிய அரசி சொர்ணகாந்த ரூபி அரண்மனையில் அரசர் தங்கேஸ்வரர்




சஞ்சீவி மடந்தைக்கு பத்து வயதான போது விஸ்வாமித்திரர் கொடுத்த வரத்தின்படி முற்பிறப் பின் நினைவுகளெல்லாம் திரும்பின. அத்துடன் விஸ்வாமித்திர மகாரிஷி அளித்த வரங்களும் நினைவுக்கு வந்தன. அப்போது இருந்தே ஒவ்வொரு நாளும் இரவு வேளையில் தங்க மாபுரி ஆலயத்திற்குச் செல்ல வேண்டுமென்று நினைத்ததும் தெய்வீகக் குதிரை வந்து சேர்ந்து விடும். அதிலேறி தங்கமாபுரி சென்று சுந்தர மூர்த்திக் கோயிலில் பிரார்த்தனை முடித்து விட்டு அரண்மனை திரும்புவாள்.

மணியை வந்து அடிக்க வேண்டும். அவ்வாறு மணியை அடித்தவரை என்னிடம் அழைத்து வந்தால் அவரை நான் விசாரித்து உண்மையிலேயே அவர் தங்கமாபுரிக்குச் சென்று வந்தவரா என்பதை விசாரிப்பேன். சரியான பதிலைக் கூறியவரை எனது கணவனாக ஏற்பேன் " என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

மன்னரும் தனது அரண்மனை வாயிலில் ஓர் ஆராய்ச்சி மணியைக் கட்டி வைத்து விட்டு தங்கமாபுரியைப் போய் கண்டு திரும்பிய வராய் இருந்தால் இந்த மணியை வந்து அடிக்க வேண்டும். அவ்வாறு உண்மையிலேயே அந்த நபர் தங்கமாபுரி சென்று திரும்பியவராக இருந்தால்' அவருக்கு எனது மகள் இளவரசி சஞ்சீவி மடந்தையை மணம் முடித்து வைப்பேன். என்று நகரெங்கும் தண்டோரா போட்டு அறிவிப்புச் செய்தார்.

(மன்னன் வருவான்...)

## ஆயுதப் போராட்டத்தில் சங்கரி



அரசியல் நீரோட்டத்தில் இருந்து விலகி ஆயுதக்கலாச்சாரத்தில் நம்பிக்கை கொண்டு விட்டதாக திருவாளர் ஆனந்தசங்கரி அவர்கள் தனது கைப்பட எழுதியிருந்த அறிக்கை ஒன்றை காதிலபூ கந்த சாமியின் பிரத்தியேக 'பக்ஸ்' இலக்கத்திற்கு அனுப்பியிருந்தார். இச்செய்தி கிடைக்க பெற்றதும் உடனடியாக செயலில் இறங்கிய கந்தசாமியார் ஆனந்தசங்கரியாரை தொடர்பு கொள்ள முயற்சி மேற்கொண்ட போது அவர் யால காட்டில் இரகசிய இடமொன்றில் இருக்கும் செய்தி கிடைக்கப் பெற்றதும் உடனடியாக வழியைக் கண்டு பிடித்து அங்கு சென்றுள்ளார். யால காட்டில் இருந்து சற்றலைட் மூலம் கந்தசாமியார் முரசுக்கு பிரத்தியேகமாக அனுப்பிய நேர்காணலை இங்கே தருகிறோம்.

**கந்தசாமி**- வணக்கம்! முற்றாக மாறி விட்டீர்கள் போலிருக்கிறதே...?

**சங்கரி**- ஆம், இடம் புதிது, பொருள் புதிது எனது கையில் இருக்கும் கருவிகள் புதிது.

**கந்தசாமி**- ஏன் இப்படியான திடீர் முடிவை எடுத்தீர்கள்?

**சங்கரி**- யார் சொன்னது திடீர் முடிவு என்று 77க்கு முன்பிருந்தே தளபதி அமிர் காட்டிய முடிவு தலைவர் சிவா சொன்ன முடிவு தம்பி பிரபா செய்து காட்டிய முடிவு எனவே, நான் எடுக்கவில்லை தனி முடிவு.

**கந்தசாமி**:- அரசியல் நீரோட்டத்தில் இருக்கும் நம்மவர்களை பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

**சங்கரி**-நான் நினைக்க என்ன இருக்கிறது? அவர்கள் எல்லாம் சுயலாப அரசியல் வாதிகள், நாடி நரம்புகள் அற்ற 'மரத்தமிழர்கள்' எம்மைப் போன்ற மறத் தமிழர்களின் பெயரை சொல்லி வயிறு வளர்த் துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் தம்பி பிரபாவின் வார்த்தைகளில் சொல்வதென்றால் 'துரோகிகள்'

**கந்தசாமி**:- தற்போது முழு மூச்சாக இயங்கிக் கொண்டிருக்கும் எரிக் சொல்ஹெமின் நடவடிக்கைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**சங்கரி**- இதைப்பற்றி நான் சொல்ல என்ன இருக்கிறது. எனது இறுதி முடிவு தமிழீழம் என்பதால் தானே! இந்த தள்ளாத வயதிலும் கருவியும் கையுமாக நிற்கிறேன். 77ம் ஆண்டு எமக்கு மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக என் உயிர் உள்ளவரை நான் செயற்படமாட்டேன்.

**கந்தசாமி**:- அப்படியானால் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட அழகிய தீவில் மூவின மக்களும் சாந்தி சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ முடியும் என்று கூறியுள்ளாரே?

**சங்கரி**- இப்படி அவர் சொல்லுவார் என்று நான் கனவிலேகூட நினைத்து பார்க்கவில்லை. தம்பிக்கு விவேகம் போதாது என்று தான் சொல்ல வேண்டும்.

**கந்தசாமி**- தம்பிக்கு விவேகம் போதாது என்றால் விவேகம் உள்ள நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**சங்கரி**- ஒன்றை மட்டும் சொல்லி வைக்க விரும்புகிறேன். தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் தளபதி அமிருக்கு நேர்ந்ததுதான் சகலருக்கும் என்பதையும் ஞாபகம் வைத்துக் கொள்ளட்டும்.

**கந்தசாமி**- அண்மையில் நடந்த தேர்தலில்கூட புலிகள்தான் ஏக பிரதி நிதிகள் அவர்களுடன் பேச வேண்டும் என்ற கோஷத்துடன் தானே போட்டியிட்டீர்கள்? அப்போது உங்களுக்கு அரசியல் மீது நம்பிக்கை இருந்ததால் தானே அப்படிக் கூறினீர்கள்?

**சங்கரி**- ஆம், அப்போது யார் கண்டது இப்படி விவேகமற்ற விதத்தில் பிரபா செயற்படுவார் என்று. தம்பி காட்டில் இருந்து யுத்தம் நடத்தினால் தானே அண்ணன்மார் எங்களுக்கு அங்கே மவுசு ஏற்படும். தம்பியே நேராக அவர்களுடன் பேசினால் யார் எம்மை கணக்கிலெடுப்பார்கள்.

**கந்தசாமி**- சரி இருக்கட்டும் அரசாங்கத்துடன் பேசி தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வை காண முடியாது என்று கூறுகிறீர்களா!

**சங்கரி**- நான் அப்படிக் கூறவில்லை. ஆனால் எமது வரலாறு அப்படித் தான் சொல்கிறது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாள் முதலே எமது தலைவர்கள் பேசிப் பேசி இயலாது என்ற நிலையில் தான் எமது தளபதி அமிர் ஆயுதம் ஏந்துமாறு தம்பிமாரை தட்டி விட்டார்.

**கந்தசாமி**- தளபதி அமிர்கூட பின்னர் அரசியலுக்கு வந்து இளைஞர்களால் துரோகி எனக் குற்றச் சாட்டப்பட்டாரே?

**சங்கரி**- அங்கேயும் இளைஞர்கள் தமது விவேகமற்ற தன்மையை காட்டி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தளபதி அமிர் இளைஞர்களை ஆயுதம் ஏந்து மாறு தட்டி விட்டாரே தவிர, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் ஆயுதம் ஏந்தப்போவதாக சொல்லவில்லையே. அவரும் ஆயுதம் ஏந்தப் போவதாக நினைத்தது யார் தப்பு? தளபதி அமிரின் தப்பா? அல்லது விவேகமற்ற தம்பி மாரின் தப்பா?

**கந்தசாமி**- அப்படியானால், யாழ் மேயர் துரையப்பா போன்றோரும் தமிழீழம் காண்பதாக கூறவில்லையே. எனினும், தமிழீழத்திற்கு எதிராக அரசுடன் இணைந்து செயற்படுவதாக கூறித் தானே தம்பிமார் மூலம் அவர்களை போடச்செய்தீர்கள்..?

**சங்கரி**- (சற்றுக் கோபமாக) உங்களுக்கு யார் சொன்னது நான் அவர்களை போடச் சொன்னேன் என்று.

**கந்தசாமி**- நீங்கள் போடச்சொல்லாவிட்டாலும் நீங்களும் அப்போது களத்தில் இருந்தீர்கள் தானே?

**சங்கரி**- ஆம் நானும் இருந்தேன். ஆனால் எனது தலைவர்கள்தான் செய்ய சொன்னார்கள். அவர்களைத்தான் நீங்கள் கேட்க வேண்டும்.

**கந்தசாமி**- சரி. உங்களது இறுதி இலக்கு என்ன என்று அறியலாமா?

**சங்கரி**- இறுதியாகவும், உறுதியாகவும் சொல்கிறேன். எங்களது இறுதி இலக்கு தமிழீழம், தமிழீழம், தமிழீழம், சந்தர்ப்பம் கிடைத்தால் ரோசியுடன் பொங்கல் சாப்பிட பின்நிற்க மாட்டேன்.

"சங்கரியின் தாகம் தமிழீழ தாயகம்"


**கந்தசாமி-நன்றி வணக்கம்**



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண் ஜெயக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


கிறிஸ்தவ ஆக்கிரமிப்பு இருந்த காலத்தில் நிர்மானிக்கப்பட்டதன் காரணமாக இந்தப் பள்ளியின் உட்புற தோற்றத்தில் பண்டைய கிறிஸ்தவ கட்டடக் கலையின் அம்சங்களை காணக் கூடியதாக இருக்கிறது.

30 அடி அகலமும் 110 அடி உயரமும் கொண்ட கோபரம் முற்றிலும் தங்கத் தினால் ஆக்கப்பட்டிருக்கிறது.

# ஆரம்பம்



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
105, ...
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

இந்தப் பள்ளி வாசலைச் சுற்றிலும் இஸ்ரேலிய இராணுவம் நிலை கொண்டுள்ளது.

* முஸ்லிம்களின் வணக்கத்துக்குரிய கிப்லா (கிப்லா)வாக மக்காவில் உள்ள கஃபதுல்லா அறிவிக்கப்படும் முன்னர் பைதுல் முகத்தஸே ஆரம்பகாலக் கிப்லாவாக இருந்தது. முஸ்லிம்களிடம் இருந்து பல தசாப்தகாலம் பறிபோய் இருந்த இந்த மஸ்ஜித் கலீபா அப்துல் மலிக்கின் காலத்திலேயே மீண்டும் இஸ்லாமியரின் கைக்குக் கிடைத்தது.

↑ இஸ்லாத்தின் மிகப் பழமை வாய்ந்த வணக்கஸ்தலமான பைதுல் முகஸ்தஸின் முகப்புத் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

தற்போது இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் உள்ள ஜெரூஸலம் நகரில் அமைந்திருக்கும் இந்த மஸ்ஜித் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்துடன் பல்வேறு வகைகளில் நெருங்கிய தொடர்புடையது.

மிஹ்ராஜின்போது முகம்மது நபி (ஸல்) அவர்கள் இந்த மஸ்ஜிதில் இருந்தே வானுலகம் நோக்கி புறப்பட்டுச் சென்றதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இஸ்ரேலின் பென்கூரியன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வடமேற்காக 48 கிலோ மீட்டர் தூரத்தில் பழைய ஜெரூஸலம் நகரில் இந்தப் பள்ளிவாசல் இருக்கிறது.

688 முதல் 692 ஆம் ஆண்டுக்குற்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படும் இந்த மஸ்ஜித் காலத்துக்குக் காலம் பல கலீபா (அரசர்)க்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் முகப்புத் தோற்றம் ஆரம்பத்தில் வேறு வடிவில் காணப்பட்டதாகவும் உமர் பின் கதீப் என்ற கலீபா ஒருதரமும் அப்துல் மலிக் என்ற கலீபா மற்றொரு தரமும் இந்தப் பள்ளிவாசலின் மேற் கோபுரத்தில் பாரிய மாற்றங்களுடன் திருத்த வேலைகளைச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

உமையாக்களின் காலத்திலும் அப்பாஸியர்களின் காலத்திலும் சிறந்து விளங்கிய கட்டடக்கலை நிபுணர்களால் இந்தப் பள்ளிவாசல் அழகு படுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒரே நேரத்தில் சுமார் 3 ஆயிரம் பேருக்கு தொழுகை நடத்தக்கூடிய வசதி இருப்பதாகக் கூறப்படுகின்றது.



← முத்தையா முரளிதரன் இந்தப் பெயரை அறியாத கிரிக்கெட் ரசிகர்கள் இருக்கமாட்டார்கள். குறைந்தளவு போட்டிகளில் 400 விக்கெட்டுக்கள் என்ற கிரிக்கெட்டின் மகத்தான சாதனை ஒன்றை மிக இளவயதிலேயே எட்டிப்பிடித்த நமது முரளிதரன் தமிழ்த் தாயின் பெருமை மிகு சொத்தாகும்.

மலையகத்தின் கண்டி கட்டுகஸ்தோட்டைக் அருகில் உள்ள குண்டசாலை என்ற இடத்தில் 1972ம் ஆண்டு ஏப்ரல் 18ம் திகதி முத்தையா-லட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வனாகப் பிறந்த முதளிதரன் சிறு வயது முதலே கிரிக்கெட்டில் அதீத சூரன்.

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் தனது கல்வியை மேற்கொண்ட முரளிதரன் பாடசாலை அணியில் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக இருந்தவர். பின்னர் பயிற்றுவிப்பாளர்களின் ஆலோசனையின் பேரில் தனது பந்துவீச்சு முறையை மாற்றியமைத்து சுழல் பந்து வீச்சாளராக தன்னை வளர்த்துக்கொண்டு விரைவிலேயே பாடசாலை மட்டத்தில் பேசப்படும் ஒரு பந்து வீச்சாளராக பரிணமித்தார்.

பின்னர் கொழும்பு தமிழ் யூனியன் கிரிக்கெட் கழகத்தின் சார்பில் ஆடத்தொடங்கிய முரளி 1992ல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கொழும்பில் நடைபெற்ற போட்டியில் தனது முதலாவது டெஸ்ட் விக்கெட்டை கைப்பற்றினார்.

# சாதனைத் தமிழன்

↑ அதன் பின்னர் கிரிக்கெட் உலகில் முரளி நிகழ்த்திய சாதனைகளை தமது ரசிகர்கள் பெரும்பாலும் அறிந்திருப்பார்கள்.

முரளிதரன் நான்கு சகோதரர்களுடன் பிறந்தவர். தற்போது தனது 29 வயதைக் கடந்திருக்கும் முரளி இன்னும் இரண்டு வருடங்களின் பின்னர் அல்லது 600 டெஸ்ட் விக்கெட்டுக்கள் என்ற இலக்கை அடைந்த பின்னரே திருமணம் செய்துகொள்ள எண்ணியிருப்பதாக அவரது தந்தையும் பிரபல தொழிலதிபருமான கே.சீ. முத்தையா மூரகக்குத் தெரிவித்தார்.

முரளியின் எதிர்கால மனைவி தெரிவு செய்யப்பட்டுவிட்டாரா? என்று கேட்டபோது அதுகுறித்து இன்னும் முடிவாகவில்லை என்று கூறிய அவர், பெரும்பாலும் உறவுக்காரப் பெண்ணொருவரையே முரளி திருமணம் செய்யலாம் என்று கூறினார்.

முரளிக்கு தற்போது தமிழ் நாட்டுடன் அதிக தொடர்புகள் ஏற்பட்டுள்ளது குறித்து கேட்டபோது அது விளையாட்டோடு சம்பந்தப்பட்ட விடயம் என்றும் அப்படி வெளிநாட்டில் முரளி திருமணம் செய்யமாட்டார் என்றும் கூறுகிறார் திரு. முத்தையா.

முரளிதரன் கிரிக்கெட் உலகில் மேலும் பல சாதனைகளை எட்டிப் பிடித்து தமிழுக்குப் பெருமை சேர்க்க வாழ்த்துக்கள்.

## 3வது பிறந்தநாள் வாழ்த்து (28.01.2002)



செல்வன் காவியன் (கஜா)

சற்பாதஞைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயச்சந்திரன்-நிரூபா தம்பதிகளின் செல்வப் புதல்வன் காவியன் (கஜா) தனது மூன்றாவது பிறந்ததினத்தை 28-01-2002 அன்று இங்கிலாந்து போமிங்காமிலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

குழந்தை காவியனை பாசமுள்ள அப்பா-அம்மா, அன்புத் தங்கைகளான இலக்கியா, அகல்யா(லண்டன்), பப்பா-அம்மம்மா(லண்டன்), சித்தப்பா-சித்தி(லண்டன்), பெரியமாமா-பெரியமாமி(லண்டன்), சின்னமாமா-சின்னமாமி(லண்டன்), வன்னியிலிருக்கும் பெரியப்பா-பெரியம்மா, மதி அக்கா, சின்னபெரியப்பா, வன்னி மாமா-அத்தை, விதுமச்சான், காண் அண்ணா, யத்தனை பெரியப்பா-பெரியம்மா, திவ்யா அண்ணா, வெள்ளவத்தை சின்ன அம்மப்பா, மணி அம்மம்மா, தீபன் சித்தா, லண்டன் குட்டிச் சித்தப்பா, அரு அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை காவியனை பறாளாய் விநாயகர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திருமதி அ.நீலவேணி-வத்தனை

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 03.02.2002



துப்பிளான் தெற்கைச் சேர்ந்த ஜெயக்குமார் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கௌசினி தம்பதிகளின் அன்புச் செல்வன் அஹிஷன் தனது முதலாவது பிறந்த நாளை 03.02.2002 அன்று சுவிஸ் Badenனிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, துப்பிளானிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, பூட்டி, மாமா, மாமி, திருப்பான்மச்சான், மச்சாள் ஜீவிதா, திருஷன் மச்சான் மற்றும் லண்டனிலுள்ள தாத்தா,

### செல்வன் அஹிஷன்

அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார்களான நிவேதா, நிந்துஷா, மேதினி, சிநேகா, அண்ணாமார்களான நிதுர்ஷன், நிலுக்ஷன், மச்சான்மார்களான சாருஷன், சிந்துஷன், ஆருஷன், அண்ணா ரேணுஷன், அக்கா ஜஸ்வினி, தங்கை ஜஷ்மிதா, மற்றும் சுவிஸிலுள்ள பெரியப்பா, பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள் சுரேனியா, மச்சான் சாஜிதன், அக்காமார்களான துரணிகா, கார்த்திகா, கீர்த்திகா, ஜனுஷியா, தங்கை சாருணியா மற்றும் ஞானமாமா, அன்ரி, திஷாணக்கா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் துப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் அருள்பெற்று சீரும் சிறப்புமாக வாழக வாழகவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா-அம்மா, திரு.திருமதி ஜெயக்குமார் (சாந்தன்) சுவிஸ்.




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் பெப்.03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.